மார்ச் 13 – 19, 2005
March 13 - 19, 2005

16.00 பக்கங்கள் 24 + 2

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI

வார மலர்





## யாழ் மண்ணை உலுக்கிய கோரச் சம்பவம்





## ஜே.வி.பியின் கபடத்தனம்

## கிழக்கில் நிலைமை மோசம்

## பொதுகட்டமைப்பு பற்றிய கதை முடிகிறது?

# பொதுக் கட்டமைப்பு பற்றிய கதை முடிகிறது?

கடல் அனர்த்த புனர்நிர்மாணப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தும் திட்டம் காலாவதியாகிக் கொண்டிருக்கின்றது. இன்னும் சிறிது காலத்தில் அதுபற்றிய பேச்சுக்கள், கதைகள் கிட்டத்தட்டச் செயலிழந்து விடும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

கடல் பேரனர்த்தம் ஏற்பட்டு அது வடக்கு – கிழக்கைப் பாரிய அளவில் துவம்சம் செய்துவிட்டிருந்தது. இதையடுத்து சர்வதேசத்தின் கரிசனையும், முயற்சியும் காரணமாக விடுதலைப்புலிகளுடன் இணைந்து அரசு பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தி அதனூடாகப் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப்பகுதிகளுக்கான சர்வதேச நிதியுதவிகளையும், நிவாரண நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமுகமாக பேச்சுக்கள் இடம் பெற்று வந்தன. கடல் பேரனர்த்தம் ஏற்பட்டு இரண்டரை மாதங்கள் வரை ஆகியும் உரிய திட்டங்களும், செயற்பாடுகளுமின்றிப் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை மீளமைக்கும் எவ்விதமான முயற்சிகளும் வடக்கு – கிழக்கில் மேற்கொள்ளப்படவில்லை.

அரசுக்கும் – புலிகளுக்கும் இடையில் நோர்வே அனுசரணையாளர்கள் தீவிர முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அவை சாத்தியப்படாமலே உள்ளதுடன் வடக்கு – கிழக்கின் களநிலமை மோசமாகி வருவதையும் அவதானிக்கும்போது பொதுக் கட்டமைப்புத் திட்டம் செயலிழக்கும் சாத்தியம் அதிகமாகவே காணப்படுகின்றது.

அரசுக்குள் பங்காளிகளாய் இருக்கும் ஜே.வி.பி. பொதுக்கட்டமைப்புப் பற்றியோ, இடைக்கால நிர்வாகம் பற்றியோ புலிகளுடன் பேசக்கூடாது எனவும் அப்படிப் பேசினால் அரசுக்கு நெருக்கடியைக் கொடுப்போம் என்ற வகையிலும் பகிரங்கமாகவே பேசிவருகின்றது. இதைப்பற்றி ஜனாதிபதி தரப்போ அவர் கட்சி சார்ந்தவர்களோ வாய்திறக்காமல் இருப்பதுடன் அனுரா பண்டாரநாயக்கா போன்றவர்கள் ஜே.வி.பியின் நடவடிக்கைகளை ஆதரித்துப் பேசிவருகின்றனர்.

### அரசின் நாடகம்

உண்மையில் அரசுக்குக்கூட, பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தி புலிகளுடன் இணைந்து செயற்படுவதில் அக்கறையும் இல்லை, விருப்பமும் இல்லை என்பதுடன் ஜே.வி.பி எதிர்ப்பதாகவும் பசாங்கு காட்டுகின்றது.

இதையே அண்மையில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் பின்வருமாறு தெரிவித்தார்.

''ஜே.வி.பி ஒத்துவரவில்லை என்பதால் இவர்களுக்குள் முரண்பாடு உருவாகிறது வெளிப்படையாகத் தெரிகிறது. ஆனால் அதில் எவ்வித உண்மையும் இல்லை. அவர்கள் பதவிகளைப் பிடிப்பதற்கான போட்டிகளில் உள்ளமுரண்பாடுகள் தான் தீவிரமடைந்திருக்கின்றன. ஆனால் வெளிப்படையாகக் காட்டிக்கொள்வது தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை கொண்டுவருவதை ஜே.வி.பி எதிர்ப்பதுபோலவும் காட்டப்படுகிறது. உண்மையில் நிச்சயமாக வெளிப்பார்வைக்கு காட்டப்படுகின்ற ஒரு மாயத் தோற்றப்பாடே அது'' என்று மிகவும் தெளிவாக வெளிப்படுத்தினார்.

உண்மை என்ன என்பதை சர்வதேசம் புரிந்து கொள்ள ஆரம்பித்துள்ளது. இதன் வெளிப்பாடுதான் உறுதியளித்த நிதியுதவிகளை முழுமையாக வழங்காமல் இருக்கின்றமையாகும். இது அரசுக்குள் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாகவே தெரிகிறது.

### நிதி உதவி நிலைமை

1.8 பில்லியன் டொலர்கள் நிதியுதவியை வழங்க சர்வதேசம் இணங்கியிருக்கின்ற போதிலும் இதுவரை 75 மில்லியன் டொலர்கள் மட்டுமே கிடைத்திருப்பதாக நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர தெரிவித்தார்.

வடக்கு – கிழக்கு புனரமைப்பு தொடர்பாக உருவாக்கப்படவிருந்த பொதுக்கட்டமைப்பு திட்டத்தை ஜே.வி.பியின் கடும் எதிர்ப்புக் காரணமாக அரசு கைவிடத்தீர்மானித்திருப்பதால் சர்வதேச உதவிகள் தடைப்படும் அபாயம் இருப்பதாக அவர் கருத்து வெளியிட்டிருந்தார். சர்வதேச உதவியை குறிவைத்தே பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்துவது பற்றிய நாடகத்தை அரசு நடத்தியது. அதுவும் நெருக்கடியில் இருப்பதால் அரசுக்குள் பலத்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் மீள்கட்டுமானத்துக்கும் அதன் பொருளாதார மீளமைவுக்கும் சர்வதேச நிதியுதவி தவிர்க்கமுடியாதது. அதை இழக்கும் நிலை சிங்கள பௌத்த மேலாண்மைவாதச் சிந்தனைகள் காரணமாக ஏற்பட்டுள்ளது. தென்னிலங்கையில் மீண்டும் என்றுமில்லாத இனவாதக் கூச்சல்கள் அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்றன. விடுதலைப்புலிகளுக்கும் தமிழ்மக்களுக்கும் மட்டுமல்லாது சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளை 'வெள்ளைப்புலிகள்' என முத்திரை குத்தும் நடவடிக்கையும் ஆரம்பமாகியுள்ளது. இது போர்க்காலத்தில் அப்பாவித் தமிழ்மக்களுக்குப் புலி முத்திரை குத்தும் நடவடிக்கைக்கு நிகரானது.

பொதுக்கூட்டமைப்பு ஏற்படுத்தும் விடயத்தில் இரண்டு தடைகள் காணப்படுகின்றன. ஒன்று சிங்கள இனவாதப்பேச்சு. மற்றது வடக்கு – கிழக்கு களநிலைமைகளின் மாற்றம். இவற்றை உற்று நோக்கினால் இரண்டும் ஒன்றோடொன்று தொடர்பு பட்டவைபோலவே காணப்படுகின்றன. இவற்றில் மாற்றங்கள் நிகழாதவரை பொதுக்கட்டமைப்பு என்பதோ அல்லது அதனை ஒத்த பேச்சுக்களோ நடைபெறுவது சாத்திய மில்லை என்பதுடன் மீண்டும் ஒரு 'போர்க் காலத்தை நோக்கி நாடு மெல்ல நகர ஆரம்பித்துவிட்டது.

### ஐரோப்பிய பயணம்

இந்த நெருக்கடியான நிலையில் உண்மையான தென்னிலங்கையின் பிரச்சினைகளை எடுத்துக் கூறும் நோக்கில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு ஐரோப்பிய விஜயம் ஒன்றை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதில் உள்ள உண்மையினை – தெளிவான விளக்கங்களை – சர்வதேசத்துக்குக் கூறி, தமிழ்தேசியத்தின் நியாயப்பாட்டை வெளிப்படுத்தவே இப்பயணம் அமையும் என எதிர்பார்க்கப்படுவதுடன் அவர்களின் விஜயத்தின் முடிவு ஒன்றில் பேச்சை நோக்கியோ அல்லது போரை நோக்கியோ செல்லும் எனவும் இரண்டில் ஒரு தீர்க்கமான முடிவைப் புலிகளின் தலைமை எடுக்கும் எனவும் நம்பகரமாகத் தெரியவருகிறது.

**-பிங்கலன்-**

பொதுக்கட்டமைப்பு பற்றிய திட்டம் பெரிய அளவில் சாத்தியம் போல் தெரியவில்லை. ஒரு பாரிய அரசியல் மாற்றத்தின் மூலமோ அல்லது சர்வதேசத்தின் கடுமையான அழுத்தத்தின் மூலமோதான் சாத்தியப்படும். எனினும் அதற்குள் பல விடயங்கள் கையை மீறி போய்விடக் கூடும்.

# காங்கிரஸைப் பணியவைத்த தி.மு.க. மிகோரில் லல்லு சகாப்தம் முடிவு!

மத்தியில் கூட்டாட்சி அரசுகளே 10 வருடங்களாக பதவியில் இருப்பது போல மாநிலத்திலும் இது கூட்டாட்சியுகம். எனவே வரும் சட்டமன்ற தேர்தலுக்குப் பின் தமிழகத்தில் தி.மு.க தலைமையில்



ஜெயலலிதா

கூட்டணி அரசுதான் அமையவேண்டும் என்ற காங்கிரஸின் மத்திய அமைச்சர் இளங்கோவனது ஆசையை தி.மு.க. முளையிலேயே கிள்ளி எறிந்து விட்டது.

இளங்கோவன் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற தி.மு.கவின் மிரட்டலைக் கண்டு நடுநடுங்கிப் போன காங்கிரஸ் தலைமைப்பீடம் அப்படி எல்லாம் ஆட்சிப்பங்கு எங்களுக்கு வேண்டாம் என்று சொல்லி தி.மு.கவைச் சமாதானம் செய்துள்ளது. தி.மு.கவும் சரி, போகட்டும் என்று விட்டுவிட்டது. இவ்வளவுடன் இந்த விடயம் எங்கே ஊதிப் பெருக்காதா என்று ஆதங்கப்பட்ட ஜெயலலிதாவுக்கு சற்று ஏமாற்றம்தான்.

ஆனால், இங்கே நோக்கவேண்டியது என்னவெனில் 1998இலும் 1999இலும் பி.ஜே.பி., அ.தி.மு.கவுடனும் தி.மு.கவுடனும் அரசமைத்தபோதும் இக்கட்சிகள் பி.ஜே.பியிடம் கோரிக்கைகள் வைத்தன. மிரட்டிப்பார்த்தன. ஆனால், பி.ஜே.பி.சற்றும் அசரவேயில்லை. தி.மு.க. அரசை பதவி நீக்கவேண்டுமென 1998இல் ஜெயலலிதா வாஜ்பாயை மிரட்டினார். ஆனால், நடக்கவில்லை. காவிரிநீர்ப்பிரச்சினையிலும் மிரட்டிப்பார்த்தார்கள். வாஜ்பாய் கண்டுகொள்ளவேயில்லை.

இதுவும் போதாதென்று தி.மு.கவை எடுத்தெறிந்து 1999 - 2004 காலப்பகுதியில் பி.ஜே.பியினர் நடந்து கொண்டனர். அக்காலப்பகுதியில் தி.மு.கவின் 17 எம்.பிக்கள் வாஜ்பாய் அரசை விட்டு விலகினாலும் பி.ஜே.பிக்கு அதன் கூட்டணியில் 283 எம்.பிக்கள் இருந்தனர். இது காரணமாகவும் பி.ஜே.பியினர் தி.மு.கவைக் குறித்து அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை.

ஆனால் இப்போது தி.மு.கவின் 17 எம்.பிக்கள் விலகினால் மத்தியில் காங்கிரஸ் அரசின் பலம் 259 ஆகக் குறைந்துவிடும். இந்த எண்கணிதம் காங்கிரஸ் தலைவி சோனியாவுக்கு நன்றாகப் புரிந்திருக்கிறது என்பதையே தி.மு.கவிடம் அவர் பயந்து போனது காட்டுகிறது.

இவ்வாறு காங்கிரஸை அடக்கும் வலு உள்ள தி.மு.க இதே வலுவைக் காவிரிப் பிரச்சினையிலும் பாவிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர் தமிழக நலன் விரும்பிகள்.

ஆனால் தமிழகத்தில் ஆட்சியில் காங்கிரஸுக்கு பங்கு கொடுப்பது என்பது தி.மு.கவின் அடிமடியில் கைவைப்பது போல, மறுபுறம் காவிரிப் பிரச்சினை என்பது தமிழக மக்களுக்குத்தானே; தி.மு.க கட்சிக்கு காவிரி நீர் வந்தாலென்ன வராது போனாலென்ன! இந்த சுயநல, குடும்பநல அரசியல் தி.மு.க தலைவர் கருணாநிதிக்கு இரத்தத்தில் ஊறியது.

இத்தகைய தவறுகளால் தான் அவர் 1973இல் எம்.ஜி ஆரை எடுத்தெறிந்தார். அதன் பலனாக பத்து ஆண்டுகள் ஆட்சிப்பக்கம் எட்டிப்பார்க்க முடியவில்லை. 2001 இல் வைகோவை எட்டி உதைக்கப் போய் 5 ஆண்டுகள் ஜெயலலிதாவிடம் ஆட்சியைக் கொடுத்தார். இவ்வாறு காவிரிப்பிரச்சினையிலும் சுயநல அரசியல் நடத்துவது தமிழக மக்களிடம் வெகுகாலத்துக்கு எடுபடாது.

இது இவ்வாறிருக்கக் காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி விடுதலைச் சிறுத்தைகள் தலைமையில் மூன்றாவது அணி உருவாகும் என்று சுப்பிரமணிய சுவாமி ஒரு புதிய குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார்.

இளங்கோவனுடன் தி.மு.க. முரண்பட்ட காலப்பகுதியில் இந்த அறிக்கை வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

**-எஸ்.சுரேந்திரஜித்-**

இந்திய அரசியலில் நாரதர் எனப்படும் சுப்பிரமணிய சுவாமி சமீபகாலமாக செல்லாக்காசாக இருந்து வருகிறார். 1999 இல் பி.ஜே.பியை கவிழ்க்க ஜெயலலிதாவைத் தூண்டிய சுவாமி அதன்பின்பு காங்கிரஸ் அரசமைக்கவும் உதவ முயன்றார். அது நடவாமல் போகவே மீண்டும் தேர்தல் வந்து பி.ஜே.பி ஆட்சியைப் பிடித்தது. இதனால் பி.ஜே.பி – ஜெயலலிதா இருவராலும் சுவாமி ஒதுக்கப்பட்டார். தேர்தலில் தன்னைப் போட்டியிடவிடாததால் சோனியாவிடமும் கோபமுற்ற சுவாமி கடந்த தேர்தலில் சோனியா இத்தாலியர் எனக் கடுமையாக பிரசாரம் செய்து மதுரை



சோனியா

தொகுதியில் தனித்து போட்டியிட்டு தோல்வி கண்டார். இப்போது சோனியாவையும் அவர் நெருங்கமுடியாது.

1991 இல் தி.மு.க அரசை புலி ஆதரவு அரசு எனக்கூறி பதவிநீக்கம் செய்ததன் பின்னணியில் இருந்ததால் சுவாமியை தி.மு.க. ஒருபோதும் சேர்க்காது. இதனால் தனது சித்து விளையாட்டுக்கள் மூலம் தி.மு.க அணியை பிரிந்து காங்கிரஸ், பா.ம.க. விடுதலை சிறுத்தைகளைக் கொண்ட மூன்றாவது அணி அமைக்கலாம் என்ற நப்பாசை தி.மு.கவிடம் காங்கிரஸ் பணிந்துபோய்விட்ட பின்னணியில் புஸ்வாணமாகிவிட்டது.

(23ஆம் பக்கம் பார்க்க)

# ஜே.வி.பியின் கபடத்தனம்

இலங்கையில் இன்று உச்சக் கட்டத்தை அடைந்து இருக்கும் இனப்பிரச்சினைக்கு பிரதானமான காரணங்களில் ஒன்றாக, தமிழர் தாயகப் பகுதிகளில் இடம்பெற்ற சிங்களக் குடியேற்றங்கள் அன்றிலிருந்து இன்று வரை இருந்து வருகின்றன.


காலங்காலமாக பல அரசியல் கட்சிகள் தமது அரசியல் லாபத்தை ஈட்டுவதற்கும், சிங்கள மக்களுக்கு தாம் ஏதாவது செய்கிறோம் என காட்டுவதற்கும் இத்தகைய நடவடிக்கைகளை ஒரு கருவியாகப் பயன்படுத்தி வருவது அனைவரும் அறிந்ததே.

அந்த முறையிலேயே தற்போது ஜே.வி.பியினர் திருமலையில் ஏற்படுத்த முயன்ற சிங்களக் குடியேற்ற முயற்சியும் இடம்பெறுகிறது.

திருகோணமலை நகரத்தில் பஸ் நிலையம், மணிக்கூட்டுக் கோபுரம், மீன்சந்தை ஆகியவற்றுக்கு பக்கத்தில் நகரசபைக்குச் சொந்தமான காணிகளில் சட்டவிரோதமாக சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்காக இரவோடு இரவாக திருமலை நகரின் மத்தியில் காளி கோவிலுக்கும் மக்கெய்சர் விளையாட்டு அரங்கிற்கும் இடைப்பட்ட பகுதியில் காணிகளை துப்புரவு செய்து அங்கு குடியேற்றங்களை அமைப்பதற்காக மரம், கட்டடப்பொருட்கள், மற்றும் தளபாடங்களை கொண்டு வந்து ஜே.வி.பி யினர் இறக்கி இருந்தனர்.

இதை அறிந்த திருமலை நகர தமிழ் மக்களும், இளைஞர்களும் இந்த அத்துமீறல் குடியேற்ற முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து அன்று காலையில் இப்பகுதிக்கு செல்லும் அனைத்து வீதிகளையும் தடைபோட்டு மறித்ததுடன் தீவிர எதிர்ப்பு நடவடிக்கையிலும் இறங்கினர்.

ஜே.வி.பி யினரின் அத்து மீறிய செயலைக் கண்டித்து திருகோணமலை நகர தமிழ் மக்கள் உடனடியாக கடைகள், நிறுவனங்களை இழுத்து மூடியதுடன் பாடசாலைகளையும் பகிஷ்கரிப்பு செய்தனர். இதனால் இயல்புநிலை முற்றாக பாதிக்கப்பட்டது.



இப் பகுதியில் ஏற்கனவே சட்டவிரோதமாக குடியேறி ஆழிப்பேரலை அனர்த்தத்தால் குடிசைகளை இழந்த சிங்கள மக்களுக்கு ஏற்கனவே மகிந்தபுர, லவ்லேன், 4ஆம்கட்டை ஆகிய இடங்களில் அரச காணிகள் அடையாளங் காணப்பட்டு அங்கு வீடுகளை அமைப்பதற்கான சகல அரச உதவிகளும் அரசாங்க அதிபர் ஊடாக வழங்கப்பட்டுள்ளன என்பதும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

இலங்கைத்தீவில் சாமாதானத்தை ஏற்படுத்தி நிரந்தர அமைதி ஏற்படவைப்பதற்கு பிரதான முட்டுக்கட்டை போட்டுக் கொண்டு சமாதான நடவடிக்கைகளைக் குழப்பி தாம் அரசியல் சுயலாபத்தை ஈட்டுவதற்காகவே தொடர்ந்து செயற்படுகிறது ஜே.வி.பி.

அதன் உச்சக்கட்டமே தமிழர் தாயகப்பகுதியின் தலைநகரமான திருமலை நகரில் சிங்கள மக்களை குடியமர்த்த ஜே.வி.பி. மேற்கொண்ட நடவடிக்கை ஆகும்.

சுனாமி அனர்த்தமானது இன, மத, பேதமின்றிச் சேதத்தையும் அழிவையும் ஏற்படுத்திய போதும் அரச ஆட்சியாளர்களோ அன்றிப் பேரினவாத சக்திகளோ தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அழிவுகள் குறித்தோ அன்றி அவர்களின் துன்பங்கள் பற்றியோ அக்கறை கொண்டதாக இல்லை. மாறாக தமது அரசியல் லாபம் தேடவும் மக்களின் சேவகர்கள் போல தம்மைக் காட்டிக்கொள்ளவுமே முனைகின்றனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு உதவுவது என்ற போர்வையில் மீண்டும் ஓர் தமிழ் — சிங்கள இனக்கலவரத்தை தூண்டி விடுவதாகவே ஜே.வி.பி யின் செயற்பாடு அமைந்துள்ளது.

திருமலை நகரப்பகுதியில், பெரும்பான்மை இனத்தவராகிய சிங்கள மக்களை குடியேற்ற வேறு அரச காணிகள் வழங்கப்பட்டபோதிலும் அவர்களை குடியமர்த்த தான் முயல்வது போன்ற ஓர் நாடகத்தை சிங்கள மக்கள் மத்தியில் ஆடி தன்னுடைய அரசியல் ஆதாயங்களை பெறவே இச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் அரசாங்கமும் சரி, பேரினவாத சக்திகளும் சரி சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பகுதிகளை கட்டியெழுப்பவோ, மக்களின் பாதிப்புக்களை நிவர்த்தி செய்யவோ எவ்வித நடவடிக்கையும் எடுக்காது, சுனாமி கடும் பாதிப்புகளை ஏற்படுத்திய திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களில் கூட தனது அரசியல் விளையாட்டுகளை ஆட ஆரம்பித்துள்ளன. குறிப்பாக 'சுனாமி' அனர்த்தத்தை ஜே.வி.பி போன்று வேறு எவரும் அரசியல் ஆக்கவில்லை. உலக நாடுகள் அளித்த சுனாமி நிவாரணப் பொருட்கள் தமிழர் தாயகப் பகுதிகளை வந்தடைவதற்கு பெரும் இடையூறை ஏற்படுத்திக் கொண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு தான் உதவுவது போல கபட நாடகம் ஆடுகின்றது ஜே.வி.பி.

**-அனல்வேந்தன்-**

இத்தகைய செயற்பாடுகளை மேற்கொண்டு சுனாமி அனர்த்தத்தை பயன்படுத்தி தமிழர் தாயகப் பகுதியில் ஒரு பகுதியையாயினும் கைப்பற்ற முற்பட்டுள்ள ஜே.வி.பியின் இம் முயற்சியானது யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு மட்டுமல்ல சமாதான முயற்சிகளுக்கும் குந்தகம் விளைவிக்கத்தக்கதாகும்.

---


## NATIONAL CHILD PROTECTION AUTHORITY

NO. 330, Thalawathugoda Road, Madiwela, Sri Jayawaradenapura, Sri Lanka.
Telephone: 94-2778911-14, Fax: 94-2778915, E.mail: ncpa@childprotecrion.gov.lk
Website: http:/www.childprotection.gov.lk

unicef


## சிறுவர் உரிமை என்றால் என்ன?

a) சிறுவர்களுக்கும் பெரியவர்களைப் போலவே பாதுகாக்கப்பட வேண்டிய உரிமைகள் உள்ளன. அனைத்து சிறுவர்களும் தமது உரிமைகள் குறித்து அறிந்துவைத்திருத்தல் வேண்டும். இந்த உரிமைகளை நாம் 'சிறுவர் உரிமை' என்று கூறுகின்றோம்.

b) சிறுவர் உரிமை குறித்துப் பேசும் போது முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியது ஐ.நாவின் சிறுவர் உரிமை குறித்த (சுற்று நிருபம்) அறிக்கைஆகும். இது 1986 நவம்பர் 20 ஆம் திகதி வெளியிடப்பட்டது உலகில் உள்ள அனைத்து இடங்களிலும் சிறுவர்களுக்குச் சொந்தமான மனித உரிமைகள் குறித்து அந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது. அந்தச் சுற்று நிருபத்தில் சரத்துக்கள் பல உண்டு. (கிட்டத்தட்ட 50 இருக்கிறது) அதில் 30 உரிமைகள் சிறுவர்களுக்குப் பிரயோசமானவை.

c) 1989 நவம்பர் மாதம் 20 ஆம் திகதி ஐ.நா.சபையின் உயர்மட்டக் குழுவினால் இந்தச் சிறுவர் உரிமைகள் அனுமதிக்கப்பட்டன. 187 நாடுகள் இந்தச் சுற்றுநிருபத்தில் கைச்சாத்திட்டு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன. ஆனாலும் சோமாலியா மற்றும் ஐக்கிய அமெரிக்க ஆகிய நாடுகள் மட்டும் சுற்று நிருபத்திற்கு ஆதரவு வழங்கவில்லை.

d) இலங்கையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை 12 ஆம் திகதி சிறுவர் உரிமை குறித்து ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தனது சுற்றுநிருபத்தில் ஆதரவு கையெழுத்தைப் பெற்றுக்கொண்டது. இதன் மூலம் எமது நாடும் சிறுவர்களின் பாதுகாப்பு, உரிமைகளை நிலைநிறுத்தும் வகையில் செயற்படவேண்டிய கட்டாயத்தில் உள்ளது. சிறுவர் உரிமை குறித்து இலங்கையிலுள்ள சுற்று நிருபத்திற்கும், சர்வதேச சுற்றுநிருபத்திற்கும் நிறைய ஒற்றுமைகள் உள்ளன. சர்வதேச சுற்றுநிருபத்தின் மூலமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்துகள் பல தேசிய சுற்று நிருபத்திலேயும் உள்ளடக்கப்பட்டுள்ளன. உலக நாடுகள் இந்த அறிக்கையில் கையெழுத்திடும் சந்தர்ப்பத்தில், நாட்டில் சிறுவர் தொடர்பாக உள்ள நீதி நிலைமைகள் குறித்து மறுபரிசீலனை செய்வதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. சட்டங்களை மாற்றியமைக்கவும், புதிய சட்டங்களை உருவாக்கும் தேவையும் ஏற்படலாம்.

e) இந்தச் சிறுவர் உரிமை தொடர்பான ஒப்பந்தத்தை நிலை நிறுத்துவதற்கு ஐ.நா.சிறுவர் உரிமை குறித்த. பிரதான உரிமை குறித்த ஆராய்ச்சியில் 4 பிரதான பிரிவுகளைக் காணக்கூடியதாக உள்ளது.

1. உயிர் வாழும் உரிமை:- உணவு, உடை, உறைவிடம், சமயம் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளல்
2. வளர்ச்சியடையும் உரிமை :- சிறுவர்களுக்குக் கல்விகற்கும் உரிமை, சுகாதாரம், போஷனை, உளரீதியான வளர்ச்சி ஆகிய உரிமைகள்.
3. பாதுகாப்புப் பெறும் உரிமை:- சிறுவர்கள் மூலமாக பலன் பெறுவோரிடம் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளல், அடித்தல், பாலியல் துஷ்பிரயோகம், யுத்தம் என்பவற்றிற்கு பயன்படுத்துவதில் மீளல்.
4. இயல்பாக வாழும் உரிமை :- தனது எதிர்காலம், வாழ்க்கை ஆகியவற்றைக் குறித்துத் தானே தீர்மானிக்கும் உரிமை, கருத்துக் கூறும் உரிமை ஆகியவை.

f) மேற்கூறப்பட்ட காரணங்களில் விசேட விதமாக 'வளர்ச்சி அடைதல் உரிமை' சிறுவர்களுக்குக் கிடைப்பதில்லை. இன்றைய சூழ்நிலையில் கல்விக்காக உள்ள போட்டி நிலைமை சிறுவர் வளர்ச்சியடைவதற்கு தேவையான விளையாட்டு, சந்தோஷமாக பொழுதைக் கழித்தல் என்பவற்றுக்கான காலநேரம் இல்லை, கல்வியை மட்டும் பெற்றுக் கொடுப்பதற்கான உரிமையை பெற்றுக்கொடுக்க முயலுகின்றவேளை ஏனைய அனைத்து உரிமைகளும் சிதைக்கப்படுகின்றன.

g) அதேபோல் 'பாதுகாத்துக் கொள்ளல் உரிமைகள்' சிறுவர்களுக்கு கிடைப்பது மிகக் குறைவு. அநேக சிறுவர்களுக்கு அடித்தல், சித்திரவதை செய்தல், தவறான வழிகளில் சிறுவர்களை பயன்படுத்துதல் போன்றவற்றைக் காணக்கூடியதாக உள்ளது. இலங்கையில் சிறுவர் உரிமைகள் குறித்த அறிக்கை சட்டமாக்கப்படவில்லை என்ற போதிலும் எதிர்காலத்தில் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

h) சிறுவர் உரிமை குறித்துப் பேசும் போது சிறுவர்களால் நிறைவேற்றப்பட வேண்டிய கொள்கைகள் குறித்தும் சிறுவர்களுக்கு அறிவூட்டுதல் அவசியம்.

i) சிறுவர்களுக்கு தங்களது உரிமைகளைப் பாதுகாப்பது மட்டும் கடமையல்ல. மற்றவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியதும் முக்கிய கடமையாகும். விசேட விதமாகத் தமது தாய், தந்தையுடைய உரிமைகளைப் பாதுகாக்கவேண்டும். சிறுவர்கள் தாய்மாருக்கு, தந்தைமாருக்கு மரியாதை செலுத்தும் வகையில் கல்வி முறையை ஒழுங்கு செய்தல் வேண்டும் எனவும் அந்தச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தாய் தந்தையருடைய உரிமைகள் மற்றும் பிள்ளைகளின் உரிமைக்கும் இடையில் பிரச்சினை உருவாகாது. இதன் மூலம் அவர்களுக்கிடையே புரிந்துணர்வு, ஒருவருக்கொருவர் இடையிலுள்ள மதிப்பு அதிகரிப்பதற்கான சூழ்நிலை உருவாகும்.

j) மற்றவர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற கருத்து சுற்றுநிருபத்தில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. உதாரணமாகச் சிறுவர்களுக்கு கருத்துக் கூறும் உரிமை, ஏனையோருடன் பழகும் உரிமை என்பன போன்றே ஏனையோரின் உரிமைகள், சுதந்திரம் மற்றும் புகழுக்கு மதிப்பளித்தல் என்பன அவசியம் என தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

k) எதிர்கால சமுதாயம் நல்லவழியில் செல்வதற்கு இந்நிலை மிகவும் அவசியமாகும். ஒரு பிள்ளைக்குத் தேவையான கல்வியை பெற்றுக் கொள்ளல் உட்பட, வீட்டு வேலை செய்தல், ஆசிரியர்மாருக்கு மரியாதை செலுத்துதல் என்பனவும் சிறுவரின் உரிமை. நண்பர்களுடன் பழகுதலும் சிறுவர் உரிமையாகும். நல்ல நண்பர்களாக தேர்ந்தெடுத்தல் சிறுவர்களின் கடமை. போதைப் பொருள், மதுபானம் ஆகியவற்றில் இருந்து பாதுகாப்பாக இருத்தல், அதுபோன்று அவ்வாறான தீய செயற்பாடுகளை பழகாது இருத்தலும் சிறுவர் உரிமையாகும்.

l) தமது பழக்க வழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகள் குறித்து பெருமைப்படல், மதிப்பளித்தல் சிறுவர்களின் உரிமை. அதேபோல் பெற்றோருக்கு உதவுதல் சிறுவர்களின் கடமை.

m) சிறுவர் உரிமையை மீறுதல்:- சிறுவர் உரிமையை மீறுதல் இன்று மிக சுலபமான செயலாக மாறியுள்ளது. விசேடமாக அனாதைகள், அப்பாவிச் சிறுவர்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களும் இதில் அடங்குவர்.

n) பெரும்பாலான சிறுவர்களுக்கு பாதிப்புகள் குறித்துத் தெரிவதில்லை. அதே போன்று தமது உரிமை என்னவென்று அறிவதில்லை. பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உள்ளங்களில் வடுக்கள் ஆழமாக உருவாகும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

o) சிறுவர்களுக்கு தொல்லை கொடுப்பது பெரியோரே சட்டத்தில் இருந்து தப்புவதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பங்களும் சட்டத்தை தம் கையில் எடுத்துக் கொண்டு செயற்படவும் அவர்களுக்கு அதிகாரமுண்டு. இவற்றைச் சமுதாயமும் கவனிப்பதில்லை. இதனால் தொடர்ந்தும் சிறுவர்கள் உளரீதியாக மீண்டும் பாதிக்கப்படுகின்றனர்.

p) இதனால் தான் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தாம் பாதிக்கப்பட்ட விடயம் குறித்து வெளியில் சொல்லத் தயங்குகின்றனர்.

q) தேவையில்லாத முறையில் சிறுவர்கள் கிண்டல், விமர்சனங்களுக்கு உட்படுத்தப்படுவதை எப்போதும் அனுமதிக்க முடியாது என்பதை வளர்ந்தோர் விசேட விதமாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை,
தலைவர் - பேராசிரியர் ஹரேந்திர டி. சில்வா
குறிப்பு : குதுமாலி மத்துமகே

# யாழ். மண்ணை உலுக்கிய கோரச் சம்பவம்



கடந்தவாரம் யாழ்.நகரில் படையினரின் வாகனத்தில் சிக்கி மாணவியொருவர் பலியானதைத் தொடர்ந்து அங்கு இடம்பெற்றுள்ள சம்பவங்கள் மக்கள் மத்தியில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கின்றன.

காலை வேளையில் தனது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கல்லூரி நோக்கிச் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த யாழ் நல்லூரடியைச் சேர்ந்த நாகேந்திரம் துளசிகா(வயது12) என்ற வேம்படி மகளிர் கல்லூரி மாணவியை மிக வேகமாக வந்த இராணுவ உழவு இயந்திரம் மோதி பந்தாடியது. வாகனச் சில்லுக்குள் தலை சிக்கிப் படுகாயமடைந்த மாணவி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சில நிமிட



பொலிஸாருடன் தர்க்கம் செய்யும் பொதுமக்கள்

நேரங்களில் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

சம்பவம் இடம்பெற்ற சில நிமிட நேரங்களிலேயே சம்பந்தப்பட்ட உழவு இயந்திரம் இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டதுடன் தடயப் பொருட்களும் அகற்றப்பட்டிருந்தன.

இதை அடுத்து ஆத்திரமுற்ற வேம்படி மகளிர் கல்லூரி மாணவியர் வீதி மறிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதர பாடசாலை மாணவ, மாணவியரும் இதில் இணைந்துகொண்டனர்.

சம்பவத்தைக் கேள்விப்பட்டு ஆத்திரமுற்று ஆவேசமடைந்த பொது மக்கள் வீதியால் சென்ற இராணுவ ஜீப் வாகனங்களின் கண்ணாடிகளை உடைத்து நொருக்கியதுடன் ஒருசில இராணுவ முகாம்கள் மீது கற்களை வீசியும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதே வேளை வீதி மறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்களை நோக்கி இராணுவத்தினர் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியதுடன் குண்டாந்தடிப் பிரயோகத்திலும் ஈடுபட்டனர். பல மாணவர்களையும், பொது மக்களையும் கடுமையாகத் தாக்கினர்.

இராணுவத்தின் இச் செயற்பாட்டுக்கு எதிராக குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் மக்கள் கோஷங்களை எழுப்பியதுடன் தமது கடும் எதிர்ப்பைக் காட்டினர். பலாலி வீதி', ஆலடிச் சந்தியிலுள்ள இராணுவக் காவலரண் ஒன்றும், கலட்டிச் சந்தியில் அமைந்துள்ள மற்றொரு காவலரணும் பொது மக்களால் தீயிட்டுக்கொளுத்தப்பட்டன.

அடுத்தடுத்து இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின் எதிரொலியாக இராணுவத்தினர் பொது மக்களைக் கடுமையாகத் தாக்கியதுடன், துப்பாக்கி முனையில் விரட்டி அடித்தனர். யாழ்.பல்கலைக்கழக முன்றலில் திரண்ட மாணவர்களையும், பொதுமக்களையும் நோக்கிப் படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் ஓய்வு பெற்ற மாநகரசபைத் தொழிலாளியான 58 வயதுடைய நாகன் கதிர்காமு என்பவர் துப்பாக்கிக் குண்டு பாய்ந் ததில் பலியாகி உள்ளார்.



மறியலில் ஈடுபடும் மாணவிகள்

தொடர்ந்து பரமேஸ்வராச் சந்தியில் உள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்துக்குள் நுழைந்த படையினர் அங்கிருந்தவர்களை அடித்துத் துரத்தியதுடன் ஜன்னல் கண்ணாடிகளையும் அடித்து நொருக்கினர். அங்கிருந்த மோட்டார் சைக்கிள்களையும், சைக்கிள்களையும் அடித்துச் சேதப்படுத்தியதுடன் சில சைக்கிளை இராணுவ முகாமுக்குத் தூக்கிச் சென்றனர்.

பிற்பகல் திரண்ட மாணவர் குழு ஒன்று நகரிலுள்ள கொட்டடி சந்திரத்துச் சந்தியில் உள்ள இராணுவ காவலரணை தாக்க முற்பட்டது. அச்சமயம் படையினர் அவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அப்பகுதியில் சென்ற இருவர் காயமடைந்தனர்.

யாழ் வைத்தியசாலையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் கட்டுடையைச் சேர்ந்த குணசீலன் அன்ரனி (வயது 20), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவராசா (வயது 44) என்பவர்கள் இச்சம்பவத்தில் காயமடைந்து யாழ். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர்.

இச்சம்பவத்தில் ஆத்திரமடைந்த மக்கள் படை நிலைகள் மீது கற்களை வீசியெறிந்ததுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அலுவலகத்தையும் தாக்கி அங்கிருந்த படங்களையும் அடித்து நொருக்கினர்.

யாழ். வைத்தியசாலை வீதி - வேம்படி வீதிச் சந்தியில் வைத்து விமானப்படையினரின் வாகனம் ஒன்றை வழிமறித்த மாணவர்கள் அதற்கு பெற்றோல் ஊற்றி தீ மூட்டினர். 512 ஆவது படைப்பிரிவில் இருந்து புறப்பட்டு வந்த 'ஜீப்' ஒன்றே இவ்வாறு எரிக்கப்பட்டது.

இதனால் அவ்விடத்தில் மாணவர்களுக்கும் படையினருக்கும் ஏற்பட்ட முறுகல் நிலையில் பெருமளவு படையினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டதுடன் நிலைமை மேலும் மோசமாகவே பலரும் தமது தொழில் ஸ்தாபனங்களை மூடிவிட்டு வீடுகளுக்கு சிதறி ஓடினர்.

இத்துடன் நின்றுவிடாது பொது மக்களை அச்சுறுத்தும் வகையில் மாலை வேளையில் யாழ் நகர்ப்பகுதியில் உள்ள பெருமளவிலான காவலரண்களில் இருந்தும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. யாழ்.மத்திய கல்லூரிக்குச் சென்ற படையினர் பாடசாலை முடிந்ததும் மாணவர்களை வெளியேற அனுமதிக்கவில்லை.

பாடசாலை முடிவடைந்ததும் மாணவர்கள் உடன் வீடு திரும்ப முடியவில்லை. நகரில் ஏற்பட்ட நிலைமைகளைக் கேள்வியுற்று பெற்றோர் பாடசாலைகளுக்கு நேரில் சென்று பிள்ளைகளை அழைத்துச் செல்ல முண்டியடித்த போது பல பகுதிகளில் விபத்துக்களும் இடம்பெற்றன.

தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்களினால் நகரமே கலவர பூமியாக மாறிக் காணப்பட்டது. கடைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டதுடன், அரச அலுவலகங்களும், தனியார் அலுவலகங்களும், வங்கிகளும் முற்றாகவே மூடப்பட்டன. வெளியிடங்களுக்கான போக்குவரத்து சேவைகளிலும் ஓரிரு பஸ்களே ஈடுபட்டதால் வெளி இடங்களில் இருந்து நகருக்கு வந்தவர்கள் திரும்பிச் செல்ல முடியாது அவதிப்பட்டனர். நகரமே பெரும் பதற்றமடைந்து காணப்பட்டது.

தமிழர் தாயகமான வட பகுதியில் இராணுவ வாகனங்களில் மோதுண்டு மரணிப்போரின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமே உள்ளது. இராணுவத்தினர் கண்மூடித்தனமான வேகத்தில் வாகனங்களைச் செலுத்தி பொது மக்கள் கொல்லப்படுவது இது முதலாவது தடவை அல்ல. யாழ் மாவட்டத்திலே பல தடவைகள் இவ்வாறு இராணுவ வாகனங்களில் மோதுண்டு மக்கள் உயிரிழந்த சம்பவங்கள் பல தடவைகள் இடம்பெற்றுள்ளன.



பொதுமக்களை விரட்ட கண்ணீர் புகைக் குண்டு ஏவும் படையினர்

இராணுவ வாகனங்கள் அதிவேகமாகச் செல்வதுடன் பொது மக்கள் குறித்து எந்தவிதமான அவதானமோ, அக்கறையோ செலுத்தப்படுவதாகத் தெரியவில்லை.



சம்பவத்தில் கொல்லப்பட்ட மாணவி

சன நெருக்கடி அதிகமான வேலை நேரங்களிலும், வேலை முடிந்து வீடு செல்லும் காலை, மாலை நேரங்களிலும் எந்தவிதமான யோசனையும், கவனமும் இன்றிக் கண்மூடித்தனமான கடுகதியில் இராணுவ வாகனங்களைச் செலுத்துவதே இத்தகைய விபத்துக்கள் ஏற்படக் காரணமாகும்.

பாடசாலை நேரம் என்று கூடப் பாராமல் அதிவேகமாக வாகனத்தைச் செலுத்தி பிரஸ்தாப மாணவியைப் பலிகொண்ட பின்னரும் நிலைமையை உணர்ந்து மக்களைச் சமாதானப்படுத்த வேண்டிய நேரத்தில் நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளனர்.

**-தமிழரசன்-**

நாட்டில் அமைதியையும், பாதுகாப்பையும் ஏற்படுத்த வேண்டிய படையினரே மக்களின் உயிர்ப் பாதுகாப்பையே அழிக்கும் வகையில் வாகனங்களைச் செலுத்துவதுடன் அதற்குப் பின்னரும் மக்களின் பிரச்சினைகளை நிதானமாக நின்று அணுகாமல் போர் வெறியுடனும், துப்பாக்கி முனையிலும் அணுக முனைவதே பிரச்சினைகளுக்கு பிரதான காரணமாக உள்ளது.

வடக்கில் அடிக்கடி நடைபெற்று வரும் இராணுவ வாகன விபத்துக்களில் பொது மக்கள் பலியாக நேரும்போது மக்கள் ஆத்திரமுற்று ஆவேசப்படுவது தவிர்க்க முடியாததொன்றே. அதன் பின்னரும் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளும் பொது மக்கள் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களும் யாழ்.மாவட்டத்தில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் படையினர் மீது வெறுப்புணர்வையும் ஏற்படுத்தி உள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் அமைதிச் சூழல் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாவதுடன் மக்களும் வேறு வழிகளை நாட வேண்டிய நிலை வரலாம்.

வட பகுதியிலுள்ள மக்களை மனிதர்களாகக் கருதி அவர்களுடைய உரிமைகளுக்கும், பாதுகாப்புக்கும் மதிப்பு அளிக்காது நிராயுதபாணிகளான மக்கள் மீது துப்பாக்கியின் இரும்புக்கரம்கொண்டு தாக்கி அவர்களை நசுக்கவும் ஒடுக்கவும் முற்பட்டால் அதன் விளைவுகள் பாரதூரமாகவே இருக்கும்.




கலகம் அடக்கும் பொலிஸார்


தன்னம்பிக்கையை தரும் பாதுகாப்பு
Eva உடன் வித்தியாசமான பாதுகாப்பை அறிந்துகொள்ளுங்கள். சிறப்பாக வடிவமைக்கப்பட்ட காடி வெட்டுக்களின் சிறப்பு அகத்துறிஞ்சும் தன்மையோடு மேலதிக பாதுகாப்பை அனுபவிக்கலாம்.
மெல்லிய சிறப்பு வடிவமைப்பினால் மேலதிக ஆறுதல். தனித்தனியாக பொதி செய்யப்பட்டுள்ளதால் மேலதிக சௌகரியம். புதிய மேம்படுத்தப்பட்ட Eva உடன் நீங்கள் தன்னம்பிக்கையின் உச்சத்தை அனுபவிக்கலாம்.
மேலதிக பாதுகாப்பு
நீங்கள் மாற, நாங்களும் மாறுவோம்
Minds FCB

# கவிதைப் பூங்கா

## வாழ்க்கை சுமையல்ல!



வாழ்க்கை
ஒரு போதும்
சுமையல்லவாம்!
ஏனென்றால்
விலைவாசி
ஏற்றத்தைச்
சுமந்து.... சுமந்து.....
சுமை படர்ந்த
தோள்கட்கு
சுமையே
வாழ்க்கையானதால்....
வாழ்க்கை ஒரு போதும்
சுமையல்லவாம்!

இயலாமை
ஒடுப்பொடிந்து
சோர்ந்து விட்டதாய்
இழவு வீட்டு
ஒப்பாரியாய்
இசைப்பது
முட்டாள் தனமாம்!

இயலாமை
எழுதிச் செல்லும்
முகவரி
தோல்வியாயினும்
அது
வெற்றி விருட்சத்தின்
வித்தான
உறங்கு நிலையாம்
தோல்வியின்
தொடர்படி யேறித்தான்
திரிசங்கு
சொர்க்கத்திலேனும்
குடியேற முடியுமாம்.

ஆதலினால்,
வாழ்க்கை
ஒருபோதும்
சுமையல்லவாம்.

முகங்குப்புற
வீழ்வதால்
மூக்குடைபட்டு,
மூளியாகலாம்.
ஆனாலும்...
பாருங்கள்
மீசையில் மண்
படவில்லையே?



சாசுவதமாய்
எழுந்து நில்லுங்கள்
விழுவதும்......
எழுவதும்....
வெற்றியின்
இருமுகங்களே தவிர
தொடரான
வீழ்ச்சியல்ல.
தத்துவங்கள்
எவ்வளவு
மலிவானவை?
வாழ்க்கை
ஒருபோதும்
சுமையல்ல
ஏனென்றால்
சுமையே
வாழ்க்கையானது.

அனலக்தர்,
ஏறாவூர்.

## என்னவளின் நினைவுகள்....!

பிரிவால் கலங்கி
கறள் பிடித்து
உணர்வற்ற
நிலையிலிருக்க
என்
இதயத்தினை
எட்டிப் பார்க்கிறேன்
அந்தக் கறள் பிடித்த
என்
இதய வீணையில்
அழியாமல்
தேங்கிக் கிடக்கும்
என்னவளின்
நினைவுகளை
மீண்டும் மீண்டும்...
மீட்டிப் பார்க்கும் பொழுது
என்
ஓரக் கண்ணில்
கண்ணீர்த் துளிகள்
அரும்பி வழிகின்றன.
சிலைக்கு வாயில்லை
என்று தெரிகிறது
இருந்தும்...
பேசுகின்றேன்.



ஓவியங்கள்
உயிர்
பெறாது என்று
புரிகிறது
இருந்தும்...
அவைகளுடன்
நடக்கின்றேன்.
என்னுள் ஏற்பட்ட
ஊமைக்
காயங்களுக்கு
இன்று மருந்து
தேடிக்
கொண்டிருக்கின்றேன்.
மலர்களின்
வாசனை பிடிக்கவில்லை.
சிலைகளின் பாஷை
புரியவில்லை
சுவாசத்தின் வழியாக
உன்
ஞாபகங்களைத் தான்... என்
உயிர்ப் பரப்புக்கு
எடுத்துச் செல்ல முடிகிறது!





தர்ஷன்,
புதூர்.

## சிரித்தே நீ வாழ்

சிரித்துப் பேசிய
நீ
சில நிமிடம்
முறைத்துக் கொண்டாய்.
கண்டவுன்
புன்னகைக்கும்
உன் முகத்தில்
சிரிப்பின்றி
இருக்க
கற்பனையில்
என் மனதில்
சோகம் கொண்டேன்
உன் சிரிப்புக்
குரலுக்காக.
உன் பக்கம்
அலையும்
என் மேல்
கோபம்
ஏன் கொண்டாய்?
நீ
மறுத்துப்
பேசினாலும் சரி
சிரித்தே
நீ வாழ்!
சிரி என்று
கேட்ட எனக்கு
சிரிக்க மறுத்து
என்னை
சிந்தனையில்
ஆழ்த்தாதே
நீ! அதனால்
சிரித்தே
நீ வாழ்
துன்பத்தைக் கண்டு
துவண்டு போகாதே
துரத்தி எறி
சிரிப்பின்
சக்தியால்
சிரித்தே நீ வாழ்

ந.சுரேகா,
கரியாலை நாகபடுவான்.



## சிதைந்தது நான்...

தூரிகையின்
வரிகளால்
உன்
தூய்மையை
வரைந்த போது
வர்ணங்களால்
கறைபட்டது
என் கைகள்.
கவிதையின்
சொற்களால்
உன் அழகை
வர்ணித்த போது
அர்த்தங்களால்
காயபபட்டது
என் நெஞ்சம்.
காதலின்
இனிய
பாதைகளில்
கைகோத்து
நடந்தபோது
துயர முட்களால்
குத்தப்பட்டது
என் கால்கள்.
மொத்தத்தில்
காதலின்
கோயிலில்
சிதைந்தது நான்
செதுக்கப்பட்டது
நீ.....

யசோ,
ஒட்டுசுட்டான்.

## என் அவன்

அவன்
என் உயிர்
உள்ளவரை
உணர்வுகள்
உயிரோடு
உள்ளவரை
என்னால்
என்
நினைவுகளிலிருந்து
தூக்கியெறிபட
முடியாதவன்.

நான் பார்த்த
மனிதர்களில்
உருவத்தில்
மட்டுமல்ல
உணர்வுகளிலும்
வித்தியாசமானவன்.
வித்தியாசம்
என்பதை விட.
மேன்மையானவன்.

என் அன்பை
அவன்
அங்கீகரித்ததுக்கும்
அவன் அன்பை
நான்
அங்கீகரித்ததுக்கும்
நிறையவே காரணங்கள்
உண்டு.

அவன் அன்பு
எதிர்பார்ப்பில்லாதது.
எனது ஏழ்மையோ
எனது செல்வமோ
என் மீதான
அவன்அன்பில்
மாற்றத்தை
ஏற்படுத்தாது.
எனது நிறமோ
எனது அழகோ
அவன் அன்பில்
அத்திவாரமிடப்படவில்லை.
அதனால்
எனது இளமையோ
எனது முதுமையோ
என்னை

அவனிலிருந்து
பிரிவு
என்பதற்குள்
இட்டுச் செல்லாது.
அதனால்
நான்
அவன் மீது
கொண்ட அன்பு
என்றும்
உயிரோடு வாழும்.

அது எனக்கு
உறுதியாய்
தெரியும்.
ஏனெனில்
அவன்
இன்றைய
கால மனிதனா
என்ன....?
நான் வளர்க்கும்
செல்ல
நாய்க்குட்டிதானே
அவன்.

ரம்யா
''மருதங்கேணி''

## ஐ லவ் யூ




## கனவில் வந்தாய்

என்னவளே.....!
என்னை மறைக்க
நீ
ஜன்னலை மூடினாய்
நான்
உன்னை பார்க்க
கண்களை மூடினேன்
வந்தாய் - நீ
கனவில்....!

பி.சசி
நானாட்டான்



## ஏமாற்றத்துடன் ...

மகிழ்ச்சியுடன்
சென்ற என்னை
வாசலில் நின்றவாறே
வெளியே
என்றாள் அக்கா
வேதனைப் பூக்கள்
கண்ணீராய் சிந்த
திரும்பி வந்தேன்
வெளியே
ஏமாற்றத்துடன்.....

வ.வனிதாவதனி
விசுவமடு.

## ஐ லவ் யூ

வார்த்தைகள்
தெரியாமல்
என் வாய் அன்று
உளறியது
ஐ லவ் யூ
இன்று
உறக்கமில்லை
பசியில்லை
நிம்மதியில்லை
வாழ்க்கையில்
எனக்கென
மகிழ்ச்சி
எதுவுமே இல்லை
ஆயினும்
காதல் இன்றி
என்
ஜீவன் இல்லை.

ச. கருணாகரன்
2ம் வருடம்
யாழ். பல்கலைக்கழகம்.

## தேறுதல் தேடும் இதயம்!

விடிவைத் தேடி
விழிகள்
ஜுவாலாய் இன்று!
வீணான
சிறையிருப்பு
மாறுமோவென்று
வேதனையுடன்
உள்ளம்
ஏங்குது தொடர்ந்து.....
சித்திரவதைகளின்

மனக்காயம்.
சிதறிப்போன
குடும்பம்
மீண்டும்
ஒன்று சேருமோ?
எனத் தொய்ந்து
போயுள்ளது இதயம்.
இதமான வாழ்வு
இனிமேலும்

வருமா என
எண்ணி எண்ணி
தினம்
ஏக்கப் பெருமூச்சுடன்
எமக்கு
விடுதலையை
யார் தருவார் என
ஏங்கித் தவிக்குது
உள்ளம்.
கவலையை மறக்க

வழியும்
தெரியவில்லை
கண்ணீர் விட
கண்களில்
ஈரமுமில்லை
கலங்கித் தவிக்கும்
எம்மை
யாரால் தான்
தேற்றக் கூடுமோ?

களுத்துறை சிறையிலிருந்து
ஜோ. நிரில்ஸ் பெர்னாண்டோ.

# மிஸ்டர் வேதாளம்

மூக்கை சிந்தியபடி – கையிலே ஒரு லேஞ்சி வைத்துத் துடைத்துக்கொண்டு எமக்கு முன்னால் நின்றார் வேதாளத்தார். கண்களிலிருந்து பொலபொலவெனக் கண்ணீர். பதறியபடி கேட்டோம். ''என்னய்யா... ஏன் அழுகிறீர்.... என்ன நடந்தது?''.

அந்த சோக நிலையில் இருந்தாலும் எமது கேள்வியைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தார். வேதாளத்தார்.

''என்ன வேதாளத்தாரே...! மண்டை கழன்று விட்டதோ? அழுகிறீர் சிரிக்கிறீர் என்ன காரணம்?'' என்றோம்.

''சிரிக்காமல் என்ன செய்வது? நன்றாகத் தடிமன் பிடித்துவிட்டது. கண் கலங்கி – மூக்கால் ஒழுகுகிறது. அதனைப் பார்த்து விட்டு நான் ஏதோ அழுவதாக நினைத்து பதற்றப்படுகிறீர்'' என்று சொல்லிவிட்டு மீண்டும் சிரிக்க ஆரம்பித்தார்.

''ஒஹோ! தடிமன்தான் காரணமா? நாங்கள் என்னவோ ஏதோ என்று நினைத்து விட்டோம். சரி கொண்டு வந்த விடயத்தைக் கொட்டிவிட்டு ஓடிச்சென்று உமது இருப்பிடத்திலே படுத்துக் கொள்ளும்'' என்றோம். சொல்லத் தொடங்கினார்.

''படைத் தரப்பினரைச் சண்டை காலத்தில் சமாதானப்படுத்துவது சுலபமாக இருந்தது. ஆனால் இப்போ சமாதான காலத்தில் சமாதானப்படுத்துவது மகாகஷ்டமாக இருக்கிறதாம். என்னைச் சந்தித்த படை அதிகாரி ஒருவர் இதைச் சொல்லிச் சலித்துக் கொண்டார்'' என்றார்.

''என்ன சொல்கிறீர்? புரியவில்லையே!'' என்றோம் .

''அதாவது பதவி உயர்வுகள் வழங்குவதில் சிக்கல்கள் தாமதங்கள்.... இதனால் படை அதிகாரிகள் பலருக்கு மனஸ்தாபங்கள். ஜனாதிபதியும், படைத்தளபதிகளும் தங்களுக்கு பிடித்தமானவர்களுக்குத்தான் பதவி உயர்வுகளை வழங்குகிறார்களாம் என்று புலம்பித் திரிகிறார்கள் சில அதிகாரிகள்'' என்றார்.

''என்ன சொல்கிறீர்? அதுதான் மூன்று மேஜர் ஜெனரல்களுக்கு பதவி நீடிப்பு வழங்கப்பட்டு விட்டது. அடுத்து அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்படும் தானே!''

''ஆம் தற்போதைய இராணுவ தளபதியான லெப்டினட் ஜெனரல் சாந்த கொட்டகொடவின் பதவிக்காலம் எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதியுடன் முடிவடைகிறது. தொடர்ந்து அவருக்குப் பதவி நீடிப்பு வழங்காமல் அடுத்த இராணுவத் தளபதியாக – தற்போது மேஜர் ஜெனரலாக – உள்ள சரத் பொன்சேகாவை நியமிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுவிட்டதாம். ஏனைய பதவி நீடிப்பு வழங்கப்பட்டவர்கள் இருவருக்கும் கூட பதவி உயர்வுகள் உண்டாம்.''



''பிறகென்ன சொல்ல வருகிறீர்?''

''இதுவேறு அதாவது கடந்த 20 வருடங்களுக்கு மேலாக யுத்த களங்களில் இருந்து போராடிய ஐநூற்றி முப்பத்தி ஒரு இராணுவ உயரதிகாரிகளுக்கு தவியுயர்வுகள் எதுவும் வழங்கப்படவில்லையாம். இதனால் இவர்கள் அனைவரும் இராணுவ சேவையிலிருந்து விலகி தமது பதவிகளை ராஜினாமாச் செய்துவிட்டு செல்லத் தயாராகி விருக்கின்றார்களாம்.''

''அட அப்படியா சங்கதி?''

''ஆம் உடனடியாக இவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து இவர்களுக்கு உரிய பதவி உயர்வுகளை வழங்கவேண்டும். இல்லாவிட்டால் இவர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் தமது பதவிகளை ராஜினாமாச் செய்துவிட்டுச் செல்ல தயாராகி வருகிறார்கள். அப்படி அனைவரும் ஒரேநேரத்தில் பதவி விலகினால் அது இராணுவத்துக்கு பெரிய பின்னடைவாக அமையும் என்று ஜனாதிபதியிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.''

''அப்போ விரைவிலே அவர்களுக்கான பதவி உயர்வுகள் கிடைக்கும் என்கிறீர்'' என்றோம்.

''கிடைக்கலாம்... கிடைக்காமலும் போகலாம்'' என்றவர் அடுத்தவிடயத்துக்குத் தாவினார்.

''ஜனாதிபதி தேர்தல் வருவதற்கு முன்னர் ஆளும் கட்சிக்குள் வெட்டுக் – குத்து ஆகிவிடும் போல் தெரிகிறது'' என்றார்.

''என்ன? ஐ.தே.க. தனது ஜனாதிபதி வேட்பாளர் ரணில் என்று அறிவித்து விட்டது. அதேபோல் ஆளும்கட்சி தமது ஜனாதிபதி வேட்பாளர் யார் என்று அறிவிக்க வேண்டும் என்று சர்ச்சை கிளம்பியுள்ளதே அதை சொல்லுகிறீரோ?'' என்றோம்.

''ஆம்.. அதேதான் ஆளும்கட்சி இரண்டு பட்டுக்கிடக்கிறது. ஜனாதிபதியின் சகோதரரான அநுரா ஒரு புறம் நான்தான் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் என்று சொல்லிக் கொண்டு தனக்கு ஆதரவாக ஒரு கூட்டத்தை சேர்த்துக்கொண்டு திரிகிறார்.''

''மற்றவர் பிரமர் மஹிந்தவோ..?''

''ஆம் அவர் ஒருபுறம், சந்திரிகாவுக்கு பிறகு தான் வேறுயாருக்கும் கீழ் இயங்க முடியாது என்று சொல்லிக்கொண்டு திரிகிறார். அவர் பக்கமும் ஒரு கோஷ்டி பிரிந்து நிற்கிறது.''

''அப்படி என்றால் யார் பக்கம்... அதிக கூட்டம் என்கிறீர்?''

''அது குறிப்பாக சொல்ல முடியவில்லை, பலரும் தற்போதைய ஜனாதிபதியின் கையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் யார் பக்கம் கையை நீட்டுகிறாரோ என்று''.

''அவர் யார் பக்கம் கையை நீட்டுவார் என்கிறீர்கள்?''

''அவர் இந்த விடயத்தில் மௌனத்தையே கடைப்பிடிக்கிறார். ஏனென்றால் அரசியலமைப்பை மாற்றிப் பிரதமருக்கு அதிகாரங்களைக் கொடுத்துவிட்டு ஓடிப்போய் பிரதமர் ஆசனத்தில் அமர்ந்து கொள்ளும் எண்ணம் அவருக்கு. அப்படி இருக்கையில் இப்போ ஜனாதிபதி வேட்பாளர் இவர்தான் என்று காட்டிவிட்டால் அரசியலமைப்பை மாற்றும் அவரது திட்டம் பிசுபிசுத்துவிடும். எல்லோரும் அடுத்த ஜனாதிபதி வேட்பாளருக்குப் பின்னால் போய்விடுவார்கள். அதனால் தனது எதிர்கால அரசியல் வாழ்க்கை அஸ்தமித்துப் போய்விடும் என்று அச்சப்படுகிறார் அவர்.''

''அப்படியில்லை ஜனாதிபதி தேர்தல் தான். என்று வந்துவிட்டால் அவர் யாருக்கு சந்தர்ப்பம் வழங்குவார் என எதிர்பார்க்கிறீர்?''

''வேறு யாருக்கு? தனது சகோதரத்துக்குத் தான் ஏனென்றால் அப்பா, அம்மா, தான் என்று வழிவழியாக தங்கள் குடும்பமே ஆட்சி செய்த நாட்டையும் கட்சியையும் இன்னொரு கிராமப்புறத்தவர் கையில் கொடுத்து விட்டு ஒதுங்கிக்கொள்ள அவர் விரும்பவில்லை.''

''அப்படி என்றால் முடிவுதான் என்ன?''

''முடிவைக் காலம் தான் சொல்ல வேண்டும். அநுராவுக்கு ஜனாதிபதி வேட்பாளர் பதவி தரப்படவில்லையாயின் அவர் மீண்டும் கட்சியை விட்டு விலகி... ஜே.வி.பி பக்கமோ அல்லது வேறு கட்சிகள் பக்கமோ சாயலாம்....''

''அதேபோல் மஹிந்தவும் லேசுப்பட்டவரல்லவே.''

''ஆம்.... அவருக்கும் ஜனாதிபதி வேட்பாளர் பதவி கிடைக்காவிட்டால் அவரும் கட்சியை விட்டு விலகக்கூடும். எனவே எதிர்காலம் சிக்கலிலே சிக்கித் தவிக்கிறது..... என்னாகுமோ ஏதாகுமோ.'' என்றவர்... மீண்டும் கைக்குட்டையை எடுத்து மூக்கை சீந்தத் துவங்கினார்.

அவரது தடிமன் எம்மையும் தொற்றிக் கொண்டு விடுமோ என்ற அச்சத்தில் ''சரி... சரி... இந்த வாரத்துக்கு இது போதும்... நீர் சென்று வாரும்'' என்றோம்.

சந்தோஷமாக பறக்கத் தொடங்கினார் வேதாளத்தார்.


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர் நாவலர் வீதி – செட்டித் தெரு சந்தியில் இருந்து 50m தூரத்தில் 8 பரப்பு காணி மொத்தமாகவோ 2 பரப்பிலான 4 துண்டாகவோ உடன் விற்பனைக்குண்டு.
(தொடர்பு:கிழமை நாட்களில் 9.00மு.ப முதல் 4.00பி.ப வரை)
தொலைபேசி:0114 514285. தொலைநகல்: 011 2 501844.

## காணி விற்பனைக்கு

திருகோணமலை உவர்மலை 5ம் குறுக்குத் தெருவில் கண்டி வீதிக்கு அருகாமையில் இருபக்கமும் வீதிகளைக் கொண்டு அமைந்துள்ள 45 பேர்ச் காணி முழுமையாகவோ பகுதிகளாகவோ உடன் விற்பனைக்குண்டு. விலை ரூ.215,000/= ஆனால் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு: 0777 585893

## கணனி விற்பனைக்கு

AMD 450, 500, 550 MHZ, P (IV) 1.7GHZ கணனிகள் இலண்டனிலிருந்து தருவிக்கப்பட்டவை. உடன் விற்பனைக்குண்டு. மொத்தக் கொள்வனவு விரும்பத்தக்கது.
(தொடர்பு:கிழமை நாட்களில் 9.00மு.ப முதல் 4.00பி.ப வரை) தொலைபேசி: 0114 514285






## பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்
### (GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு ம[illegible]பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

**பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்**

### Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் *(முத்திரை செலவுடன்)* விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**

மார்ச் 20 – 26 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEI No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

**வவுனியாவில்...**

ஏப்ரல் 02 - 03 ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

**யாழ்ப்பாணத்தில்...**

மார்ச் 11 -16
A.S.N. சுற்றுலா விடுதி
392/A. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

சுடர் ஒளி

மார்ச் 13 - 19, 2005

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14 டெலிபோன்: 011-4734401–6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

## வாழ்க்கையில் மறக்க முடியாத பாடம்

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள், ஆறு சுற்றுக்கள் முடிவடைந்த நிலையில் இடைநிறுத்தப்பட்டன. 2003 ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் இன்னும் பேச்சுக்கள் நடைபெறவில்லை. அடுத்த மாதத்துடன் பேச்சுக்கள் இல்லாத நிலையில் இரண்டு வருடங்கள் கழியப் போகின்றன.

கடந்த இரண்டு வருடகாலத்தில் நாட்டில் எவ்வளவோ சம்பவங்கள் நடைபெற்று விட்டன. பொறுமையின் எல்லையில் நின்றுகொண்டு புலிகள் அமைதிகாத்து வருகின்றனர். ஆனால் இன்றைய, யுத்தமும் இல்லாத பேச்சுவார்த்தையும் இல்லாத நிலைமை எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும் என்பது தான் இன்றும் எழும்பும் கேள்வி.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை விடயத்திலோ, ஆழிப் பேரலை அனர்த்த மீள் கட்டுமானப் பணிகளுக்கான பொது கட்டமைப்பு விடயத்திலோ ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுக்குள் ஒருமைப்பாடு கிடையாது.

இந்த இரு விடயங்களிலும் அரசு இணங்கிப்போக முன்வந்தால் அரசைக் கவிழ்க்கப் போவதாக ஜே.வி.பி. அச்சுறுத்துகிறது. உண்மையிலேயே கூட்டமைப்பின் பிரதான கட்சியான சுதந்திரக்கட்சிக்குள்ளேயே இந்த இரு விடயங்களிலும் ஒருமைப்பாடு கிடையாது என்று நம்பப்படுகிறது. குத்துவெட்டு இடம் பெற்றுவருகிறது.

சந்திரிகாவுக்கு அடுத்தது யார் என்ற கேள்வி இன்று அரசுக்குள் மேலோங்கி வருகிறது. சந்திரிகாவுக்குப் பின்பு மஹிந்த ராஜபக்ஷவா அல்லது அநுரா பண்டாரநாயக்காவா என்ற போர் ஆரம்பித்து விட்டது. மஹிந்த ராஜபக்ஷவுக்கு சேறு பூசும் முயற்சிகளை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டனர். கட்சிக்குள்ளும் கூட்டமைப்புக்குள்ளும் ஜனாதிபதி பெரும் நெருக்கடிகளை எதிர் நோக்குகிறார்.

ஆகவே ஜனாதிபதியினால் தற்போதைய நிலையில் இந்த இரு விடயங்களையும் சரிவரக் கையாள முடியாது. தனது கட்சியை ஆட்சிக்கு கொண்டுவரவேண்டும் என்பதற்காக கூடாத கூட்டத்தோடு கூட்டுச்சேர்ந்ததுடன் பேரினவாதிகளுக்கு தனது கட்சியில் முக்கிய இடம் கொடுத்ததன் பலனை ஜனாதிபதி அனுபவித்துக்கொண்டிருக்கிறார்.

ஜனாதிபதிக்கு தற்போது மும்முனைகளில் நெருக்கடிகள் ஏற்பட்டுவருகின்றன.

புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் பேச்சுவார்த்தையின் ஆரம்பத்தில் இருந்த சுமுகமான சூழ்நிலை தற்போது கிடையாது. புலிகள் தமது நிலைப்பாட்டைக் கடுமையாகக்கொண்டு வருவது சமீபத்தில் நடந்த சம்பவங்கள் மூலம் தெளிவாகத் தெரிகிறது. ஆழிப் பேரலை அனர்த்த மீள் கட்டுமானப் பணிகளில் தமிழ் மக்களை ஒதுக்கி போர் முனைப்புடன் அரசு செயற்படுவதாக புலிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

மற்றது ஜே.வி.பியுடனான இழுபறி மூன்றாவது அரசு எதிர்நோக்கும் சர்வதேச அழுத்தம்.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மீள் கட்டுமானப் பணிகள் தொடர்பாக புரிந்துணர்வுடன் ஒரு கூட்டுப் பொறுப்புடன் அரசும், புலிகளும் செயற்பட்டால் மாத்திரமே நிதி உதவிகளை வழங்கப் போவதாக சர்வதேச சமூகம் தெரிவித்து விட்டது.

ஆகவே தற்போதைய நிலையில் ஜனாதிபதியிடம் இரு வழிகளே உள்ளன. ஒன்று துணிச்சலுடன் செயற்பட்டு ஜே.வி.பியை தூக்கி எறிந்து விட்டு சமாதானத்துக்கு ஆதரவான ஏனைய கட்சிகளுடன் இணைந்து சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்தி நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவது அல்லது பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவது.

கூடாத கூட்டத்தோடு கூட்டுச் சேர்ந்தது ஜனாதிபதிக்கு வாழ்க்கையில் மறக்க முடியாத பாடம்.

# கிழக்கில் நிலைமை மோசம்

கிழக்கு மாகாணத்தில் மீண்டும் கொலைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றன. மக்கள் மத்தியில் பீதி நிலவி வருகின்றது.

கடல்பேரனர்த்தத்தின் பின் சிறிதுகாலம் ஓய்ந்திருந்த கிழக்கு புலிகளின் மட்டு. அம்பாறை அரசியல் துறைபொறுப்பாளர் கௌசல்யன் உட்பட்ட போராளிகளின் கொலையுடன் மீண்டும் குமுறத் தொடங்கி உள்ளது. அடுத்த இன்னொரு நடவடிக்கையாக புலிகளின் மட்டு.அம்பாறை மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் குவேனி உட்பட போராளிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதையடுத்தே சங்கிலித் தொடரான கொலைகள் தொடங்கியுள்ளன.

கிழக்கில் இராணுவப்புலனாய்வுத் துறையினருடன் நெருங்கிய தொடர்புடைய நபர்கள் 11 பேருக்கும் மேற்பட்டோர் சில தினங்களுக்குள் கொல்லப்பட்டுள்ளதுடன் பலர் காயமடைந்துமுள்ளனர்.

மிகவும் நுணுக்கமான முறையில் குறிவைக்கப்பட்டு இராணுவ புலனாய்வுத் துறையினருடன் நெருங்கி செயற்படும் நபர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்தவருட நடுப்பகுதியிலிருந்து அடுத்த சில மாதங்கள் தொடர்ச்சியாக கொழும்பிலும், கிழக்கிலும் நடத்தப்பட்ட தாக்குதல்களில் அதிமுக்கிய இராணுவ புலனாய்வுத்துறைச் செயற்பாட்டாளர்கள் கொல்லப்பட்டதுடன் இராணுவப் புலனாய்வுத்துறையும் பலத்த நெருக்கடியைச் சந்தித்துவந்தது.

இந்நிலையில் கருணாவுடன் வெளியேறிய அவரின் குழுவைச்சேர்ந்த சில உறுப்பினர்களையும், தமிழ்குழுக்களின் உறுப்பினர்களையும், இராணுவ புலனாய்வுத்துறை உறுப்பினர்களையும் இணைத்தே அண்மைக்காலத்தில் புலிகளுக்கெதிரான தாக்குதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்நிலையில் தான் பல தமிழ் ஆயுதக்குழு உறுப்பினர்களையும் குறிவைத்து தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த தாக்குதல்களைப் புலிகள் மேற்கொண்டு வருவதாக இராணுவத்தரப்பு குற்றம் சாட்டி வருகின்றமையும் இங்கு கவனிக்கத்தக்கது.

புலிகள் ஏற்கனவே, கருணாகுழு என்ற பெயரில் இராணுவபுலனாய்வுத்துறை மேற்கொண்டுவரும் தாக்குதல்களையடுத்து தமது புலனாய்வுச் செயற்பாட்டை தீவிரப்படுத்தியிருந்தனர். பொலன்னறுவை – மட்டக்களப்பு எல்லைப்பகுதியான வெலிகந்தையைச் சுற்றியே கருணாகுழு உறுப்பினர்கள் செயற்பட்டுவருகின்றனர். இவர்களைக் கட்டுப்படுத்தவும், கண்காணிக்கவும் புலிகளின் விசேட தாக்குதலணிகள் வாகரையை மையமாகக் கொண்டு செயற்பட்டுவருகின்றன. இப்பகுதிக்கான இந்த விசேட அணியை புலிகளின் மூத்த தளபதி கேணல்.பால்ராஜ் செயற்படுத்திவருவதாக தெரியவருகின்றது.

மட்டக்களப்பு – அம்பாறைப் பகுதிகளிலும் புலிகளின் புலனாய்வுச் செயற்பாடுகள் தீவிரமாகியுள்ளன. அண்மையில் கொல்லப்பட்ட சிலரின் கைத்தொலைபேசிகள் தாக்குதலாளிகளால் எடுத்துச்செல்லப்பட்டுள்ளன. கடந்தவருட நடுப்பகுதியின் பின் கொழும்புச் சுற்றுப்புறத்தில் 'கருணா குழு' உட்பட இராணுவ புலனாய்வுத்துறை உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் அவர்களின் கைத்தொலைபேசிகளை அபகரித்துச்சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

புலிகள் மீது தாக்குதல் நடத்தும்போது தாக்குதலணிகள் மீது அவர்கள் திரும்பிப் பாய்வார்கள் என பல்வேறு தரப்பாலும் சுட்டிக்காட்டப்பட்டு வந்தது.

புலிகள் மீது இராணுவம் தனது நிழல் யுத்தத்தை தொடங்கியபோதே இருதரப்பும் 'கடுமையான' ஒரு நிழல் போரை மேற்கொள்ளக்கூடும் என எதிர்பார்க்கப்பட்டது தான். ஆனால், தற்போதைய நிலைமை மேலும் நிலமையை மோசமாக்கக்கூடும் என மக்கள் அஞ்சுகின்றனர்.

கிழக்கில் கருணாவுடன் இயங்கும் உறுப்பினர்களான சின்னதம்பி, இனியபாரதி, பிள்ளையான், மார்க்கன், றியசீலன், மங்கலம், ஜெயம் ஆகியோரின் புகைப்படங்கள் அண்மைக்காலத்தில் இணையத்தளம் ஒன்றில் வெளியிடப்பட்டுள்ளன. இவர்களின் புகைப்படங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரம் ஒன்று கடந்தவருடம் புலிகளாலும் மட்டக்களப்பு, அம்பாறைப்பகுதியில் வெளியிடப்பட்டிருந்தது.

வெலிகந்த பகுதி மற்றும் அதனை சூழவுள்ள பகுதி இளைஞர்களை, இராணுவத்துடன் இணைந்து செயற்படும் கருணாகுழு பண ஆசைகாட்டி தமது அணியில் சேர்த்து வருவதாகவும் அவ்வாறான ஒருவர் அண்மையில் மட்டக்களப்பில் சுடப்பட்டவர்களுள் அடங்குகிறார் எனவும் தெரியவருகிறது.

தமிழ் தேசியத்தின் மீதான இந்த துரோகத்தனங்கள் என்றைக்கும் வெற்றியடையாது என்பதே வரலாறாக எம்முன் விரிந்து கிடக்கிறது. இவ்வாறான நடவடிக்கைகளுக்கு துணைபோக வேண்டாம் எனப் புலிகள் முன்னர் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

– செவ்வாணம் –

தென் தமிழீழத்தின் புவியியல் சூழலும், சமூக அமைப்பும் சிக்கலானவை. அதை பயன்படுத்தி தமிழ் தேசியத்துக்கு எதிராக அரச படைகளால் காலம் காலமாக திட்டமிட்ட இனஅழிப்புக்களை மேற்கொண்டிருந்தனர். அதை தொடரவும் செய்கின்றனர். எனினும் இன அழிப்பு நடவடிக்கைகள் எந்தவொரு விடுதலைப்போரையும் வலுவுடன் எழுச்சியுறச் செய்யும் என்ற வரலாறுக்கு எமது போராட்டமும் ஒன்றும் விதிவிலக்கல்ல என்பதை சிங்கள தேசம் என்றோ ஒரு நாள் புரிந்துகொள்ளும்.

# உலகவங்கியின் நிலைப்பாட்டால் இனவாதிகள் சீற்றம்

சுனாமிப் பேரனர்த்தத்தால் பேரழிவுற்ற வடக்கு - கிழக்குப் பகுதியின் புனர்நிர்மாணத்திற்கும் மீள் கட்டமைப்புக்குமாக சர்வதேசம் வழங்கும் 600 கோடி ரூபாவை விடுதலைப்புலிகளிடம் வழங்கவேண்டும் என கொழும்பில் உள்ள உலகவங்கிப் பிரதிநிதி பீற்றர் ஹெரால்ட் தெரிவித்திருப்பது தென்னிலங்கை இனவாதிகளை கடுமையாக சீற்றமுற வைத்துள்ளது.

ஜே.வி.பி மட்டுமல்லாது தேசப்பற்றுள்ள இயக்கம், மற்றும் இனவாத அமைப்புக்கள் இவரை கடுமையாக விமர்சனம் செய்துள்ளன.

உலகவங்கிப் பிரதிநிதி பீற்றர் ஹெரால்டுக்கு எதிராக கடும் கண்டனத்தை வெளியிட்ட ஜே.வி.பி., புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை அங்கீகரிக்கப்படாத ஒரு இராச்சியம் எனக் கூறி அதை அங்கீகரிக்கும் பாணியில் அறிக்கைவிடுகின்றார், தனது வரையறைக்கு மேல் கடமையை மீறிச் செல்கிறார் எனக் குற்றஞ்சாட்டி உள்ளது. ஒரு நாட்டின் இறைமையில் வேறு எவரும் தலையிட முடியாது என்றும் ஜே.வி.பி. கூறியுள்ளது.

ஜே.வி.பியின் பாய்ச்சல் ஒரு புறம் இருக்க உலக வங்கிப் பிரதிநிதியின் 'அங்கீகரிக்கப்படாத அரசு' என்ற கருத்துக்கு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஜே.வி.பியினதும் இனவாதிகளினதும் பாய்ச்சல்களுக்கும், கூச்சல்களுக்கும் ஒத்து ஊதி தமிழர்கள் மீதான ஒடுக்குமுறைக்கு ஒத்துழைத்துவரும் கதிர்காமர் இனவாதிகளுக்கு தனது விசுவாசத்தை கடுமையாகக் காட்டிவருகிறார்.

ஜே.வி.பியினதும் ஏனையவர்களினதும் கண்டனங்கள் பீற்றர் ஹெரால்ட் விசயத்தில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தப்



பீற்றர் ஹெரால்ட்

போவதில்லை என்பதே உண்மை. ஏனெனில் கிளிநொச்சியில் இயங்கும் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் இலங்கை நாட்டில் அங்கீகரிக்கப்படாத ஒரு அரசு இருப்பதை ஏற்கனவே நிருபித்துவிட்டது.

இறைமையுள்ள ஒரு நாட்டின்மீது எவரும் எதுவிதமான கருத்தும் கூறக்கூடாது எனக்கூறும் ஜே.வி.பி இலங்கை விடயத்தை மாத்திரமின்றி அகில உலகத்தையும் நோக்க வேண்டும்.

உலக வங்கிப் பணிப்பாளர் பீற்றர் ஹெரால்டின் விடயத்தில்மட்டும் இறைமையை தூக்கிப்பிடிக்கும் ஜே.வி.பி. அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேருவும், விடுதலைப்புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டபோது ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனான் கூட கண்டனம் தெரிவித்திருந்தார் என்பதை மறந்து விடக்கூடாது. இதை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் கண்டித்திருந்தார்.

மொத்தத்தில் இறைமையுள்ள ஒரு நாட்டில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறும் போது எவரும் வாய் திறக்கக்கூடாது என ஜே.வி.பியும் இனவாதிகளும் கருதினால் அதைவிட வேடிக்கை வேறொன்றுமில்லை.

கடந்த காலங்களில் ஐ.தே.க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பன எவ்வாறு இனவாதம் பேசிக் கொண்டு ஆட்சியைப் பிடித்தனவோ அவ்வாறு ஜே.வி.பியும் தனது செல்வாக்கை வளர்த்து ஆட்சியை பிடிக்கலாம் என எண்ணுவது வெளிப்படை.

திருகோணமலையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற நாடகம் ஜே.வி.பியின் கபடத்தனத்தை நன்கு வெளிப்படுத்தியது.

இனவாதப் பிரசாரத்தையும் தீவிரமாக மேற்கொண்டு சர்வதேச சமூகத்தையும் பகைத்துக் கொண்டு தாம் மக்கள் மத்தியில் இடம்பிடிக்க முடியும் என ஜே.வி.பி. நினைத்தால் அது பகற் கனவாகவே இருக்கும்.

-பாணன்-

# தாய்மடி

அந்தி நேரம். நீல வானம் கருமையாகித் தன் கண்ணீர்த் துளிகளால் பூமியை பூஜித்துக் கொண்டிருந்தது. வேகம் சிறிதும் குறையாது ஒரே சீராகப் பூமி நோக்கி வந்து கொண்டிருந்த மழைச் சிதறல்களை ரசித்த வண்ணம் ஜன்னலுக்கருகில் நின்று கொண்டிருந்தான் விக்ரம்.

இயற்கை அன்னையின் இனிய அரவணைப்பை இன்பமாக அனுபவித்தவனுக்கு, மனம் என்றுமில்லாதவாறு இலேசாகிவிட 'இயற்கை அன்னையின் மடியே இவ்வளவு இன்பம் தருவதென்றால் தாயின் மடி எவ்வளவு இனிமையாக இருக்கும்' என தனக்குள் நினைத்துக் கொண்டான்.

விக்ரம் பத்து வருடங்களுக்கு முன்பு நாட்டில் ஏற்பட்ட கொடூரமான சூழலாலும், தன் வீட்டின் வறுமைக் கொடுமையாலும் வேலை வாய்ப்புத் தேடி வெளிநாடு சென்ற இலங்கையருள் ஒருவன். கடந்த காலத்தில் நிகழ்ந்த மறக்க முடியாத ரணங்கள் அவனைத் தாய் நாட்டையே மறக்கடிக்கச் செய்துவிட்டன. வயோதிபத்தை அடைந்துவிட்ட பெற்றோருக்குரிய கடமையை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காகவே, தாய் நாட்டுக்கான அவனது பயணம் ஆரம்பமாகியது எனலாம்.

'விடிய இரண்டு மணிக்குத்தானே வான்காரன் வாறனென்டவன்' எனத் தனக்குள் கூறிக்கொண்டவன் தன் பயணத்திற்காகப் பொருட்களை சீராக்கத் தொடங்கினான்.

அதிகாலை 2.00 மணி. இருள் சூழ்ந்த கொழும்பு மாநகரம் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் ''பளிச், பளிச்'' என்ற ஒளிச் சிதறல்களால், நான் என்றும் விழித்தபடி இருப்பேன் என்பதைப் பறை சாற்றிக்கொண்டிருந்தது.

''பாக் எல்லாத்தையும் ஏத்திப் போட்டியளே, அப்ப நான் வானை எடுக்கிறன்'' என்று கேட்ட வான்காரனுக்கு ஆம் என்பதற்கடையாளமாகத் தலையசைத்து தானும் வானில் ஏறிக்கொண்டான் விக்ரம்.

அவனுக்குள் இனம் புரியாத உணர்வுகள் ஆட்கொள்ளத் தொடங்கின. தன் அன்னை, தந்தை, இறந்துபோன தங்கை என்று எல்லோர் முகங்களும் நெஞ்சில் தோன்றி வேதனையை தீவிரப்படுத்தின. அந்நினைவுகளை மனதில் இருந்து உதறிவிட முனைந்தவனைப் போல தலையை இருதரம் குலுக்கிக் கொண்டவன், வான் ஓட்டிய அந்த இளைஞனுடன் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தான்.

''தம்பியின் சொந்த ஊர் எது''

''என்ர சொந்த ஊர் அண்ணை சுன்னாகம். இஞ்ச இந்த வான் ஓடுறதுக்காக நிக்கிறன்'' என்றான்.

''எப்பிடி இருக்கு யாழ்ப்பாணமெல்லாம்'' என அடுத்த வேள்விக் கணையை அவனை நோக்கித் தொடுத்தான் விக்ரம்.

''இப்ப நிலமை பரவாயில்லை. ஏதோ கொஞ்சக் காலம் நிம்மதியா இருக்கிறம். அண்ணை எந்த ஊர்?'' எனக் கேட்டான் வான் கார இளைஞன்.

''நான் புன்னாலைக் கட்டுவன். பத்து வருடத்துக்கு முன்னமே கட்டார் போனனான். இப்பதான் வாறன்'' என அவன் கேட்டதற்கும் அதிகப்படியான தகவல்களை வழங்கினான் விக்ரம்.

''என்ன அண்ணை செய்யிறது? எங்கட நாட்டில இப்பிடி ஒரு பிரச்சினை. எப்ப என்ன நடக்கும் என்டு பயந்து கொண்டு வாழுறது எங்கட தலைவிதியாய் போச்சுது'' என்று கூறிய வான்கார இளைஞனின் வாக்கியத்தில் கடந்த கால ரணங்களின் வாடை வீசுவதைத் தெளிவாக புரிந்து கொண்டான் விக்ரம்.

வான் ஓமந்தையை நெருங்கிக் கொண்டிருந்தது. விக்ரமின் உணர்வுகள் என்றுமில்லாதவாறு ஆவல் கொண்ட இதயத்துடன் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தன தன் சொந்தங்களைத் தேடி.

ஓமந்தைச் சோதனை சாவடிகளைத் தாண்டி வான் விரைந்து கொண்டிருந்தது. வழி எங்கிலும் போரின் அனர்த்தங்களால் விளைந்த தடங்களைக் கண்கொட்டாது தனக்குள் செலுத்திக் கொண்டிருந்த விக்ரமின் நினைவுகளும் பத்து வருடத்திற்கு முன் நடந்த சம்பவங்களை அசை போடத்தொடங்கின.

****

பசுமைக்குச் சாட்சி சொல்லும் வாழைத் தோட்டங்களும், வீறு கொண்ட தமிழனைப் போல் நிமிர்ந்து நிற்கும் பனந்தோப்புக்களும் சூழ்ந்த அழகிய கிராமத்தின் ஓலைக்குடிசை அவர்களது வாசஸ்தலம். குறைவின்றி நிம்மதியுடன் குதூகலிக்கும் விக்ரமும், வீணாவும்.

''அண்ணா, டேய் அண்ணா, எங்க என்ர ரமணிச் சந்திரன்ர கதைப் புத்தகம்'' என்று கோபத்துடன் வினாவியபடி வந்தாள் தங்கை வீணா.

''அண்ணா என்டு மரியாதையா கூப்பிட்டுப்போட்டு, பிறகு என்ன டேய் அண்ணா என்டு மரியாதையில்லாமல்'' என்று தங்கையைச் சீண்டினான் விக்ரம்.

''உனக்கென்ன மரியாதை வேண்டிக் கிடக்குது. என்ரகதைப் புத்தகத்தை எங்க எடுத்து ஒழிச்சனி'' என்ற வீணாவை நோக்கி

''வீணா உன் தலை மேல அடித்து சத்தியம் பண்ணி சொல்லுவன். நான் எடுக்கேல்ல அந்த புத்தகத்தை'' என்றான் விக்ரம்.

''நான் கெதியா சாகவேணுமென்டே என்ர தலையில சத்தியம் பண்ணுறன் என்னுறாய். பொறு அம்மாவை கூப்பிட்டால் தான் நீ சரிவருவாய் அம்மா... அம்மா.... இஞ்ச வாணை'' என்று கத்தினாள் வீணா.

அடுக்களையில் நின்றியிருந்த விசாலம் ''என்ன இரண்டு பேரும் சண்டை தொடங்கிட்டியளே, என்னால ஏலாது உங்களை விலக்கு பிடிக்க, என்னவாவது செய்யுங்கோ'' எனக் கூறிய வாசகங்கள் தினமும் நிகழும் சம்பவங்களில் இதுவும் ஒன்று என உணர்த்தியது.

''பொறு அப்பா வரட்டும். அப்ப நான் பார்த்துக் கொள்ளுறன் உன்னை'' எனத் தன் தோல்வியை ஒப்புக்கொள்ளாது எச்சரித்துவிட்டு போவாள் தங்கை வீணா. அப்பாவிடம் மரியாதை மிகுந்த விக்ரம், அவர் வருமுன்னே வீணாவை சமாதானப் படுத்தி விடுவான்.

அன்று ஓர் மாலை. தோட்டத்திலிருந்து தன் அப்பா சுந்தரம் மிகவும் அசதியாய் வருவதைக் கண்ட விக்ரம் ஓடிச் சென்று மண்வெட்டியை வாங்கிக் கொண்டான்.

''என்ன அப்பா ஏதாவது வருத்தமே?'' என வினாவினான்.

''இல்லை தம்பி சாதுவா நாரிக்க பிடிக்குது'' என்றார்.

''ஆஸ்பத்திரிக்கு போவம் வாரியளே'' என்றான்.

''வேண்டாமடா தைலம் ஏதாவது தேய்ச்சால் சரியாப் போவிடும்'' என்ற அப்பாவை அன்புடன் நோக்கினான் விக்ரம்.

உழைப்பின் கடுமையை அவரின் வக்ரம் பாய்ந்த திண்ணிய தோள்கள் உணர்த்தின. இருந்தாலும் எத்தனை நாட்களுக்கு அப்பாவின் உழைப்பில் வாழுவது? தான் ஓர் ஆண் மகன் என்ற உணர்வு அவனுக்குள் விசுவரூபம் எடுக்க ஆரம்பித்தது மெதுவாக யோசித்தபடி திண்ணையில் அமர்ந்தான்.

''அப்பா! நான் ஏதாவது வேலையில் சேரட்டே'' என மிகத் தயக்கமாக வினாவினான்''

சிறிது நேரம் எதுவும் பேசாது கண்மூடி அமர்ந்திருந்தவர் ''நீ வேலை செய்யிறதில எனக்கு ஒரு ஆட்சேபனையும் இல்லை. நாடு இருக்கிற சூழ்நிலையில உன்னை வேலைக்குவிடப் பயமாக இருக்குது'' என்று கவலையுடன் கூறினார். அக்கூற்றுக்களின் யதார்த்தத்தை உணர்ந்த விக்ரம் மௌனமானான்.

''அம்மாவைக் கூப்பிட்டு அந்தத் தைலத்தை எடுத்து வரச்சொல்லு'' என அவர் கூறிய தொனியிலேயே.

''என்னப்பா'' என வினாவியபடி அவ்விடம் வந்தாள் விசாலம்.

''தைலத்தை எடுத்துக் கொண்டு வா'' சரியான நாரிப் பிடிப்பாக்கிடக்குது'' என விசாலத்துக்கு ஆணையிட்டார்.

அவரின் கட்டளையை நிறைவேற்றிய விசாலம் ''நான் சொல்லுறனான். உந்த தோட்டம் தான் வாழ்க்கையென்று இருக்காதேயுங்கோ எண்டு, இப்ப பாருங்கோ என்ன நடந்தது என்று'' எனக் குமிறினாள் விசாலம்.

''என்ன கதையடி கதைக்கிறாய் தோட்டத்தில வேலை செய்யாட்டி வீட்டில எப்படி அடுப்பெரியும்'' எனக் கேட்டார் சுந்தரம்.

''தம்பியை எங்கேயும் வேலைக்குச் சேர்த்து விடுவம். கொழும்பில வேலை செய்யிற சின்னராசாவும் அங்கு ஏதோ வேலை கிடக்கெண்டு சொன்னவன்'' எனக் கூறிக்கொண்டு வந்த விசாலம் அப்பாவின் கண்களில் கோபம் தெறிப்பதைக் கண்டு பேச்சை முடிக்காமலேயே நிறுத்தினாள்.

''விசர்க்கதை கதைக்கிறாய். கொழும்பில எத்தின பேரைப் பிடிக்கிறாங்கள். எத்தின செய்தி பேப்பரில வருகுது. இதுகளைப் பார்த்துக் கொண்டு அவனை கொழும்புக்கு அனுப்பச் சொல்லுறாய். உனக்கு புத்தி மங்கிப்போட்டுதே'' என கோபம் சிறிதும் குறையாத குரலில் கூறினார்.

''இல்லையப்பா, இன்னும் எத்தின நாளைக்கு நீங்கள் கஷ்டப்படுவீங்கள். வீணாவுக்கும் கல்யாண வயது வந்திட்டால் அவளுக்குச் சீதனம், வீடு இதுக்கெல்லாம் என்ன செய்யிறது'' என தன் ஆதங்கத்தைக் கூறினாள் விசாலம்.

அவளின் கருத்து உண்மையெனப் புரிந்து கொண்ட அப்பா விடை கூற முடியாது யோசிக்கத் தொடங்கினார். இதுதான் தக்க தருணம் என உணர்ந்த விக்ரம் ''அப்பா இஞ்ச வேலை செய்யேலாட்டி என்ர பிரண்ட் ஒருத்தன் கட்டாரில் வேலை செய்யிறான் அவன் மூலமா நான் அங்கே போகட்டே'' என மெதுவாக வினாவினான்.

''எனக்கு இருக்கிறது இரண்டு பிள்ளையள். அதுல ஒண்ட கண்காணாத தூரத்தில் விட்டுட்டு.... சரி என்னவோ உங்கட விருப்பப்படி செய்யுங்கோ'' என அனுமதி கொடுத்தார் சுந்தரம்.

அப்பாவின் அனுமதி கிடைத்தவுடன் விக்ரம் வெளிநாட்டுக்குப் போவதற்கான ஆயத்தங்கள் வேகமாக நடந்தன. விக்ரம் போகும் நாளும் வந்தது.

''எனக்கு கல்யாணம், சீதனம் அது இதெண்டு நீ வெளிநாடு போக வேண்டாம் அண்ணா. இஞ்ச இருந்த மாதிரி கஞ்சியோ, கூழோ குடித்துக்கொண்டு சந்தோஷமாய் இருப்பம்'' என வீணா கண்ணீரோடு கூறினாள்.

''இல்ல வீணா நான் போய்த்தான் ஆக வேணும். அப்பா பாவம். உழைச்சு ஓடாய்ப் போய் விடுவார்'' எனக் கூறிய தங்கையிடத்தும் தாய், தந்தையிடத்தும் விடைபெற்றுப் பிரிவென்ற சோகத்தை நெஞ்சில் சுமந்தபடி தன் தாய் நாட்டையும் பிரிந்தான்.

இரண்டு வருடம் பூர்த்தியாகியது. சுந்தரம் குடும்பத்தின் வறுமை சிறிது சிறிதாக விலக ஆரம்பித்திருந்த காலத்தில் மிகப் பெரிய இடியொன்றை அக்குடும்பம் சந்திக்க நேர்ந்தது.

நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையில் வீணா ஷெல் வீச்சுக்கு பலியாகி இறந்து போன சம்பவம் விக்ரமை மீளாத் துயருக்கு இட்டுச் சென்றது.

சிறுபராயம் முதல் துள்ளித் திரிந்த தனது தங்கை கருகிய மொட்டுப்போல் அழிந்து போனதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. யார் நன்றாக இருக்கவேண்டுமென்று அவன் வெளிநாடு வந்தானோ, அவளே இல்லையென்ற சேதி அவனை அருண்டுபோக வைத்தது. அழுதான்.... அரற்றினான்.... ஏங்கினான்.... தாய் நாடு என்ற சொல் வேம்பாகக் கசக்க பத்து வருடங்கள் அங்கேயே தங்கி விட்டான்.

காலம் செல்லச் செல்ல தாய், தந்தையின் நினைவு அடிக்கடி எழத்தொடங்கியது. வேதனையைக் கண்டு விலகியிருப்பது எந்த விதத்திலும் நியாயமாகாது என அவன் மனச்சாட்சி கூறத் தொடங்கியது. வீணாவும் இல்லாது தாயும், தந்தையும் எவ்வாறு காலம் கழிக்கிறார்களோ என்ற உணர்வும், இறுதிக் காலத்தில் அவர்களுக்கு ஆறுதலாய் இருக்க வேண்டும் என்ற உணர்வும் அவனைத்

(... ஆம் பக்கம் பார்க்க)



# பணத்தாசையால் அழிந்த அழகி

காலை 9 மணி இருக்கும் அலுவலகத்திற்குச் செல்வதற்காக தனது வீட்டு மாடிப்படிகளால் இறங்கிக் கொண்டிருந்தான் அன்ரு ஜோய். எதிர்பாராத விதமாக மீண்டும் இரண்டாவது தடவையாக அவனுக்கு மாரடைப்பு ஏற்பட்டது.

"ஆ" என்று அலறியவாறு அவன் மாடிப்படியில் இருந்து உருண்டு கீழே விழ்ந்தான். அவனின் சத்தம் காதில் விழ்ந்ததும் சமயலறைப் பக்கம் நின்ற ஜீவி




பதறியடித்துக் கொண்டு அங்கே ஓடி வந்தாள்.

ஜோய் கீழே வீழ்ந்து கிடந்தான். அவனைக் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டுபோய் கட்டிலின்மீது படுக்கவைத்தாள் ஜீவி. கடந்த வாரமும் இப்படி ஒரு மாரடைப்பு அவனுக்கு ஏற்பட்டது.

மிகவும் ஆபத்தானதொரு கட்டத்தில் அவன் இருப்பதாக அப்பொழுது டாக்டர் தெரிவித்திருந்தார். முதல் தடவையாக மாரடைப்பு ஏற்பட்ட போது வைத்தியம் செய்த டாக்டரான விக்டரே இம்முறையும் வைத்தியம் செய்தார். இனிமேல் ஜோய் பிழைப்பதற்கான வாய்ப்புக்கள் மிக மிகக் குறைவு என அவர் கூறினார்.

ஜோய் தனது முதல் மனைவியின் மகள் பமீலாவை கடைசியாகப் பார்க்க விரும்பினான். லொஸ் ஏன் ஜல்ஸ் நகரில் உள்ள பிரபல உயர்தரப் பாடசாலை ஒன்றில் பமீலா படித்துக் கொண்டிருந்தாள்.

தந்தை சுகயீனமுற்றிருப்பதை ஜீவி பமீலாவுக்கு உடனடியாக அறிவித்து அவளை உடனே வீடுவந்து சேருமாறு கூறினாள்.

தகவல் கிடைத்ததும் பமீலா தனது விடுதியை விட்டுப் புறப்பட்டாள். ஊருக்கு வந்து சேர்வதற்கு இரவாகி விட்டது. அவள் வீதியில் டாக்சிக்காகக் காத்துக் கொண்டு நின்றாள். அப்போது திடீரென ஒரு கறுப்பு நிறக்கார் அவளருகே வந்து நின்றது.

அந்தக் காரைக் கண்டதும் அவள் உடல் நடுங்கியது. காருக்குள்ளே அமர்ந்திருப்பவர்கள் யாரெனத் தெரியாத அளவுக்கு கார் கண்ணாடிகள் கறுப்பு நிறத்திலேயே போடப்பட்டிருந்தன.

"நீங்க பமீலாதானே?" எனப் பமீலாவைப் பார்த்து அந்த மனிதன் கேட்டான். நடுக்கத்தோடு "ஆமாம்" என்றாள் அவள்.

"உங்களைப் பார்க்க அப்பா விரும்புகிறார். பேச நேரமில்லை உடனே காரில் ஏறுங்கள்" என்றான் அவன்.

கார் விரைந்து சென்று கொண்டிருந்தது. ஆனால், கார் பமீலாவின் வீட்டுக்குச் செல்லவில்லை வேறொரு மாளிகையைச் சென்றடைந்தது. பமீலா திகைத்து நின்றாள்.

அவள் சற்றும் எதிர்பாராத வண்ணம் அவன் அவளை அந்த மாளிகை நோக்கி இழுத்துக் கொண்டு அங்கிருந்த அறை ஒன்றுக்குள் சென்றான்.

மறுநாள் காலை ஜோயின் வீட்டில் ஒரே அழு குரல் அன்றிரவே ஜோய் இறந்துவிட்டான்.

இது நடந்து ஒரு மாதம் கழிந்தது. ஒரு நாள் ஜோயின் முதல் மனைவி புதுப் பிரச்சினை ஒன்றைக் கிளப்பிவிட்டாள். தன்னிடமிருந்து விவாகரத்துப் பெற்ற ஜோயின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும் அது கொலையாகவே இருக்கும் எனவும் பொலிஸாரிடம் தெரிவித்தாள்.

அதேவேளை தனது தந்தையைப் பார்ப்பதற்காக கல்லூரியில் இருந்து புறப்பட்டுச் சென்ற மகள் பமீலா இன்னும் வீடு வந்து சேரவில்லை என்றும் கூறினாள். இரண்டாவது மனைவி மீதே சந்தேகம் இருப்பதாகவும் அவள் கூறினாள்.

கோடீஸ்வரரான அன்ரு ஜோய், எலீஸ் என்ற பெண்ணை முதலில் திருமணம் முடித்திருந்தார். இருவருக்குமிடையில் மண வாழ்வு கசந்துபோனதும் ஜோய் எலீஸை விட்டுப் பிரிந்துபோய் ஜீவி என்ற 25 வயது இளம் நங்கையைத் திருமணம் செய்து கொண்டார். ஆனால், ஜோய்க்கோ வயது 50க்கும் மேல்.

எலிஸின் சந்தேகம் பொலிஸாரை உசுப்பிவிட்டது. இதேவேளை ஜீவியின் வீட்டில் இரவு நேரத்தில் ஆவிகள் அட்டகாசம் செய்வதாகவும் பரபரப்பாகப் பேசப்பட்டது.

ஒரு நாள் காலை ஜீவியின் வீட்டுக்கு கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் வந்தார். தான் பராமரிக்கும் அனாதை இல்லத்துக்கு நன்கொடை பெறுவதற்காகவே அவர் வந்திருந்தார்.

அந்தப் பாதிரியார் ஜீவியுடன் உரையாற்றிக் கொண்டிருந்த போது "இந்த வீட்டில் ஆவி நடமாட்டம்



இருப்பதை என்னால் உணர முடிகிறது. நீங்கள் அப்படி எதையாவதை கண்டிருக்கிறீர்களா? என்று கேட்டார்.

ஜீவி அதிர்ந்துபோனாள். ஒவ்வொரு இரவும் ஆவிகள் புரியும் அட்டகாசம் பற்றி ஜீவி விளக்கிக் கூறினாள்.

"இந்த ஆவிகளை விரட்டி பழைய நிலைக்குக் கொண்டுவர முடியும். நீங்கள் நாளை காலைப் தேவாலயத்திற்கு வாருங்கள்" என்றார் பாதிரியார்.

மறுநாள் காலை ஜீவி தேவாலயத்திற்குச் சென்றாள். "இந்த ஆவிகளை விரட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு முன் நீங்கள் செய்த பெரும்பாவங்களை என்னிடம் கூறி மன்னிப்புக் கேட்கவேண்டும்" என்றார் பாதிரியார்.

தனது கணவனினதும் அவரின் முதல் மனைவியின் மகள் பமீலாவினதும் கொலைக்குத் தானே காரணம் என்பதை ஜீவி ஒப்புக் கொண்டாள். தனது கணவரின் சொத்துக்களை அபகரிப்பதற்காக டாக்டர் ஒருவருக்கு பணம் கொடுத்து ஊசிமூலம் நஞ்சு ஏற்றி அவரைக் கொலை செய்ததாகவும், பமீலாவையும் ஆள்வைத்துக் கொலை செய்ததாகவும் ஜீவி தெரிவித்தாள்.

அவள் கூறி முடிப்பதற்குள் அவளைச் சூழ்ந்து கொண்டனர் பொலிஸார். அப்போதுதான் ஜீவிக்குத் தெரிந்தது பாதிரியாராக நடித்தவர் புலனாய்வுத் துறையின் முக்கிய அதிகாரி என்பது.

ஜீவியின் வீட்டில் ஆவிபோன்று அட்டகாசம் புரிந்தவர்கள் அந்தப் புலனாய்வுத்துறை அதிகாரி ஏற்பாடு செய்திருந்த ஆட்களே. ஆவி நாடகம் ஒன்றை நடத்தித் திறமையாகக் கொலையாளியைக் கண்டுபிடித்ததற்காக அவர் பாராட்டப்பட்டார். ஜீவி தூக்கிலிடப்பட்டார்.

இச் சம்பவம் வாஷிங்டன் நகரில் இடம் பெற்றது.

# தாய் மடி......

(9Aஆம் பக்கத் தொடர்ச்சி)

தாய் நாட்டுக்கு வரவைத்தது.

* * *

''அண்ணே! அண்ணே! யாழ்ப்பாணம் வந்திட்டுது. புன்னாலைக் கட்டுவன் தானே போகவேணும்'' என்று கேட்ட வான்காரனின் சத்தம் அவன் சிந்தனையைக் கலைத்துவிட ''ஓம் ஓம் புன்னாலைக் கட்டுவன் தான்'' என்று பதில் பகர்ந்தான் விக்ரம்.

சுற்றி நிற்கும் வாழைத்தோட்டங்களும், பனைமரங்களும் தனது கிராமம் இதுதான் என்பதைப் பறை சாற்றினாலும், திலகம் இழந்த விதவைப் பெண்போல் களையிழந்து, சோகம் இழையோட வெறுமையுடன் கிராமம் காட்சி தந்தது.

தனது வீடென அடையாளப்படுத்தும் குடிலின் முன்பாக வானை நிறுத்தினாலும் அங்கு யாரும் இல்லாதது கண்டு திகைத்த விக்ரம், அருகில் இருந்த அழகான புதியவீடு யாருடையதாக இருக்கும் என எண்ணியவாறு அவ்வீட்டுக்கருகில் சென்றான் 'வீணா இல்லம்' என்ற பெயரைக் கண்டவுடன் உணர்வு தத்தளிக்க நடுங்கிய கைகளால் கதவைத் தட்டினான்.

வயோதிபப் பெண்மணி தனது அம்மா தான் என்று அடையாளம் கண்ட விக்ரம் கதறியபடி அவள்கால்களில் விழுந்தான்.

''ஆர்... தம்பி.... விக்ரமே.... என்ர..... ராசா.... என்னடா சொல்லாமல் கொள்ளாமல் வந்திட்டாய்'' என வியப்பும் ஆனந்தமுமாக கண்ணீருடன் வினாவினாள்.

''அம்மா அப்பா எங்கே'' என தந்தையை காணும் ஆவலின் ஏக்கத்தினால் வெளி வந்தது அவன் சொற்கள்.

''அவர் இந்த நேரம் சாமி அறையில இருப்பார்'' என கண்ணீர் கன்னத்தில் வழிய கூறிய விசாலம் அவனைப் பற்றியிழுத்துக் கொண்டு சாமி அறைக்குள் விரைந்தாள். அங்கு அவன் கண்ட காட்சி.....!

வீணாவின் படத்தின் முன் அவன் தந்தை கண்மூடிய படி..

''அப்பா.... அப்பா....'' என மிக மெதுவாகத் தந்தையை அழைத்தான்.

மெதுவாகக் கண்களைத் திறந்தவர் அவனைக் கண்டு கட்டித்தழுவியபடி வீணாவின் படத்தைக் காட்டி வேதனையுடன் குமுறினார்.

''வீணாவின் இழப்பு மூன்று ஜீவன்களை நடைபிணமாக்கி நிலைதடுமாற வைக்கிறது. இதுபோல் இன்னும் எத்தனை குடும்பங்களோ?'' விக்ரம் மனத்திற்குள் வினாவெழுப்பிக் கொண்டான்.

மூன்று பேரின் கண்களில் இருந்தும் கண்ணீர் மடைதிறந்த வெள்ளம் போல் புரண்டோடிக் கொண்டிருந்தது.

சுவரில் தலைசாய்த்து ஏங்கி அழுது கொண்டிருந்த தாயாரின் அருகில் சென்று அவள்மடியில் தலை சாய்த்து அவன் கதறினான். வேதனைகளின் சுமை கரைந்து கொண்டுபோவதை உணர்ந்தது அவன் மனம்.

''எத்தனை துன்பங்கள் நேர்ந்தாலும், சோகங்கள் சூழ்ந்தாலும், வேதனை மிகுந்தாலும் தாய் நாட்டில் தாய் அன்பில் வாழ்வதே நிஜமான வாழ்வு'' என்பதை அக்கணமே உணர்ந்த விக்ரமுக்கு பத்தாம் வகுப்பில் படித்த முதுமொழியொன்று நினைவுக்கு வந்தது.

''பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்

நற்றவ வானிலும், நனி சிறந்தனவே''


'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ.23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250300 Col. Cms) | | |

# பித்தன் பதில்கள்

*த.வானதி— தெஹிவளை.*

**கேள்வி:-** *பித்தா! தற்போதெல்லாம் பெண்கள் சேலை கட்டுவது குறைந்து வருகிறதே... இப்படியே போனால் எதிர்காலத்தில் நமது பாரம்பரிய ஆடையான சேலை காணாமல் போய் விடுமோ?*



பண்டைய கால பெண்கள் அணிந்த உடை: 'சேலை'

**பதில்:—** ஆமாம்... சில ஆண்டுகளில் தொல்பொருட்காட்சிச் சாலைகளில் பண்டைய காலப் பெண்கள் அணிந்த உடை. சேலை என்று இதற்குப் பெயர் என்ற குறிப்புடன் சேலை பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கும்.

*ச.தயாளன்— கொட்டடி.*

**கேள்வி:-** *பித்தா! நமது நாட்டில் வெளிநாட்டு முதலீடுகளினால் உள்ளூர் முதலீட்டாளர்களுக்கு மதிப்பில்லாமல் இருக்கிறதே! ஏன் பித்தா?*

**பதில்:—** வெளிநாட்டு முதலீட்டாளர்கள்— உள்ளூரிலே முதலீடு செய்யும்போது பணத்தைக் கணக்கு—வழக்கின்றி செலவு செய்வார்கள். ஆனால், உள்ளூர் முதலீட்டாளர்கள் அப்படி அல்ல. பிசிநாறிகள்... ஐந்துக்கும்— பத்துக்கும் கணக்குக் கேட்பார்கள். அதனால் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு உள்ளூரிலே கிராக்கி அதிகம்தான். ஆனால், வெளிநாட்டிலிருந்து வந்து இங்கே முதலிடுவோருக்குக் கொஞ்ச நாட்களில் இங்கேயுள்ள முதலீடுகளில் சலிப்பு ஏற்பட்டு விடுவதுண்டு. அதனால்... கொஞ்ச காலத்தில் இங்கேயுள்ள முதலீடுகளை கைவிட்டுவிட்டு ஏற்கனவே தங்கள் நாடுகளில் முதலீடு வைத்துள்ளவைகளைக் கவனிக்கச் சென்றுவிடுகிறார்கள். அல்லது வேறொரு புது நாட்டுக்கு முதலிடச்சென்றுவிடுகிறார்கள். எனவே, உள்ளூர் முதலீட்டுக்காரர்களே நிரந்தரமானவர்கள்.

**பின்குறிப்பு:—** தயாளன்... நீர் பண முதலீடு செய்பவர்களைப் பற்றித்தானே கேட்டீர். ஏனென்றால் அதற்குத்தான் இந்தப் பதில் எழுதியிருக்கிறேன். அல்லது வேறேதும் அர்த்தத்தில் கேட்டிருந்தால்....அதற்கும் இந்தப் பதில் பொருந்தும்.

*செ.அன்பழகன்— வெள்ளவத்தை.*

**கேள்வி:-** *பித்தா! ஏற்கனவே உமக்கு ஒரு காதலி இருந்ததாகவும், நீர் எங்கோ வெளிநாடு சென்றிருந்தபோது உமது காதலி வேறொருவரைத் திருமணம் செய்துகொண்டு போய்விட்டதாகவும், பின்னர் நீர் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்து உமது காதலியைத் தேடிப்பிடித்து காதலைத் தொடர்ந்ததாகவும், ஆனால் உமது பெற்றோர் அதனை எதிர்த்து உமக்கு வேறொரு திருமணம் செய்து வைத்ததாகவும், நீர் உமது பழைய காதலியை மறக்க முடியாமல் தொடர்ந்து அவருடன் சிநேகிதம் வைத்திருப்பதாகவும், இந்தக் கதையெல்லாம் உமது மனைவிக்குத் தெரிந்ததால்தான் உமக்கும், அவருக்கும் அடிக்கடி பிரச்சினைகள் வருவதாகவும் கேள்விப்பட்டேனே. உண்மையா?*

**பதில்:—** ஆஹா...கிளம்பிட்டாங்கய்யா கிளம்பிட்டாங்க. பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸின் சொந்தக் கதையை அப்படியே என் கதையாக மாற்றிச்சொல்லி என்ட குடும்பத்தைக் குழப்புறதென்ட முடிவோட கிளம்பிட்டாங்கய்யா. ஏ... ராசா... நான் உனக்கு என்ன கொடுமை பண்ணினன் ராசா... ஏனய்யா... இந்தப் பிள்ளை பூச்சின்ர குடும்பத்தில் புகுந்து குழப்பம் பண்ணறாய் ஐயா... சாமி... விட்டுர்ரா அப்பு...

*க.தாஸ்குமார்— திருநகர்.*

**கேள்வி:-** *பித்தா! நீர் உமது மனைவிக்குப் பயந்து வாழ்வது எமது ஆண் வர்க்கத்துக்கே அவமானம். இது உமக்குத் தெரியவில்லையா?*

**பதில்:—** யோவ்... ஊரிலே அவனவனே வாங்கிக்கட்டிக்கொண்டு 'கம்' என்றிருக்கிறான். நான் மட்டும் கொஞ்சம் வெட்கம் மானம் விட்டு வெளியே சொல்லித்திரிகிறேன். அவ்வளவுதான்.

*வி.கேமநிலா—கரந்தாய்.*

**கேள்வி:-** *மை டியர் பித்தா! பிளீஸ் என் கவலைகள் தீர சிரிக்கும்படி ஒரு ஜோக்கை எடுத்து விடுங்களேன்.*



**பதில்:—** ஒரு வீட்டிலே ஒரு மாமியாரும்— மருமகளும் இருந்தார்கள். அவர்கள் இருவரும் தினமும் ஏதாவது விடயத்தில் சண்டை போட்டுக்கொண்டே இருப்பார்கள். இருவருக்கும் அந்த வீட்டில் தான் தான் பெரியவர் என்ற எண்ணம். இதனால் அடிக்கடி இருவருக்கும் சண்டை வருவதுண்டு. ஒருநாள் அந்த வீட்டுக்கு ஒரு பிச்சைக்காரன் வந்தான். மாமியார் வீட்டிலே இல்லை. மருமகள் மட்டும்தான் இருந்தாள். எனவே, பிச்சைக்காரன்— மருமகளிடம் தனக்கு ஏதாவது பிச்சைபோடும்படி கேட்டான். ஆனால் மருமகளோ "இங்கே ஒன்றும் இல்லை. போ... போ.. "என்று அவனை விரட்டிவிட்டாள். கவலையுடன் பிச்சைக்காரன் அந்த வீட்டை விட்டு வெளியேறினான்.

அப்போது எதிரிலே மாமியார் வந்தார். பிச்சைக்காரனிடம் விபரத்தைக் கேட்டாள். பிச்சைக்காரனும் தான் மருமகளிடம் பிச்சை கேட்டதையும், மருமகள் எதுவும் இல்லை போவென்று விரட்டியதையும் விபரமாகக் கூறினான்.

அதனைக் கேட்டுக் கோபமடைந்த மாமியார் ''உன்னை யார் அவளிடம் பிச்சை கேட்கச் சொன்னது? நீ வா... நான் அவளிடம் கேட்கிறேன்'' என்று கூறியபடி மருமகளை அழைத்தாள். அழைப்பைக் கேட்டுவெளியே வந்த மருமகளிடம் ''இந்தப் பிச்சைக்காரனுக்கு எதுவுமே இங்கே இல்லை என்று சொல்லி அவனை வெறுங்கையுடன் அனுப்பி விட்டாயாமே? உன்னை யார் இப்படி பேசச் சொன்னது?'' என்று கேட்டு திட்டத் தொடங்கினாள்.

இதனைக் கண்ட பிச்சைக்காரன் ஆஹா... மாமியார் தான் தர்ம தேவதை என்று எண்ணத் தொடங்கினான். தனக்கு இன்று பெருமளவு பிச்சை மாமியாரால் வழங்கப்படும் என்று எதிர்பார்த்தபடி காத்திருந்தான்.

அப்போது பிச்சைக்காரன் பக்கம் திரும்பிய மாமியார் சொன்னாள், ''இந்த வீட்டிலே உனக்கு பிச்சை இல்லை என்று சொல்ல அவளுக்கு எந்த அதிகாரமும் கிடையாது. இந்த வீட்டிலே நான்தான் எல்லாம். எனவே இப்போ நான் உனக்குச் சொல்கிறேன். இங்கே எது



வுமே உனக்கு பிச்சை தருவதற்கு இல்லை. போய்விட்டு வா'' என்றாள். பிச்சைக்காரனுக்கு தலைசுற்றத் தொடங்கியது.

*செ.மனோகரன்— ஆலடி உடுவில்.*

**கேள்வி:-** *தத்துவ ஞான வித்தகரே! பித்து ஐயா! சேலை கட்டிய மாந்தரை நம்பாதே என்று முன்னைய காலத்தில் சொல்லி இருக்கிறார்களே! இதன்படி பார்த்தால் இந்தக் காலத்து அரை குறை உடுப்புப் போடுபவர்களை நம்பலாமா? இதற்குத் தகுந்த விளக்கம் தேவை.*

**பதில்:—** அன்பின் மனோகரனுக்கு. நான் அறிய எனது வாழ்க்கையில் ஒரு தத்துவம் கூடக் கூறியது கிடையாது. ஆனாலும் எனக்கு இந்தப் பெரிய பட்டத்தைத் தந்து தொலைத்ததற்காக நன்றி. அடுத்து உமது கேள்விக்குப் பதில்: அந்த காலத்தில் அதாவது பட்டினத்தார் காலத்தில் பெண்கள் எல்லாரும் சேலை கட்டினார்கள். அதனால் அவர் சேலை கட்டிய மாந்தரை நம்பாதே என்று பாடினார். அதற்குப் பின்னர் பெண்கள் ஸ்கேட் போட்டு ஜீன்ஸ் போட்டு இப்போ வெட்டு வைத்த சட்டை போடும் காலத்திலே எல்லாம் பட்டினத்தார் பிறக்கவில்லை.



அதனால் பழைய சேலையே தற்போதும் அமுலில் இருக்கிறது. ஆயினும் பட்டினத்தார் பெண்கள் விடயத்தில் நொந்து நூலாகி அந்து அவலாகி பொத்தாம் பொதுவில் பெண்களை நம்பாதே என்பதை ஒரு லேசான மோனையுடன் சொல்ல வேண்டுமென்பதற்காகவே அப்படிச் சொன்னார். ஆனால் சில சமயம் அவர் மறுபடியும் பிறந்து வந்தால் சேலை கட்டிய மாந்தரை நம்பாதே — அரை குறை ஆடை அணிந்த பெண்களை நம்பவே நம்பாதே என்று தான் பாடியிருப்பார்.

*சுரேஷ்— கல்முனை.*

**கேள்வி:-** *பித்துக் குட்டிக்கு! ஊருக்குள் நாய் ஊளைவிட்டால் ஊரிலே ஏதோ கூடாதது நடக்கப் போகிறது என்று பெரியவர்கள் சொல்வார்கள். ஆனால் ஊடகங்களின் வாயிலாக சில உருக்கள் ஊளை யிடுகின்றனவே! என்ன நடக்கும்?*

**பதில்:-** பித்தன் சைலன்ஸ்..... NO COMMENTS

*ஆ.லூசியா மேரி. புளியங்குளம் ஆ.ப.ம.*

**கேள்வி:** *பித்தா! பாதிக்கப்படும் பெண் நீதி கேட்டால் அவளுக்கு சட்டம்–சமூகம் எல்லாம் உதவுகின்றன. ஆனால் பெண்ணால் ஆண் ஏமாற்றப்படும் போதும் பாதிக்கப்படும் போதும் ஆதரவுதர எதுவும் இல்லையே! ஏன் பித்தா?*

## பித்தனின் கேள்வி

**கேள்வி:-** *உச்சி முதல் பாதம் வரை காதலிக்கும் ஆண்கள் பற்றி என்ன நினைக்கிறீர் பித்தா?*

## வாசகர்கள் பதில்கள்

*இளவேனில்— யாழ்ப்பாணம்.*

திருமணம் எனும் தனிநாடு கேட்டு போராடும் காதல் போராளி.

*வா.சதாசிவம்— புவக் பிட்டிய.*

ஆசை அறுபதுவரை, மோகம் முப்பது வரை. இந்த ஆண்களின் உள்ளமும் அப்படித்தான்.

*பி.தீபா, ஏழாலை.*

தற்போது பெண்களின் உச்சியிலிருந்து பாதம் வரை தங்க நகைகள் ஜொலிப்பதால் அவர்களிடம் உள்ளது ஆணின் உள்ளத்தைக் கவர்கிறது.

*கவி— சாவகச்சேரி.*

இரசனையுள்ளவர்கள். அதனால் தான் அணு அணுவாய் இரசிக்கிறார்கள்.

*நித்தி— கொழும்பு.*

வெட்டியாகப் பொழுதைக் கழிப்பவர்கள் தான் இந்த வேலை பார்ப்பார்கள்.

**பதில்:-** 'தேவதையை கண்டேன்' படம் பார்த்துவிட்டு இந்த கேள்வியை எழுப்புகிறீர் போல் தெரிகிறது. உண்மை தான் இதையெல்லாம் யார் தட்டிக்கேட்கிறார்கள். இந்த லட்சணத்தில் தமக்கு சம உரிமை பெண்விடுதலை எல்லாம் வேண்டுமென்று போராட்டம் வேறு செய்கிறார்கள். உண்மையைச் சொன்னால் இந்த பெண்களிடம் இருந்து விடுதலை கிடைக்க வேண்டுமென்று ஆண்கள்தான் போராட்டம் நடத்த வேண்டும். ஆனால் யாருக்கு துணிவு வருகிறது. போராட்டத்தை நடத்திவிட்டு வீட்டுக்கு எப்படிப் போவது என்ற கவலை பலருக்கு.

*எஸ்.கண்ணன்— சாவகச்சேரி.*

**கேள்வி:-** *பொதுவாக எல்லோருமே தமக்கு ஏதாவது ஒரு தீர்க்க முடியாத பிரச்சினை என்று வரும்போது 'எனக்கு மட்டும் ஏன் இப்படி வருகிறது?' என்று புலம்புவார்களே? இது எதனால் பித்தா?*

**பதில்:—** வீட்டுக்கு வீடு வாசல்படி என்பது அவர்களுக்குப் புரியாததால் தான். எப்போதுமே தமது பிரச்சினைகளை மட்டும் பார்க்காது தமக்குக் கீழ் இருப்பவர்களது சூழ்நிலைகளையும் பார்த்து அவர்கள் வாழக் கற்றுக்கொண்டால் ஒருவேளை இப்படியெல்லாம் புலம்புவதை எல்லாம் அவர்கள் நிறுத்திவிடுவார்களோ என்னவோ...

*ச.உத்தரா. கண்டாவளை*

**கேள்வி:-** *பித்தா உம்மிடம் நிறையப் பணம் இருப்பதாக எனது நண்பன் கூறுகின்றான் உண்மைதானா?*

**பதில்:-** ஓ.... நிறைய .....நிறைய.... இருக்கிறது . எனது வீட்டு உண்டியலில் சில்லறையாக.

*சங்கீதா— யாழ்ப்பாணம்.*



**கேள்வி:-** *மனிதர்களை எதுவரை நம்பலாம்?*

**பதில்:—** அவர்கள் எம்மை ஏமாற்றும் வரை.

*ஜெ.துஷாந்தி— கொழும்பு.*

**கேள்வி:-** *சிரிக்கும் பெண்களை நம்பலாமா?*

**பதில்:—** சினக்கும் பெண்களை நம்பலாம்.

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:—

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான — குறும் பான யதார்த்தமான—பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை மார்ச் 19ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.



**கேள்வி:-** *அரைகுறை ஆடை அணிந்துவரும் பெண்கள் ஆண்களை பார்த்து அவஸ்தைப் படுவதேன்?*

**பதில்:—** அணிந்து வரும் ஆடையே ஓர் அவஸ்தையாக இருப்பதால் தானோ என்னவோ!


பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85, ஜெயந்தமல்லி மாராய்ச்சி வீதி,
கொழும்பு - 14.

# மாணவருக்கு ஏற்படும் அச்சம், பயம் தன்னம்பிக்கை குறைவே காரணம்

இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார் டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம் நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஐயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு – 14

**கேள்வி : வயது 18. கல்வி கற்கின்றேன். ஆசிரியர் பாடம் படிப்பிக்கும் போது ஒரு பயம், நடுக்கம் ஏற்படுகிறன. வைத்தியர்கள் பலரிடம் சிகிச்சை பெற்றேன் பலனில்லை. இது எதனால் ஏற்படுகிறது.**

பதில் : உங்களிடம் தன்னம்பிக்கை, தைரியம் குறைந்து இருக்கின்றது. இதனால் ஆசிரியர் படிப்பிக்கும் போது இடையில் ஏதாவது கேள்வி கேட்டு மற்றைய மாணவர் முன்னிலையில் கேவலப்படுத்தி விடுவாரோ என்று அடிமனதில் பயம் ஏற்படுகிறது. பாடசாலை நேரத்தில் மட்டும் இது வருவதால் இது நோயல்ல. உங்கள் மனப்பயம் இப்படி வெளியே வருகிறது. நீங்கள் உங்கள் பாடங்களை சரியாக கற்று வகுப்புக்கு செல்லுங்கள். அப்படியே கேள்விகள் கேட்கப்பட்டாலும் விடை தெரியவில்லை என்றால் தெரியாது என்று நேரிலே சொல்லப் பழகுங்கள். பாடங்களை கசடறக்கற்றால் கேள்விகள் பற்றிய பயம் ஏற்படாது. மனத் தைரியம் வரும். வகுப்புபாடங்களை மற்றைய மாணவருடன் சேர்ந்து குழுவாக படியுங்கள். உங்கள் சந்தேகங்கள் அப்பொழுது தீருவது மட்டுமல்லாமல், கேள்விகளுக்கு பதிலளிக்கும் தைரியமும் வரும். உங்களுக்கு தெரிந்த பாடங்களை மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுங்கள். தன்னம்பிக்கை வளரும். பாடங்கள் உங்களுக்கும் தெரியும் என்று, மனதில் இருந்த பயம் மறைந்து விடும். எத்தனையோ இன்றைய பெரிய அறிஞர்கள், விஞ்ஞானிகள், அரசியல் தலைவர்கள் எல்லாரும் இப்படி இளவயதில் தன்னம்பிக்கை வளர்க்கும் முயற்சிகளில் இறங்கினார்கள். இதனால் உலகில் பேசப்படுபவர்களாக விளங்குகின்றார்கள்.



ஓய்விருக்கும் வேளையில் அறிஞர்கள், ஞானிகள் போன்றவர்களின் நுல்களை, சரித்திரங்களை, சுயசரித்திரங்களை படியுங்கள். திரு. சுகிசிவம், திரு. உதயமூர்த்தி, சுவாமி விவேகானந்தா போன்றோர் உங்களைப் போன்ற இளைஞர்களை தட்டி எழுப்பி தன்னம்பிக்கை இல்லாது இருந்தவர்கள் தான். ஆனால் அவர்கள் உங்களைப் போல் சோர்ந்துவிடவில்லை தன்னம்பிக்கை பெறும் வழிகளை நுல்களாக வடித்திருக்கின்றனர். வாங்கிப் படித்து பயன் பெறுங்கள்

**கேள்வி: ஆண். வயது 21. சிலவேளைகளிலும், சிறுநீர் கழித்த பின்னரும், ஆணுறுப்பிலிருந்து துர்நாற்றம் வீசுகின்றது. காரணம் என்ன? பரிகாரம்கூறவும்.**

பதில் : ஆண் உறுப்பின்முன் பகுதி ஒரு தோலால் மூடப்பட்டுள்ளது. இதனை PREPUCE அல்லது முன்தோல் என்று குறிப்பிடுவர். இந்த தோல் உட்பகுதியில் சில சுரப்புகளைக் கொண்டுள்ளது. அது தவிர தோலிலிருந்து தினந்தோறும் கலங்கள் (CELLS) வளர்வதும் உதிர்வதுமாக செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. (இந்தக் கலங்கள் வளர்வதும், உதிர்வதும் எமது தோலில் எந்தப்பகுதியிலும் நடைபெறுகிறது. ஆனால் அவை அப்படியே காற்றோடும் நாம் குளிக்கும் போது நீரோடும் வெளியேறி விடுகின்றன.) ஆண்குறி மூடப்பட்ட ஒரு உறுப்பாக இருப்பதால், இந்த உதிரும் கலங்களும், சுரப்புகளும் சேர்ந்து வெண்ணிறமான செதில் போன்ற, உறல்புடையான திடப்பொருளை உருவாக்கின்றன. இதனை SMEGMA என்று கூறுவர். இவை முன்தோலுக்கும், ஆண் உறுப்பின் தலைப்பாகமான CORORA பகுதிக்கும் இடையில் சேர்ந்து கிடக்கின்றன. உண்மையில் உடலுறவின் போது இந்த 'ஸ்மெகமா' என்பது ஒரு வழுக்கல் அல்லது கிறீஸ் (GREASE) போன்ற LUBRICANTS ஆக செயற்படுவதால், விறைத்து நிற்கும் ஆண் உறுப்பின் மேல், தோல் வழுக்கி முன்னும் பின்னும் இழுபட உதவி புரிகின்றன.

ஆனால் இவை அதிகமாக சேர்ந்தும் அகற்றப்படாமலும், சிறுநீருடன் கலந்தும் இருக்கும் போது துர்நாற்றம் ஏற்படும். இதனால் வாலிபர்கள் குளிக்கும் போது முன்தோலை மெதுவாக பின்னோக்கி இழுத்து, இந்த சேர்ந்திருக்கும் ஸ்மெக்மாவை அகற்றி சுத்தம் செய்ய வேண்டும். அப்படி செய்யாவிடில் சிலவேளைகளில் இந்த இடங்களில் தொற்று ஏற்பட வாய்ப்புண்டு.

குழந்தைகள், சிறுவர்கள் பருவத்தில் கூட தாய்மார் மெதுவாக இந்த சுத்தம் செய்யும் செயலை கைக்கொள்வது நல்லது. சிலருக்கு முன்தோலை பின்னோக்கி இழுத்து சுத்தம் செய்ய, தோல் இடம் தராது. இப்படியான நேரங்களில் சில வைத்தியர்கள் 'சுன்னத்' என்கின்ற Circumcission சத்திரசிகிச்சையை செய்து முன்தோலை அகற்றிவிடுவார்கள். சில மதங்களில், சுகாதாரத்திற்காக இந்த சிகிச்சை மத அனுட்டானமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. நான் மருத்துவ கல்வி கற்ற காலத்தில், Smegma ஒரு கான்சரை தூண்டும் இரசாயனமாக கருதப்பட்டு, முன்தோல் அகற்றுவது அறிவுறுத்தப்பட்டது. ஆனால், இன்று Smegma அத்தகைய கான்சரின் முன்னோடி பதார்த்தம் அல்ல என்று பிரித்தானிய மருத்துவ சபையே அறுதியிட்டு கூறியுள்ளது.

**கேள்வி : உணவு சாப்பிடும் போது கடிய பதார்த்தம் ஒன்றை இறுக்கமாக கடித்தனால் பல்வலி வந்தது. பல் டாக்டரின் மருந்தின் பின்னர் சுகமாகிவிட்டது. அதன் பின் பாதிக்கப்பட்ட பல்லின் அடிப்பாகத்தில் முரசில் பொக்களம் ஒன்று வந்தது. அது உடைந்தால் சீழும் ரத்தமும் வரும். பொக்களமும் காணாமல் போய் விடும். ஆனால் திரும்ப திரும்ப பொக்களம் வருவதும் உடைவதுமாக இருக்கின்றது. இதற்கு என்ன செய்வது?**

பதில் : உங்களுக்கு எற்பட்டிருப்பது DANTAL CYST. பல்வேரில் ஏதாவது தொற்றுகள்ஏற்பட்டால் இப்படி வருவதற்கு சாத்தியம் உண்டு. ஆனால் கடின பதார்த்தம் கடித்ததனால் இது ஏற்பட்டிருக்குமோ என்பது சந்தேகமே. பற்சிதைவு, பற்களில் கறை படிதல் என்பதால் இது எற்படவாய்ப்பு உண்டு. இந்த பற் பகுதியை விசேட எக்ஸ்றே எடுத்து பல் வைத்திய நிபுணரைக் கொண்டு இந்த பொக்களத்தின் உட்பகுதியை வழித்து அகற்ற (CURETTE) வேண்டும். தகுந்த பற்சிகிச்சை நிபுணரின் ஆலோசனையை பெறுங்கள்.

**கேள்வி : பெண் வயது 50. சறுக்கி விழுந்ததால் முழங்கால் மூட்டின் சிரட்டை விலகிவிட்டது. பின்னர் பிளாஸ்ரர் போட்டு சரியாக வந்துவிட்டது. ஆனால் இப்போது சரியாக மடிக்க முடியாது ஆலோசனை தரவும்.**

பதில்: DISLOCATION OF PATTELLA என்பது வயதான நேரத்தில் காலை சரியாக வைக்காமல் நடக்க முயலும் போது வழுக்கி விழும் போது இருந்த இடத்திலிருந்து விலகிவிடும். சிலவேளை தொடையில் உள்ள பலமான தசைகள் இந்த சிரட்டையில் தொடர்பாக இருப்பதால் விழும் போது சிரட்டை இரண்டு பகுதிகளாகவோ, மூன்று பகுதிகளாகவோ உடைய நேரிடும் (FRACTURE DISLOCATION OF PATTELLA) உங்களுக்கு என்ன ஏற்பட்டது என்பதை உங்கள் கடிதத்திலிருந்து விளங்கிக் கொள்ள முடியவில்லை. முன்னைய விலகல்மட்டும் உடைந்திருந்தால் காலுக்கு முழுதாக பிளாஸ்ரர் போட வேண்டிய அவசியம் இருந்திராது. BACK SLAB என்கின்ற காலின் பின்புறத்திற்கு ஆதாரமாக ஒரு 'பாதி' பிளாஸ்டர் போட்டு தொடைத்தசைகள் இறுக்கமாக வருவதற்கு இயன்முறை சிகிச்சை என்கின்ற PHYSIO THERAPY தொடர்ந்து ஒரு மாதம் செய்து வர வேண்டும். அப்படி பயிற்சியை எடுக்காவிடில் முழங்கால் மூட்டு இயங்கும் திறன் குறைந்து கடினமாகி ( STFFNESS) மடக்க கஷ்டமாக இருக்கும். சிரட்டை உடைந்து விலகியிருந்தால் சிர்ட்டையை கம்பி கொண்டு இணைத்து தொடை அரைவாசியிலிருந்து குதிக்கால் வரை முழுமையாக பிளாஸ்டர் போட்டு இயன்முறை சிகிச்சை கொடுக்கப்பட வேண்டும். சிகிச்சையின் வெற்றி நீங்கள் பிளாஸ்ரரில் இருக்கும் போது தசைகள் வலுவிழந்து போகாமல் இருக்க எடுக்கும் தசை பயிற்சிகளில்தான் தங்கியுள்ளது. இப்போது ஒன்றும் கெட்டு விடவில்லை. உடனடியாக இயன்முறை சிகிச்சை பெறுங்கள். உங்கள் வாழ்க்கையை சுமுகமாக கொண்டு நடத்தும் அளவிற்கு முழங்கால் மூட்டு சரியாகும்.



# செவ்வாய்க் கிரகத்தில் சுரங்கம்

இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டிலே மனிதன் விஞ்ஞானத்தினூடாக அளப்பரிய சாதனைகளை நிலைநாட்டி அதில் உச்ச வளர்ச்சி கண்டு வீறுநடை போட்டுக்கொண்டிருக்கிறான்.

அதன் உச்சபெறுமானமாகவே செவ்வாய்க் கிரகத்துக்கு ஆய்வுக்கலங்களை அனுப்பி ஆய்வுசெய்யுமளவுக்கு வளர்ச்சி கண்டிருக்கிறான்.

விண்வெளியில் மனிதன் செய்துவரும் சாதனைகள் பலவிதப்பட்டுக்காணப்படுகின்றன. புவிஈர்ப்பு எல்லையைத்தாண்டிச்செல்லும் ரொக்கட்டுக்களைக் கண்டுபிடித்தது முதல் இன்று செவ்வாய், சனி, வியாழன் என்று பல இடங்களுக்கும் செயற்கைக் கோள்கள் மற்றும் ஆய்வுக் கலங்களை அனுப்பி விஞ்ஞானிகள் தீவிரமாக ஆய்வு நடத்தி வருகிறார்கள். சந்திரனுக்கு மனிதனை அனுப்பிய பின்பு வேறு எந்தக் கிரகத்துக்கும் மனிதனை அனுப்பவில்லை. விண்வெளியில் சர்வதேச விண்வெளி நிலையத்தை நிறுவி ஆய்வு செய்து வருகிறார்கள்.

இந்த ஆய்வுகளின் தொடர்ச்சியாக சந்திரனுக்கும் செவ்வாய்க் கிரகத்துக்கும் மனிதர்களையும் ஆய்வுக் கருவிகளையும் அனுப்பி வைக்க விஞ்ஞானிகள் முடிவு செய்து உள்ளனர்.

விண்வெளி ஆய்வில் பல அற்புதங்கள் இன்னும் சில ஆண்டுகளில் நடக்கப் போகின்றன. அமெரிக்காவின் விண்வெளி ஆய்வுமையமான நாசா மற்றும் ஐரோப்பிய விண்வெளி ஆய்வுமையம் போன்றவை இது தொடர்பான ஆய்வுகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

இந்த ஆய்வுகளின் ஓர் அங்கமாக பூமிக்கு அருகில் இருக்கும் சந்திரனுக்கும் நீண்ட தூரத்தில் இருக்கும் செவ்வாய்க்கும் விண்கலங்கள் மற்றும் மனிதர்களை அனுப்பும் திட்டம் தயாராகி வருகிறது.

சந்திரனில் விண்வெளி நிலையம் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அங்கு விண்வெளி நிலையம் அமையும் வேளையில் அங்கிருந்தே பிற கிரகங்களுக்கு செயற்கைக் கோள்களையும் ஆய்வுக்கருவிகளையும் அனுப்ப முடியும்.

சந்திரனில் விண்வெளிநிலையம் அமைப்பதோடு மட்டுமின்றி அங்கு குடியிருப்புக்களை ஏற்படுத்தி மனிதர்களைக் குடியமர்த்தும் திட்டமும் விஞ்ஞானிகளிடம் உள்ளது. மேல் சந்திரனில் புதைந்து இருக்கும் அபூர்வ மற்றும் மனித வாழ்க்கைக்கு தேவையான கனிமங்களைச் சேகரித்து பூமிக்கு கொண்டுவந்து ஆய்வு செய்யவும் ஏற்பாடாகி உள்ளது.

சந்திரனில் அமைய இருக்கும் ஆய்வு நிலையத்தில் மனித இனத்துக்குப் பயன்படும் ஆராய்ச்சிகள் உட்படப் பல அணு ஆராய்ச்சிகளும் நடைபெறும் என்று கருதப்படுகிறது. சந்திரனில் உணவுப் பயிர்களைப் பயிரிடக் கூடிய சாத்தியக் கூறு உள்ளதா என்பதும் ஆராயப்படுகிறது.

ஆட்கள் இல்லாத புகைப்படக்கருவிகள் பொருத்தப்பட்ட விமானங்களை அனுப்பி நிலப்பரப்பை அவதானித்து அதன் அடிப்படையில் சந்திரன் மற்றும் செவ்வாய்க் கிரகத்தின் வரைபடம் தயாரிக்கப்படுகிறது. பின்னர் இதன் உதவியுடன் நிலத்தின்தன்மை பற்றிய ஆய்வுகளை நடத்த ஆய்வுக் கருவிகள் அனுப்பிவைக்கப்படும். இவை அங்கு தரை இறங்கி மண் மற்றும் அங்குள்ள கனிமங்கள் பற்றிய விவரங்களைச் சேகரித்து அனுப்பும். இந்த தகவல்களின் அடிப்படையில் சந்திரன் மற்றும் செவ்வாய்க் கிரகத்தில் எந்த இடத்தில் என்ன கனிமங்கள் எவ்வளவு அடியில் புதைந்து இருக்கின்றன என்பதும் கண்டு பிடிக்கப்படும்.



இந்த ஆய்வுகளின் ஓர் அங்கமாக செவ்வாயில் சுரங்கம் அமைக்கவும் விஞ்ஞானிகளால் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது அனுப்பப்பட்டுள்ள ஸ்பிரிட், சூப்பர்சூனிட்டி போன்றவை அளித்துள்ள தகவல்கள் மூலம் அங்கு கனிமங்கள் அதிகமாக உள்ளதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

இந்த ஆய்வின் தொடர்ச்சியாக 2008 ஆம் ஆண்டு போனிக்ஸ் மார்ஸ்லாண்டர் என்ற பெயரில் ஒரு ஆய்வுக்கலத்தை நாசா விஞ்ஞானிகள் அனுப்ப உள்ளனர். இதற்கு அடுத்தவருடத்தில் செலுத்தப்படும் ஆய்வுக்கலம் செவ்வாய்க்கு சென்று அங்குள்ள பாறைகளை வெட்டி எடுத்து ஆய்வு நடத்தும் திறன் கொண்டதாகும்.

சந்திரனைப்போன்று செவ்வாயில் எளிதாக ஆய்வுகளையும் சுரங்கப் பணிகளையும் நடத்த முடியாதுள்ளது. இதற்குக் காரணம் அங்கு அடிக்கடி வீசும் மணற்புயல் தான். இதன் காரணமாக இங்குள்ள தரையின் அமைப்பும் அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கும். மேலும் ஆய்வுக்கருவிகளும் மணற்புயல் காரணமாகப் பாதிக்கப்படும் அபாயமும் உள்ளது.

-பரா.சந்திரகுமார்-

இந்தப் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கு செவ்வாயில் சுரங்கம் அமைக்கும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. பூமியில் இருந்து செவ்வாய் செல்வதற்கு தற்போது ஏழு அல்லது எட்டு மாதங்கள் வரை பயணம் செய்ய வேண்டும். நாசா விஞ்ஞானிகளின் கருத்தின்படி 2030ஆம் ஆண்டில் இந்தப் பயணகாலம் ஒரு மாதமாகக் குறைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு குறைவு ஏற்படின் ஆய்விலும் கூடிய முன்னேற்றம் ஏற்படுவதுடன் விஞ்ஞானத்தின் விந்தைகள் மேலும் பல காணக்கூடியதாக இருக்கும்.

# தொல்காப்பியமும் ஐந்திரமும்!

இலக்கியப் பொழில்

தமிழரின் பண்டைக்காலத் தாயகமான குமரிக்கண்டம் கடற்கோள் நிகழ்வுகளினால் சிதறிச் சின்னாபின்னமாக்கப்பட்டு பல்லாயிரம் ஆண்டுகளின் பின்னரே ஆரியர் ஹைவர் கணவாயூடாக (இந்திய) துணைக் கண்டத்திற்குள் புகுந்தனரென்பது வரலாறு.

அவ்வாறு வந்தேறு குடிகளான ஆரியர்களே மூத்த மொழியான தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்ததாகச் சொல்லப்படுகிறது. அகத்தியர் ஆரியராம்; தொல்காப்பியர் ஆரியராம். தொல்காப்பியரின் பெயர் திரணதூமாக்கினி என்றும் அவரின் தந்தை சமதக்கினி என்றும் பிராமணரென்றும் வடமொழியினர் கூறி வைத்துள்ளனர். இவ்வாறான ஆரியரின் கட்டுக்கதைகளையிட்டு நாம் வாளாவிருக்க முடியுமா? சொல்வளமும் பொருள்வளமும் இலக்கணச் செறிவும் நிரம்பப் பெற்றது தமிழ் மொழி. ஆரியர் மட்டுமல்ல பல பிறமொழியினர் கூடத் தமிழ் மொழிச் சொற்களை உருமாற்றிப் புழக்கத்தில் கொண்டுள்ளமை பலருக்கும் புரியாத செய்தியா?

பாணினி என்பவர் வடமொழிக்கு இலக்கணஞ் செய்தார். அவர் செய்த இலக்கண நூலின் பெயர் 'அஷ்டாத்யாயீ' என்பதாகும். பாணினி இலக்கணஞ் செய்த பின்னர்தான் வடமொழிக்கு 'சமஸ்கிருத' எனும் பெயர் உருவாகிற்று. சமஸ்கிருத என்றால் நன்றாகச் செய்யப்பட்டது என்று பொருள்.

அசுவம் என்பது தூய தமிழ்ச் சொல். அசுவம் என்றால் குதிரை. அசுவக் கிழங்கு என்றோர் கிழங்குவகையுண்டு. அசுவகதி என்றால் குதிரை நடை. இந்த அசுவம் என்ற சொல்லே வடமொழியில் ஓசை மாற்றம் செய்யப்பட்டு 'அஸ்வ' என்று வழங்கப்படுகிறது. சிங்கள மொழியில் 'அஸ்வய' என்று வழங்கப்படுகிறது. ஆங்கில மொழியில் இச் சொல் ஹோஸ் (Horse) என்று வழங்கப்படுகிறது.

அலியன் என்பது தூய தமிழ்ச் சொல். அலியன் என்பது தனது கூட்டத்தை விட்டு வெளியேறிய யானைக்குத் தமிழில் வழங்கும் பெயர். இந்த அலியன் என்ற பெயர்தான் சிங்கள மொழியில் 'அலியா' என்று வழங்கப்படுகிறது. ஆங்கிலத்தில் எலிபன்ட் (Elephant) என்று வழங்கப்படுகிறது.

சண்டன் என்பது சூரியனுக்கான தூய தமிழ்ச் சொல். இப் பெயரில் 'டன்' என்ற விகுதி நீக்கப்பட்டு 'சண்' என்ற பகுதி ஆங்கில மொழியில் சூரியனுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

சொல்லேருழவன்
ம.க.அ.அந்தனிசில்

தமிழ் நாட்டில் ஒரு பிரபல சிறுகதை எழுத்தாளர் தமிழ் மொழியில் ஏகதேசச் சொற்கள் இருப்பதாக நாளேடொன்றில் சொல்லியிருப்பதை அறிய முடிகிறது. அவரது கருத்து முற்றிலும் தவறானதாகும். தமிழ் நாட்டில் தமிழ் மொழியை ஆங்கிலம், வடமொழி எல்லாம் சேர்த்துக் கலப்படமாக எழுதி வருகிறார்கள். அத்துடன் பிறமொழிகளால் கவரப்பட்ட தமிழ்ச் சொற்களை அந்தச் சிறுகதை எழுத்தாளர் ஆராய்ந்து பார்க்கவில்லை.

தமிழ் நாட்டில் தெரிவிக்கப்படும் சீரான கருத்துக்களை நாம் ஏற்கத்தான் வேண்டும். அதேவேளை குளறுபடியான கருத்துக்களை நாம் ஏற்க வேண்டிய அவசியம் எமக்கில்லை.

உலகின் எல்லா மொழிகளும் ஏககாலத்தில் தோன்றியவையல்ல. முன்னே பின்னே தோன்றியவையாகும். ஆதலின் முன்னர் தோன்றிய மொழியை மறைப்பதிலும் எவ்வித பண்பும் இல்லை. நம்மவர் சிலரும் தெரிந்தோ தெரியாமலோ இவ்விடயத்தில் அவ்வப்போது ஒவ்வாத கருத்து தெரிவித்து வருவது விசனிக்கத்தக்கதன்றோ?

மூத்த மொழியான தமிழின் முதன்நூல் தொல்காப்பியம் என்று தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் பழனி அரங்கசாமி ஒரு கட்டுரையில் சொல்லியிருப்பது ஏனென்று புரியவில்லை.

**தொல்காப்பியமும் ஐந்திரமும் என்ற ஆக்கம் இலக்கியப் பொழிலில் இவ்வாரம் வெளியாகியுள்ளது. படித்து மகிழுங்கள்.**

இன்று நமக்கு முழுமையாகக் கிடைத்திருக்கும் பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம் என்பதை யாவரும் அறிவர்.

### தொல்காப்பிய பாயிரம்

ஒல்காப் பெரும் புகழ் தொல்காப்பியரால் இயற்றப்பெற்றது தொல்காப்பியம். பனம்பாரனார் என்ற புலவர் தொல்காப்பியத்திற்குச் சிறப்புப் பாயிரம் செய்தார். அப்பாயிரம் (முன்னுரை) வருமாறு.

"வடவேங்கடந்தென்குமரி யாயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலி
னெழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்து நூல் கண்டு முறைப்பட வெண்ணி
புலந் தொகுத்தோனே போக்கறுபனுவ
நிலந்தரு திருவிற் பாண்டிய நவயத்
தறங்கரை நாவி நான்மறை முற்றிய
வதங்கோட்டாசாற் கரிறபத் தெரிந்து
மயங்கா மரபி னெழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பி னைந்திரம் நிறைந்த
தொல்காப்பியனெனத் தன் பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே"

என்றவாறு.

இதனால் தொல்காப்பியத்திற்கு முன் முந்து நூல்கள் இருந்திருப்பதும், தொல்காப்பியர் ஐந்திரம் என்ற நூலை அறிந்திருந்தாரென்பதும் வெளிப்படுகிறது.



தொல்காப்பியத்திற்கு சேனாவரையர், தெய்வச்சிலையார், பேராசிரியர், நச்சினார்க்கினியர், இளம்பூரணர், கல்லாடர் போன்றோர் உரைஎழுதினர். இவர்களில்இளம்பூரணர், பேராசிரியர் ஆகிய இருவருமே முழுமையான உரைவகுத்தனர். ஆனால், பேராசிரியரின்உரைமுற்று முழுதாகக் கிடைத்ததாக வில்லை.

### நச்சினார்க்கினியர் உரை

பனம் பாரனாரின் பாயிரத்திற்கு நச்சினார்க்கினியரின் உரை வருமாறு:–

"வடக்கின்கண் வேங்கடமும் தெற்கின்கண் குமரியும் ஆகிய அவ்விரண்டெல்லைக்குள்ளிருந்து தமிழைச் சொல்லும் நல்லாசிரியரது வழக்குஞ் செய்யுளுமாகிய அவ்விரண்டும் அடியாகக் கொள்ளுகையினாலே அவர் கூறும் செந்தமிழ் இயல்பாகப் பொருந்திய செந்தமிழ் நாட்டிற்கு இயைந்த வழக்கோடே முன்னையிலக்கணங்கள் இயைந்தபடியை முற்றக்கண்டு, அவ்விலக்கணங்களெல்லாம் சில்வாழ்நாட் பல் பிணிச்சிற்றறிவினோர்க்கு அறியலா காமையின் 'யான் இத்துணை வரையறுத்து உணர்த்துவல்' என்று அந்நூல்களிற் கிடந்தவாறன்றி, அதிகார முறையான் முறைப்படச் செய்தலையெண்ணி, அவ்விலக்கணங்களுள் எழுத்தினையும், சொல்லினையும், பொருளினையும் ஆராய்ந்து பத்துவகைக் குற்றமும் தீர்ந்து, முப்பத்திரண்டு வகை உத்தியொடு புணர்ந்த இந்நூலுள்ளே, அம்மூவகையிலக்கணமும் மயங்கா முறைமையிற் செய்கின்றமையின், எழுத்திலக்கணத்தை முன்னர் காட்டி, ஏனையிலக்கணங்களையும் தொகுத்துக் கூறினான்". இவ்வாறு நச்சினார்க்கினியரின் உரை கூறுகின்றமையாலும் தொல்காப்பியரின் காலத்திற்கு முன் பல இலக்கணநூல்கள் இருந்ததென்பது தெளிவு.

அகத்தியனாற் செய்யப்பட்ட மூன்று தமிழ் (தொல், பொருள், உவமவியல் 37) என்றவாறு பேராசிரியர் உரையில் சுட்டப்படும் அகத்தியம் அகத்திய முனிவரால் இயற்றப்பெற்றதாகும்.

சிற்றகத்தியம், பேரகத்தியம், அகத்தியர் பாட்டியல், அகத்தியர் தேவாரத்திரட்டு என்று நூல்கள் இருந்திருப்பினும் இவற்றின் காலவேறுபாடு, செய்யுட்களின் தன்மை ஆதியாம் காரணிகளைக் கொண்டு அகத்தியரால் இயற்றப்பெற்ற அகத்தியம் யாது என்பதை உய்த்துணர முடியும். அகத்தியம் இடைச் சங்க காலத்தில் மறைந்து போனாலும் அதன் சில செய்யுட்கள் எஞ்சியுள்ளன.

### ஐந்திரம்

தொல்காப்பியப் பாயிரத்தில்.... 'மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியனெனத் தன் பெயர் தோற்றி....' என்ற பகுதியில் சொல்லப்படும் ஐந்திரம் என்பது என்ன?

மிக முற்காலத்தில் இந்திரன் என்றோர் பெரும் தமிழ்ப் புலவன் இருந்திருக்கிறான். அவனால் இயற்றப்பெற்ற நூல் இந்திரம். அதுவே ஐந்திரம் என்றாயிற்று. பித்தம் பைத்தியம், சிவம் சைவம் என்றாவதைப் போல இது தத்தித்தாந்தம் ஆகும்.

பழங்காலத்தில் பெரும் தமிழ்ப்புலவனான இந்திரன் காலப் போக்கில் கடவுளாக்கப்பட்டானா? பழந்தமிழர் இந்திரனுக்குக் கொடியேற்றி விழாவெடுத்திருப்பதை சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அறிய முடியும்.

### சக்கரன்

செந்தமிழ்சேர் நிலமான ஒளி நாட்டில் செங்கோன் எனும் அரசன் தமிழ்ச்சங்கம் நிறுவியிருந்தான். அத்தமிழ்ச்சங்கத்திற்கு சக்கரன் என்ற புலவன் தலைமை வகித்தான். இந்திரனுக்கு சக்கரன் என்றும் பெயருண்டு.

'சக்கரச்செல்வம்பெறினும்விழுமியோர்
எக்காலுஞ் சொல்லார் மிகுதிச் சொல் - எக்காலும்
முந்திரிமேற் காணி மிகுவதேற் கீழ்தன்னை
இந்திரனா வெண்ணி விடும்'

(நாலடியார் 346)

இந்த நாலடியார் பாடலிலிருந்து இந்திரனும் சக்கரனும் ஒருவர் என்பதை அறிய முடியும்.

**வாராவாரம் வெளிவரும் 'இலக்கியப்பொழில்' பகுதியில் இலக்கிய அறிஞர்கள் மட்டுமல்ல இலக்கிய ஆர்வலர்களும் எழுதலாம். கட்டுரைகள் யாவும் தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.**

இந்திரன் ஓர்இயக்கன். பாளி (சங்யுத்த) நூலில் சக்கநாமகோயக்கோ என்று சொல்லப்பட்டிருப்பதிலிருந்து அதனை புரிய முடியும். (இந்திரனின் இருப்பிடம் நாகதீவு என்று பாளி நூலான மகாவம்சம் சொல்லியிருப்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.) பருத்தித்துறைக்கு அண்மையான வல்லிபுரத்தில் சக்கரன் (இந்திரன்) கோயில் ஒன்றுண்டு. ஆனால், வரலாறு திசை திருப்பப்பட்டுள்ளது. இதே இந்திரன் தான் இலக்கண நூல் செய்திருத்தல் வேண்டும். ஐந்திரம் நூலினையே தொல்காப்பியர் அறிந்துள்ளார். அந்நூலினையே பனம்பாரனார் தொல்காப்பிய பாயிரத்தில் சொல்லியுள்ளார்.

### வடமொழிநூலா?

அகத்தியரும் தொல்காப்பியரும் ஆரியரென்று கதை பரப்பிய வடவர் பின்னர் தொல்காப்பிய பாயிரத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஐந்திரம் எனும் நூலினையும் வடமொழி நூலெனப் பிரசாரம் செய்தனர். அதாவது தொல்காப்பியர் ஐந்திரம் என்ற வடமொழி நூலைக் கற்றுத்தான் தொல்காப்பியம் எனும் தமிழ் இலக்கண நூலை இயற்றினார் என்ற எண்ணத்தை தோற்றுவிப்பதற்காக. ஆனால், வடமொழியில் ஐந்திரம் எனும் இலக்கண நூல் என்றென்றும் இருந்ததில்லை. ஆரம்பத்தில் வடமொழிக்கு சாகடாயன, சாகல்ய, கார்க்கிய போன்ற இலக்கண நூல்கள் இருந்தன. இவை வடமொழியைச் சிறப்பிக்கவில்லை. அதன் காரணமாகவே பாணினி என்பார் வடமொழிக்கு அஷ்டாத்யாயீ எனும் இலக்கண நூலைச் செய்தார். இவரது இலக்கணநூலுக்குப் பின்னரே வடமொழிக்கு 'சம்ஸ்கிருத' என்ற பெயர் தோன்றலாயிற்று. சமஸ்கிருத என்றால் 'நன்றாகச் செய்யப்பட்டது' என்று பொருள்.

ஒருபுறம் வடமொழியை தேவபாஷா (கடவுளின் மொழி) என்று ஆரியர் கூறுகின்றார்கள். மறுபுறம் பாணினி வடமொழிக்கு இலக்கணம் செய்ததால் அது 'நன்றாகச் செய்யப்பட்டது' என்று கூறுகிறார்கள். இதில் எது சரி?

பாணினியின் இலக்கண நூலைத் தொடர்ந்து முன்னைய வடமொழி இலக்கண நூல்கள் ஒழிந்து போயின. இன்று காலாப, சாந்திர, சாரஸ்வத, முக்திரோத, சப்தம, ஹேமச்சந்திர வியாக்கரண போன்ற வடமொழி இலக்கண நூல்கள் வழங்கி வருகின்றன. வடமொழியில் ஐந்திர எனும் இலக்கண நூலை எங்கும் கண்டறிய முடியவில்லை. ஆதலின் தொல்காப்பிய பாயிரத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஐந்திரம் வடநூலா? தமிழ் நூலா? என்பதை நாம் ஆராயப்புகுதல் அவசியமாகிறது.

### அகத்தியர் செய்யுள்

ஐந்திரம் என்ற நூலைப் பெயரளவில் அறிந்திருந்தாலும் அது தமிழ் நூல் என்பதனைச் சான்றாதாரத்துடன் இதுவரை யாரும் எடுத்துச் சொல்ல முன்வராதது பெரும் குறையாகும்.

ஐந்திரம் என்பது வடமொழி நூலென்று ஆரியர் புரட்டுத்தனமான முறையில் பரப்பிய கதையினால் ஏற்பட்ட மயக்கம் இப்படிப் பலரையும் அமைதிகொள்ளச் செய்ததா?

தொல்காப்பியத்திற்கு முன்னரே மொழியியல் பகுதிகளை தனித்தனியாகப் பிரித்து விரித்து விளக்கும் இயல் நூல்கள் இருந்திருப்பதனை நாம் அறிவோம். தொல்காப்பியர் தமது நூலில் "யாப்பென மொழிப யாப்பறி புலவர்", "நூலென மொழிபநுணங்கு மொழிப்புலவர்", "ஒத்தென மொழிப உயர் மொழிப்புலவர்", "தொன்று மொழிப் புலவர் அது பிண்டமென்ப", "சொல்லியற்புலவரது செந்தொடையென்ப" "நல்லிசைப் புலவர் செய்யுளுறுப்பென வகுத்துரைத்தனரே" என்று சொல்லியிருப்பதிலிருந்து முன்னைய இலக்கண வகைகளை நாம் தெரிந்து கொள்ள முடியுமல்லவா? ஆனால், எவ்விடத்திலும் தொல்காப்பியர் அகத்தியம் பற்றிச் சொன்னாரில்லை.

தொல்காப்பிய சிறப்புப் பாயிரத்திலும் பொதுவாக 'முந்துநூல்' என்று சொல்லப்பட்டு ஈற்றில் ஐந்திரம் எனும் நூலே குறிப்பிடப்படுகிறது.

இடைச் சங்கத்தை சேர்ந்த அகத்தியத்திற்கு முன்னரும் தமிழ் இலக்கண நூல்கள் இருந்திருப்பதை அகத்தியச் செய்யுளொன்றின் வாயிலாக நாம் அறியமுடியும். அச் செய்யுள் வருமாறு:

(14 ஆம் பக்கம் பார்க்க)

'மும்பை எக்ஸ்பிரஸை' முடித்துவிட்டார் கமல். ஒரு படம் நடக்கும் போதே ஒன்பது வேலைகள் செய்யும் அஷ்டவதானி இவர். பிரபல இயக்குனர்களும், நடிகர்களும் அடுத்தடுத்த படங்களுக்கு வருடக்கணக்கில் இடைவெளி விடும் பொழுது, தொடர்ச்சியாகக் கமல் படம் பண்ணுவதற்கு இதுவும் ஒரு காரணம்.

மும்பை எக்ஸ்பிரஸ் வேகமாக சென்று கொண்டிருக்கும் போதே அடுத்த பட வேலையில் இறங்கி விட்டார். கமலின் அடுத்த படத்தை இயக்குபவர் கௌதம். சென்னையில் ஒருமழைக்காலம் தடைப்பட்டதும் முழு மூச்சாக கமல் படத்தில் இறங்கிவிட்டார். படத்தின் ஒவ்வொரு காட்சியும் 'ஷேப்' செய்யப்பட்டு மும்பையில் இருக்கும் கமலுக்கு அனுப்பப்படுகிறது. கமல் சொல்லும் திருத்தங்களுடன் திரும்பிவரும் ஸ்கிரிப்ட் சென்னையில் திருத்தியமைக்கப்படுகிறது.




இந்த கிவ் அண்டு டேக் பொலிசியில் முழு ஸ்கிரிப்டும் தயாராகிவிட்டது. இந்தப் படத்தில் கமலுக்கு மூன்று வேடங்கள் என்பது கோலிவுட் பட்சியின் ஆருடம்.

கௌதம் தொழில்நுட்ப விசயத்தில் சவுண்டான ஆள். கமலைப்பற்றிச் சொல்லத் தேவை இல்லை. இந்த இருவரும் இணையும் படம் தமிழ் சினிமாவின் தொழில்நுட்ப வரலாற்றில் ஒரு மைக்கல்லாக இருக்க வேண்டும் என இருவரும் உழைத்து வருகிறார்கள்.

ராஜ்கமல் தயாரிக்கும் படங்கள் தவிர, பிற தயாரிப்பாளர்கள் படங்களில் நடிக்கும் போது டெக்னிஷியன்கள் விஷயத்தில் கமல் தலையிடுவதில்லை. 'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ். இல் சரணின் ஆஸ்தான இசையமைப்பாளர் பரத்வாஜ் இசையமைத்தது போல், இப்படத்தில் கௌதமின் பேவரிட் மியூசிக் மேன் ஹரிஸ் ஜெயராஜ் இசை சேர்க்கலாம்.

அறிவிப்பு வரும் முன்பே பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது கமலின் அடுத்தபடம்.

## செல்வராகவன் - யுவன் நட்பு விரிசலடைகிறது

செல்வராகவனின் படங்களுக்கு ஆஸ்தான இசையமைப்பாளராக இருந்தார் யுவன் சங்கர்ராஜா. என்ன நடந்ததோ, இந்த இருவருக்கும் இடையே இருந்த இசை சங்கமத்தில் அபஸ்வரம் ஒலிக்க ஆரம்பித்திருக்கிறது. துள்ளுவதோ இளமையிலிருந்து, 7ஜி ரெயின்போ காலனி வரைக்கும் தொடர்ந்த இந்த நட்பில் இப்போது விரிசல் விழுந்துவிட்டதாம். தன் அடுத்த படத்திற்கு ஹாரிஸ் ஜெயராஜை இசையமைக்க சொல்லிவிட்டாராம் செல்வராகவன். சினிமாவில் இதெல்லாம் சகஜமப்பா... என்று இந்த விரிசலுக்கு நியாயம் கற்பிக்கப்பட்டாலும், செல்வராகவனின் அதிகப்படியான தலையீடும், யுவனின் ஈகோவும்தான் காரணம் என்கிறார்கள், சமீபத்தில்தான் யுவனுக்கு லண்டன் பெண்ணை திருமணம் பேசியிருக்கிறார்கள்.

அப்போதிலிருந்தே வருங்கால மனைவியுடன் போனிலும், இன்டர்நெட்டிலும் பேசி பொழுதை கழிக்க ஆரம்பித்துவிட்டாராம் யுவன். இதனால் தன்னை நாடி வருகிற இயக்குனர்களை கூட சரிவர மதிக்காமல் வாசலிலேயே காத்திருக்க வைத்து விடுகிறாராம். அப்படி ஒரு சந்தர்ப்பத்தில் வெளியே காத்திருந்து கோபத்தில் திரும்பி வந்த செல்வராகவன் எடுத்த அதிரடி முடிவுதான் இது என்றும் சொல்கிறார்கள். ஆர்மோனியப் பெட்டியிலிருந்து மெட்டுகள் விழுந்தால் லாபம்! குட்டுகள் விழுந்தால் கோபம்தானே வரும்!



—சூர்

## எஸ்.ஜே.சூர்யாவின் 36-28-36

ருசி கண்ட பூனையையும் பசி கொண்ட யானையையும் அடக்க முடியாது. எஸ்.ஜே. சூர்யா 'குஷி' கண்ட இயக்குனர். அத்தனை எளிதில் திருந்தி விடுவாரா!

'நியூ', 'பி.எப்' படங்களைத் தொடர்ந்து இளமையை முன் வைத்து இவர் நடிக்கும் மூன்றாவது படம் '36—28—36' சொன்னவுடன் அழகான பெண்ணின் அங்கம் நினைவுக்கு வரும். தங்கமான டைட்டில். ஆங்கிலத்தில் பெயர் வைப்பதை எதிர்ப்பவர்களாலும் ஒன்றும் செய்ய முடியாது. எண்கள் சர்வதேச பாஷை. அதற்கு ஏது மொழி!

இந்தப்படத்தை இயக்கப் போவது சூர்யா அல்ல. தமிழ் வாணன் என்ற புதியவர். இயக்குனர் எழிலின் உதவியாளர். ட்ரீம் மேக்கர்ஸ் யூ.கே.5 என்ற புதிய படநிறுவனம் இந்தப்படத்தை தயாரிக்கிறது. யுவன் ஷங்கர்ராஜா இசைக்கு பாடல் எழுதுகிறவர் வாலி.

பெண் வாசனை சூர்யாவுக்குள் மண் வாசனையும் உண்டு. திருநெல்வேலிக்காரான இவருக்கு தனது கிராமத்தை திரையில் கொண்டு வர வேண்டும் என்ற ஆசை இருக்கிறது.

''குற்றாலம், தாமிரபரணி ஆறு, வீரம் விளைந்த மண், காதலிக்கத் தூண்டும் ரம்மியமான இயற்கை என்று நெல்லை மண்ணின் மணம் வீசும் 'திருவிழா' என்ற படத்தை எடுக்கப் போகிறேன். பாரதிராஜாவுக்கு ஒரு 'கிழக்குச் சீமையிலே'. எனக்கு ஒரு 'திருவிழா'.''


'பி.எப்'
—சூர்யா—

உங்கள் 'திருவிழா' பெண்கள் ஜாக்கெட் போட்டு குளிப்பார்களா? போடாமல் குளிப்பார்களா?

## ஜூலையில் டும் டும் டும்...

காதல், கருத்து வேறுபாடு எல்லாவற்றையும் தாண்டி இவர்களது கல்யாணம் எப்பொழுது என்பதுதான் சூர்யா – ஜோதிகா ஜோடியைப் பார்த்து எல்லோரும் கேட்க நினைக்கும் கேள்வி.

பூவெல்லாம் கேட்டுப்பார், உயிரிலே கலந்தது, காக்க காக்க, பேரழகன் ஆகிய படங்களைத் தொடர்ந்து சூர்யா – ஜோதிகா ஜோடி சேர்ந்திருக்கும் மாயாவி படப்பிடிப்பு ஸ்பாட்டில் இவர்களது காதல் உச்சத்தில் இருக்கிறது.

இதைத் தொடர்ந்து இயக்குநர் கௌதமின் அஸோஸியேட் கிருஷ்ணா இயக்கத்தில் கலைப்புலி தாணு தயாரிப்பில் உருவாகும் ஜில்லுன்னு ஒரு காதல் எனும் புதிய படத்திலும் இந்த ஜோடி சேர்ந்து நடிக்க இருக்கிறது. அந்தப் படத்தை ஜூன் மாதத்திற்குள் முடிந்துவிட்டு ஜூலையில் தங்களுடைய திருமணத்தை வைத்துக் கொள்ளலாம் என்ற முடிவில் இருக்கிறதாம் இந்த ஜோடி.

அதற்குள் ஜோதிகா சந்திரமுகி உட்பட தற்போது ஜோடி சூர்யா இல்லாமல் நடித்து வரும் ஒரு சில படங்களை முடித்துக் கொடுத்துவிட்டு சிவகுமார் வீட்டோடு மருமகளாக... நடிப்பிற்கு முழுக்கு போட்டு விடும் முடிவில் இருக்கிறாராம்.



ஆரம்பம் முதலே இவர்களது காதலுக்கு எதிர்ப்பு காட்டி வந்த சிவக்குமார் அண்ட் பேமிலியை அந்த பேமிலியோடு மிகவும் நெருக்கமாய்விட்ட இயக்குனர் பாலா பேசிப்பேசியே கரைத்துவிட்டதாகத் தகவல்.

ஸோ... ஜூலையில் இவர்களது காதல் கல்யாணத்தில் முடிந்து விடும்.

## கமலுடன் ஒட்டித்திரியும் கௌதமி

கமல் எவ்விடமோ, கௌதமியும் அவ்விடமே! கடந்தவாரம் சென்னை லேண்ட் மார்க்கில் காரை நிறுத்திய கமல் அருகில் அமர்ந்திருந்த கௌதமியோடு உள்ளே ஷொப்பிங் செய்யப்போனார்.

அதுவரைக்கும் பின் சீட்டில் அமர்ந்திருந்த டிரைவர் முன்னால் வந்து காரை பார்க்கிங் செய்தார். இந்த நவயுக ஜோடியோடு கூடவே போனது குழந்தை ஒன்று! அடிக்கடி 'டாடி டாடி' என்று குழந்தை அழைக்க, அன்புப் பரிசுகளைக் குழந்தைக்கும் வாங்கி குவித்தார் கமல்.

பின் வெளியே வந்த ஜோடிகள் காரில் ஏறிக்கொள்ள முன் போலவே பின் சீட்டுக்கு தாவிவிட்டார் டிரைவர்! இப்போதெல்லாம் இந்த ஜோடிகளைச் சென்னையில் பல இடங்களில் சர்வ சாதாரணமாக பார்க்க முடிகிறது.

இருக்கட்டும்.... தற்போது நடந்த நடிகர் சங்கத் தேர்தலின்போது மும்பையில் இருந்த கமல் தன்னுடைய வோட்டை தபாலில் அனுப்பி வைத்தார். பிரித்து பார்த்தால், கூடவே இருந்தது இன்னொரு சீட்டு. அது கௌதமியின் வாக்குரிமைச் சீட்டு! மும்பை எக்ஸ்பிரசின் நிர்வாக பொறுப்புகளை கவனித்து வருவது சாட்சாத் கௌதமிதானாம்! சூடிக்கொள்பவருக்கு சுகமாக இருந்தால் அது பொன்னாக இருந்தால் என்ன? பூவாக இருந்தால் என்ன?

## மாதவன் – சதா நடிக்கும் 'தம்பி'

நகரத்து மக்கள் அனைவருக்குமே தம்பியை நன்றாகத் தெரியும். அவனது குணாதிசயம் சற்று வித்தியாசமானது. இவன் 'இப்படித்தான் என்று யாராலும் அடையாளம் காட்ட முடியாது. காரணம், காந்தியின் அஹிம்சாவாதியாகவும், சுபாஸ் சந்திரபோஸின் ஆயுதவாதியாகவும் காட்சியளிப்பவன். தம்பி நல்லவனுக்கு நல்லவன்... கெட்டவனுக்கும் நல்லவன்.

இப்படிப்பட்டவனை கொலை செய்ய பயங்கரவாதியான காசி நினைத்தான். தம்பியுடன் நேருக்கு நேராக மோதினான். முடிவில் தோற்றான்.

''நேருக்கு நேராக மோதுகிறவன் மட்டும் வீரனில்லை. எதிரின்னு தெரிஞ்ச பிறகும், அவன் உயிரை காப்பாற்றுகிறவன் தான் சுத்த வீரன். ''நீ பொழச்சிப்போ'' என்று தம்பி உயிர் பிச்சை அளித்தான்.

இப்படியொரு காட்சி ஆதிபிலிம் தம்பி லிமிடெட் தயாரிக்கும் 'தம்பி' படத்துக்காக செங்கல்பட்டு அருகே திரிவேணி அக்கடமியில் படமானது. அதில் மாதவன் – ஒரிசாவை சேர்ந்த புதுமுகம் பகளா இருவரும் பயங்கரமாக மோதும் சண்டைக்காட்சி படமாக்கப்பட்டது.


'பிரியமுள்ள தோழி' —மாதவன், சதா


'காட்பாதர்'
—அஜித், அஸின்—

## வில்லன்–அப்பா–ஹீரோ வேடங்களில் அஜித்

கமல் ரஜினி படங்களுடன் களமிறங்குகிறது 'காட்பாதர்'. சுறா வேட்டைக்குத் தூண்டில் கயிறு எம்மாத்திரம்? அதனால் மூன்று கெட்டப்புகளில் பட்டையைக் கிளப்புகிறார் அஜித். ''ரசிகர்கள் பாதி நேரம் சிரிக்க வேண்டும், கொஞ்ச நேரம் அழ வேண்டும் பயப்பட வேண்டும், கைதட்ட வேண்டும். தவிர சில காட்சிகளில் சீட் நுனியில் வந்து பார்க்க வேண்டும். 'காட்பாதர்' அப்படிப்பட்ட படம்'' என்கிறார் இயக்குனர் கே.எஸ். ரவிக்குமார்.

பத்த வைத்த சிவகாசி ராக்கெட் மாதிரி கேரக்டர்கள் அஜித்துக்கு. பதறாமல் சிதறாமல் மூன்றை பக்குவமாக செய்திருக்கிறார் இவர். சைலண்டாக சதமடித்த வில்லனில் இவருக்கு இரண்டு கேரக்டர்கள். இதில் மூன்று டபுள் செஞ்சரி நிச்சயம் என நெஞ்சு நிமிர்த்துகிறது காட்பாதர் டீம்.

மூன்று கெட்டப்புகள் என்றால் மேக்கப் முக்கிய பங்கு வகிக்கும். ஆனால் அஜித் அதிகம் மேக்கப் இல்லாமலே தனது நடிப்பின் மூலம் மூன்று கேரக்டர்களையும் வித்தியாசப்படுத்தியிருக்கிறார். ஒட்டாத பாடல்களுக்கு மத்தியில் தேன் சொட்டும் பாடல்களாக 'காட்பாதரி'ல் வைத்திருக்கிறார்கள். படத்தின் முக்கிய அம்சம் சண்டைக்காட்சிகள்.

பறந்தடிக்கும் திருப்பாச்சி பிடிப்பவர்கள் மத்தியில் 'காட்பாதர்' எதற்கும் கலங்காது அடிப்பவன். இவனுக்கு அரிவாள் தேவையில்லை.

இயக்குனர் சொல்லும் போதே நமக்குச சிலிர்க்கிறது. ஏப்ரல் 14 ரிலீஸ் செய்ய வேண்டும் என்பதற்காக அவசரத்தில் சுட அஜித்துக்கோ ரவிக்குமாருக்கோ விருப்பமில்லை. அதனால் படம் தள்ளிப்போகவும் வாய்ப்புண்டு.

சதா...

அகத்திய...
யாக சதா நடி...
யான காதல்...
க... ச்சிப் செ...
கதாநாயகனை...
கையறை சீ...
அரைகுறை...
ஒரு நாயகின...
சிக்கியது...
கதையை...
ளுக்கு ஓகே...
தொடங்குவது...
அந்த நே...
கண்டிஷன்...
நானா... இல்...
ரோலுக்கு...
செய்தால் அ...
துக் கொள்ள...
லது அவள் எ...
படத்தில்...
பெரும்பகு...

'அமு...

அமுதே.....
காதல் கதை எ...
அப்படி என்ன...
டோம்.
திருமணத்...
வாழ்க்கையில்...
என்னென்ன...
என்ற சிக்கலு...
ராசியமும் நின...
கேள்விக்குப்...
லாக அமை...
''அமுதே'' கதை...
அதே சம...
எல்லா வயதி...
யும் இழுக்கும்...
ணம் பொழுது...
காக... அதே ச...
சமூகத்திற்கு...
செய்தியை இ...
படம் சொல்லு...
பெரும்பா...
ஆண்களே...
உருவாக்குவ...
சினிமாவில்...
களின் நின...
உணர்ச்சிகள்...
வாகச் சொல்ல...
வதில்லை. இ...
படத்தின் கதை...
தியிருப்பவர்...
பல பெண் நா...
சிரியை மணிம...
மணிமாலா...
தவிர வேறு சி...
கிய அறிமுகங்...
உண்டு. இ...
மைப்பாளர்...
பாடலாசிரியர்...
அமுதன்.... இப்...
பல அறிமுகங்...
போட்டுத்த...
மாங்குத்து பாட்...
கட்டியிருக்கிறா...
மல் அனாமிகா...
யெடுத்திருக்கி...
தினகர் எ...
ருக்கிறார் நாய...
வான சிந்தனை...
யான இளம் பெ...



—சூர்யா, த்ரிஷா—

## ஹரியின் படத்தில் சூர்யா த்ரிஷா

என்ன இந்தப் பக்கம் ஆளைக் காணோம் என்று கேட்பவர்களின் வாயை அடைக்க, புதுப்படம் ஒன்றில் கையெழுத்திட்டிருக்கிறார் த்ரிஷா. ஹரி இயக்கத்தில் சூர்யா நடிக்கும் படம் இது.

த்ரிஷா அறிமுகமான படம் 'லேசா லேசா' என்றாலும் முந்திக் கொண்டு ரிலீஸானது 'மௌனம் பேசியதே. அமீர் இயக்கிய இந்தப் படத்தில் சூர்யாதான் ஹீரோ. மிஸ் சென்னை, முன்னணி மாடல் என்று திரைக்கு வரும் முன்பே பிரபலமாகியிருந்த த்ரிஷாவுக்கு அதிகமான எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் 'மௌனம் பேசியதே' பேசாமலே அனைத்தையும் கவிழ்த்து விட்டது. படம், அதன் இயக்குனர். இசை ஹீரோ சூர்யா என அனைத்துத் தரப்பினரும் பாராட்டப்பட்டனர். த்ரிஷாவை தவிர பிரபல பத்திரிகைகளும் அவரை கண்டு கொள்ளவில்லை.

தமிழிலும் தெலுங்கிலும் அதிக சம்பளம் வாங்கும் நடிகை த்ரிஷா 'மௌனம் பேசியதே' யில் கிடைக்காத பாராட்டைப் பெற தாயாராகி வருகிறார் த்ரிஷா.

# சதாபோட்ட சாமி ஆட்டம்

அகத்தியன் இயக்கத்தில் மாதவன் ஜோடியாக சதா நடிக்கும் பிரிய சகி. மென்மையான காதல் கதையில் ஒரு திருப்பமாகக் கவர்ச்சிப் பெண் ஒருத்தி நுழைகிறாள். கதாநாயகனை மயக்க நெருக்கமான படுக்கையறை சீன்கள், குளியல் காட்சிகள், அரைகுறை ஆடைகளில் ஆட்டம்போட ஒரு நாயகியை தேடி வந்தார்கள்.

சிக்கியது சத்ரபதி நிகிதா. அவரும் கதையை கேட்டு நெருக்கமான சீன்களுக்கு ஓகே சொல்லிவிட்டார். ஷூட்டிங் தொடங்குவதுதான் பாக்கி.

அந்த நேரத்தில் பட நாயகி சதா திடீர் கண்டிஷன் போட்டதோடு... கதாநாயகி நானா... இல்லை அவளா.... படத்தில் என்னோலுக்கு ஈடாக நிகிதாவை ஒப்பந்தம் செய்தால் அவரை வைத்தே படத்தை எடுத்துக் கொள்ளுங்கள். படத்தில் நான் அல்லது அவள் என்று சாமியாடித் தீர்த்தாராம்.

படத்தில் மாதவனோடு சதா நடிக்கும் பெரும்பகுதியான காட்சிகள் படம் பிடிக்கப்பட்டு விட்டதால் சதாவைச் சமாளிக்க, நிகிதாவுக்கு கல்தா கொடுத்துவிட்டனர். ஒன்றிரண்டு படங்களில் நடிக்கும்போதே இப்படி என்றால் சதாவின் நிலை என்னாகும்.



# 'அமுதே' திகட்டும் தெள்ளமுது

அமுதே..... இது ஒரு வித்தியாசமான காதல் கதை என்கிறார் டைரக்டர் எழில். அப்படி என்ன வித்தியாசம் என்று கேட்டோம்.

திருமணத்திற்குப் பிறகு ஒருவனின் வாழ்க்கையில் காதல் தொடர்ந்தால் என்னென்ன பிரச்சினைகள் உண்டாகும் என்ற சிக்கலும் சுவாரசியமும் நிறைந்த கேள்விக்குப் பதிலாக அமைந்தது "அமுதே" கதை.

அதே சமயம் எல்லா வயதினரையும் இழுக்கும் வண்ணம் பொழுதுபோக்காக... அதே சமயம் சமூகத்திற்கு ஒரு செய்தியை இந்தப் படம் சொல்லும்.

பெரும்பாலும் ஆண்களே கதை உருவாகுவதால் சினிமாவில் பெண்களின் நிலை. உணர்ச்சிகள் தெளிவாகச் சொல்லப்படுவதில்லை. இந்தப் படத்தின் கதை எழுதியிருப்பவர் பிரபல பெண் நாவலாசிரியை மணிமாலா. மணிமாலாவைத் தவிர வேறு சில முக்கிய அறிமுகங்களும் உண்டு. இசையமைப்பாளர் சுனில், பாடலாசிரியர் தமிழ் அமுதன்.. இப்படிப் பல அறிமுகங்கள்.



'அமுதே'
—ஆகாஷ், மதுமிதா—

போட்டுத்தள்ளுடா என்றொரு கும்மாங்குத்து பாட்டுக்கு ரகசியா வெளுத்துக் கட்டியிருக்கிறார். அதோடு சுவர்ச்செம்மல் அனாமிகா ஒரு பாட்டுக்கு பின்னியெடுத்திருக்கிறார்.

தினசர் என்ற கேரக்டரில் வாழ்ந்திருக்கிறார் நாயகன் ஜெய் ஆகாஷ். தெளிவான சிந்தனை கொண்ட தடாலடியான இளம் பெண் கேரக்டரில் "குடைக்குள் மழை" மதுமிதா உங்கள் இதயங்களை கொள்ளை கொள்ளப் போகிறார்.

முறைப்பெண்ணாக வந்து மனசுகளை வலிக்கவைக்கப் போகிறார் உமா. பிரகாஷ்ராஜின் சினிமா வாழ்க்கையில் இந்தப் படம் மறக்க முடியாத படமாக அமைந்துவிடும். அமுதே படத்தில் மிக முக்கியமானது... க்ளைமாக்ஸ்தான். பொதுவாக ஒவ்வொரு படத்திலும் கடைசி காட்சி என்பது ரொம்ப நேரம் நீடிக்கும். ஆனால் "அமுதே" வில் க்ளைமாக்ஸ்... ஒரு பாடல் காட்சியில் சொல்லப்படும். இது ரசிகர்களால் பெரிதும் பாராட்டப்படும். இந்தக்கப் போதுமா. இன்னும் கொஞ்சம் தேவையா... என மூச்சுவிடாமல் பேசினார் எழில்.

# கிளமராக நடிக்க மாட்டேன்



—சந்தியா—

'காதல்' தந்துள்ள இளம் ரோஜா சந்தியா. தாம் நடித்த முதல் படத்தின் மூலமே கொலிவுட்டை மட்டுமல்லாமல் படத்தைப் பார்த்த அனைவரையுமே பரபரப்பாகப் பேச வைத்துள்ளார்.

'காதல்' வெளியான ஒரு வாரத்துக்குள்ளேயே இவரது புகைப்படங்கள், பேட்டிகள் அச்சிட்டு வெளிவராத பத்திரிகைகளோ, இவர் தோன்றாத தொலைக்காட்சிகளோ இல்லை என்று கூறும் அளவுக்கு மீடியாக்களில் இடம் பிடித்துக்கொண்டுள்ளார்.

பேட்டியில் சந்தியா கூறியதாவது:—

நாங்கள் கேரளாவைச் சேர்ந்தவர்கள். நான் பிறந்தது ஆலப்பியில். ஆனால், இப்போது பல ஆண்டுகளாக சென்னையில் வசித்து வருகிறோம். என் அப்பா அஜித்குமார். ஐ.ஓ.பி வங்கியில் மனேஜராக பணி புரிகிறார். என் அம்மா மாயா. ஹவுஸ் வொய்வ். பியூட்டி பார்லர் வைத்து நடத்திய அனுபவமும் உண்டு. என் அண்ணன் ராகுல். கம்பியூட்டர் என்ஜினியரிங்குக்குப் படித்துக்கொண்டிருக்கிறார்.

நான் வித்யோதயா பள்ளியில் பத்தாவது படித்துக்கொண்டிருக்கும்போது தான் 'காதல்' பட வாய்ப்பு வந்தது.

***'காதல்' படத்தில் காதலிக்க எப்படி வாய்ப்புக் கிடைத்தது?***

மாடல் கோ- ஆர்டினே ...ம், பல நடிகைகளின் ...னேஜ ... மனோஜ் கிருஷ்ணா எ... ...ப நண்பர். வி... ...ல் நடிக்க வாய்ப்பு ...ல் ...டிக்கலாம் என்ப... ...டோ செஷன் செ...

...வேல் சார் 'காதல்' ...முக நடிகையைத் ...கிறார் என்பதைய... கிருஷ்ணா என் ... அவரிடம் காண்...

...ா என்னை ...ல, ஸ்கூல் ...னையே ஷங்கர் ஆபிஸுக்குப் போனேன். ...ல சீன்கள் நடித்துக் காட்டச் சொன்னார் பாலாஜி சக்திவேல் சார். நான் நடித்துக் காட்டியதும், 'காதல்' படத்தின் கதாநாயகி நீதான் என்றார் அவர். பிறகு ஷங்கர் சாருக்கு என்னை அறிமுகப்படுத்தி வைக்க, அவர் தான் எனக்கு சந்தியா என்று பெயர் சூட்டினார். என் உண்மையான பெயர் ரேவதி.

***முதல் படத்தின் மூலமே இப்படிப்பட்ட இமாலயப் புகழ் கிடைக்கும் என்று எதிர்பார்த்தீர்களா?***

நான் ஒரு நடிகையாவேன் என்றோ, எனக்கு இப்படிப்பட்ட புகழ் கிடைக்கும் என்றோ நான் கனவில் கூடக் காணவில்லை. பாலாஜி சக்திவேல் சாரைப் பார்க்கிற வரைக்கும் நான் ஒரு சாதாரண பள்ளி மாணவி. ஆனால் இப்போதோ நான் ஒரு நடிகை.

நான் நடிகையான 'திறில்' இன்னும் போகவில்லை. இதற்கெல்லாம் காரணம் பாலாஜி சக்திவேல் சார், ஷங்கர் சார். இவர்களுக்கு நான் என்றென்றும் நன்றிக்கடன் பட்டுள்ளேன்.

***'காதலில்' இவ்வளவு தத்ரூபமாக எப்படி நடித்தீர்கள்? சொந்த அனுபவங்கள் ஏதாவது?***

அப்பா— அம்மாவுக்கு முன்னாடி இப்படிப்பட்ட கேள்விகளையெல்லாம் கேட்டால் எனக்கு அழுகைதான் வரும். சின்னப்பொண்ணு சார் நான். காதலைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. இனிமேல் தான் கத்துக்கணும்(சிரிக்கிறார்).

பாலாஜி சார் எதிர்பார்க்கிற நடிப்பு வருகிற வரைக்கும் விடமாட்டார். சொல்லப்போனால் அவர் தான் எனக்குக் காதலிக்கக் கற்றுக்கொடுத்தார்.

***'காதல்' படத்தில் மிகவும் ரசித்து நடித்த காட்சி எது? மிகவும் கஷ்டப்பட்டு நடித்த காட்சி எது?***

இரண்டையும் அந்த 'கிறு கிறு...' பாடல் காட்சியில் அனுபவித்து நடித்தேன். அதாவது அந்தப் பாடலும், சிச்சுவேஷனும் ரசிக்கக் கூடியது. ''நொறுங்கறேன்.... கிறங்கறேன்...'' என்று சிச்சுவேஷனுக்கு ஏற்றபடி ரொமான்டிக் மூடு வெளிப்படுத்தி நடிக்க வேண்டும். இந்தக் காட்சியில் தான் மிகவும் கஷ்டப்பட்டு நடித்தேன்.

***படத்தைப் பார்த்து உங்களைப் பாராட்டிய பிரபலங்கள்?***

ஷங்கர் சார் படத்தைப் பார்த்து ''நான் வைத்த பெயரை காப்பாற்றிவிட்டாய், கீப் இட் அப்''என்றார். மற்றும் பாரதிராஜா சார், கே.பாலச்சந்தர் சார், தரணி சார், பார்த்திபன் சார், சேரன் சார், செல்வராகவன் சார்... என்று ஏராளமான திரையுலகப் பிரமுகர்கள் என்னைப் பாராட்டியுள்ளனர். அவர்களது படங்களில் நடிக்கவும் அழைத்திருக்கின்றனர்.

***'காதல்' படத்தை தொடர்ந்து நீங்கள் நடித்துவரும் படங்கள் எவை?***

இப்போது நான் நடிக்க ஒப்புக்கொண்டு நடித்து வரும் படம் மலையாள திரைப்பட உலகின் பிரபல இயக்குநரான சிபி மலையில் இயக்கும் ''ஆலீஸ் இன் வண்டர் லான்ட் '' என்ற மலையாளப்படம். இதில் ஆலீஸ் என்ற டைட்டில் ரோலில் நடிக்கிறேன். ஹீரோ ஜெயராம். ஊட்டியில் இதன் பெரும்பாலான காட்சிகளின் படப்பிடிப்புகள் நடந்துவிட்டன.

தமிழில் 'காதலுக்கு' பிறகு நடிக்க ஒப்புக்கொண்ட படம் 'ஆஸ்கார் பிலிம்ஸ்' தயாரிக்கும் ''டிஸ்யூம்''. 'ரோஜாக்கூட்டம்' புகழ் சசி இயக்கும் படம் இது.

அதற்கடுத்து 'ஜி.ஜே.பிலிம்ஸ் தயாரிப்பில் சீனு ராமசாமி இயக்கத்தில் 'கூடல் நகர்' என்ற படத்திலும், பி.எல்.தேனப்பன் சார் தயாரிப்பில் சிம்புவின் ஜோடியாக 'வல்லவன்' என்ற படத்திலும் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளேன். 'கலைப் புலி'தாணு சார் தயாரிப்பிலும் ஒரு படத்தில் நடிக்கவுள்ளேன்.

***'காதல்' நடிப்பில் கலக்கியது மாதிரி இனிவரும் படங்களில் கிளாமரிலும் கலக்குவீர்கள் இல்லையா?***

கிண்டல் பண்ணாதீங்க சார். என் உருவத் தோற்றம் கிளாமர் காட்டி நடிக்கும் நடிகைகளின் மாதிரியா இருக்கிறது? கிளாமர் என் பர்சனாலிட்டிக்கு ஒத்துவரவே வராது. ஒத்துவரும் என்றால் கூட அதிக கிளாமர் காட்டி நான் நடிக்க மாட்டேன்.



—சந்தியா—

"பரவாயில்லைப்பா. நான் ஒரு மூலையில் இருக்கிறேன்."

மெல்கியோரும் "எதுக்கு வீண் செலவு, நானும் உங்களோடேயே வந்திடறேன்" என்றார்.

சரி என்று இருவரையும் தங்கள் இருப்பிடத்துக்கு அழைத்துச் சென்றனர்.

காலை உணவு முடித்த பின் நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றனர். நடராஜன் வாதாடுவதைப் பார்க்க அற்புதத்திற்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. மிக நன்றாக வாதாடினார்.

அப்போது எதிர்த்தரப்பில் வழக்கறிஞர்களுடன் அமர்ந்திருந்த ஒருவரைக் காட்டி "அவர்தான் பெரிய அதிகாரி" என்றால் மெல்கியோர்.

'இந்த ஆள்தானா.... இந்த பாவிதானா எல்லாத்துக்கும் காரணம்.....?'

அவரது நெஞ்சம் படபடத்தது. அப்போதுதான் முதன் முறையாக பெரிய அதிகாரியை அத்தனை அருகில் பார்க்கிறார்.

மதிய இடைவேளையில் வெளிவந்தனர். மதியம் ஒரு மணிக்கும் அதிபயங்கரமாக குளிரியது.

"என்னம்மா இப்படி இருக்கீங்க....!" அருகில் கேட்ட குரலில் திரும்பினார் அற்புதம். எதிரே அதிகாரி.

"நல்லாயிருக்கேன்... நீங்க எப்படி இருக்கீங்க?" என்றார்.

"என்னம்மா இந்தக் குளிருக்கு வெறும் சால்வையோட வந்துட்டீங்க" - அக்கறையோடு கேட்டார்.

அருகிலிருந்த வழக்கறிஞர் இராமதாசுக்கு தாங்க முடியவில்லை. "பையன் மேல் குற்றச்சாட்டுக்கு மேல குற்றச்சாட்டு அடுக்கி, இன்றைக்கு இந்தம்மாவை டெல்லி வரைக்கும் வரவைச்சுட்டு, அப்புறம் என்னய்யா அக்கறையா விசாரணை வேண்டிக்கிடக்கு?" கிண்டலும் கோபமுமாக கேட்டார்.

"போகட்டும் விடுங்கய்யா" - என்று அதிகாரியை காத்தார் அற்புதம்.

அதிகாரி மீண்டும் "சொக்ஸ், ஸ்வெட்டர்லாம் வாங்கி போட்டுக்கோங்கம்மா, இல்லைன்னா குளிர் தாங்காது" - என இரக்கமாக கூறிவிட்டு நகர்ந்தார்.

அன்று வீடு திரும்பிய பிறகும் நீதிமன்றத்தில் நடந்தவையே மனதில் நிழலாடின. 'இந்த அளவிற்கேனும் வெளிப்படையாக பிறரையும் காண அனுமதித்து பூந்தமல்லியில் விசாரணை நடந்திருந்தால் அறிவு கண்டிப்பாக அப்போதே வெளி வந்திருப்பானே' - அவன் மனம் ஏங்கியது.

'சரி பரவாயில்லை. போனது போகட்டும். ஆனால், இங்கு நடப்பதையும் நடராஜன் வாதத்தையும் பார்த்தால் இந்த முறை கண்டிப்பாக வெளிவந்து விடுவான்' - அவர் மனதில் அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டது.

மறுநாள் நீதிமன்றத்திற்குச் செல்லும்முன் சந்திரசேகர் அற்புதத்திடம் வந்தார். "அம்மா... சீனியர் நீங்க வந்திருக்கிறத நீதிபதிகளுக்கு உணர்த்தனும்னு நினைக்கிறாரு. அதனால நடுவுல நான் வந்து உங்ககிட்ட ஏதுனா கேட்பேன். நீங்களும் எந்திரிச்சு நின்று எனக்குப் பதில் சொல்லுங்க" - என்றார்.

அதன்படியே அன்று அறிவு குறித்து வாதாடிக் கொண்டு வந்த நடராஜன், அறிவின் வயதை ஊர்ஜிதம் செய்ய கேட்பதுபோல் சந்திரசேகரிடம் திரும்பி, அற்புதத்தைக் காட்டி கேட்டுவரச் சொன்னார். சந்திரசேகர் அருகில் வந்து அற்புதத்திடம் கேட்க அவரும் எழுந்து நின்று அவரிடம் பதிலுரைத்தார். பிறகு மீண்டும் வாதம் தொடர்ந்தது.

அதற்கு அடுத்த இரு நாட்களும் விடுமுறை - பொங்கலுக்கு.

மறுநாள் பொங்கலன்று உச்சநீதிமன்ற வழக்கறிஞர் இராமசுப்பிரமணியம் தனது வீட்டிலிருந்து சர்க்கரைப் பொங்கல் செய்துகொண்டு வந்து அனைவருக்கும் கொடுத்தார். இவர்தான் மேல்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்தவரென அறிமுகப்படுத்திவைத்தனர்.

பொங்கலன்று காலையிலிருந்தே அற்புதத்தின் மனம் பழைய நினைவுகளில் ஆழ்ந்துவிட்டது.

அதற்குள் கிட்டத்தட்ட ஒரு வருடம் ஓடிவிட்டதே - என நினைத்துக் கொண்டார்.

சென்ற ஆண்டு பொங்கலின்போது 'இதுதான் மகனைப் பிரிந்து இருக்கும் கடைசிப் பொங்கல். அடுத்த வருடம் மகன் நம்மிடம் இருப்பான். இன்னும் இரண்டு வாரத்தில்தான் தீர்ப்பு வரப்போகிறதே' என்று குதூகலித்தது நினைவிற்கு வந்தது.

பொங்கலுக்கு மகன் வருவானா என ஏங்கி குயில்தாசன் ஒரு கவிதை எழுதியிருந்தார்.

*தைபிறந்தால் வழிபிறக்குமா?*
*தீர்த்துச் சொல்லடி குயிலே!*



# தொடரும் தவிப்பு

*இந்தப் பொங்கலுக்காவது*
*என் மகன் வருவானா?*
*எண்ணிச் சொல்லடி குயிலே!*
*தை பிறந்தால் வழிபிறக்குமா?*

*பொங்கல் வைக்க - நான்*
*புதுப்பானை வாங்கட்டுமா?*
*புலியின் மேனிபோல்*
*புத்தாடை தைக்கட்டுமா?*
*தை பிறந்தால் வழிபிறக்குமா?*

*வீடெங்கும் திருத்திப் - புது*
*வண்ணம் அடிக்கட்டுமா?*
*வெற்றியைக் கொண்டாட*
*விருந்தை அழைக்கட்டுமா?*
*தை பிறந்தால் வழிபிறக்குமா?*

*சிறையின் கூட்டிலும் - உன்போல்*
*சிறகுகள்முளைத்திடுமா?*
*விடுதலை வானிலே*
*வலமிட்டுப் பறந்திடுமா?*
*தை பிறந்தால் வழிபிறக்குமா?*

*அடிமை விலங்குடைய - மகன்*
*குருதியை வடித்தானா?*
*விடியலுக் கிளமை*
*வசந்தமே விலைதானா?*
*தை பிறந்தால் வழிபிறக்குமா?*

*களம் வென்று வந்தே - என்*
*கண்களை நிறைப்பானா?*
*நெருங்கிவரும் என்றன்*
*சாவைத் தடுப்பானா?*
*தை பிறந்தால் வழிபிறக்குமா?*

> தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலிருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை இது.
>
> நவீன புறநானூறாக உணர்வும், விறுவிறுப்பும்நிறைந்து இதனைச் செதுக்கியுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.

படித்தவர் நெஞ்சை உருக்கிய அக்கவிதையைப் பாடலாக்கினார் தேனிசை செல்லப்பா.

தீர்ப்புக்கு முதல்நாள் சென்னையில் நடந்த தந்தை பெரியார் தமிழிசை மன்றத்தின் இசை விழாவில் அப்பாடல் பாடப்பட்டபோது அரங்கமே நிசப்தமாக இருந்தது.

பின்னர் வந்து அற்புதத்திடம், 'அதான் நாளைக்குத் தீர்ப்பு வரப்போகுதே. பிள்ளை வந்திருவான் இந்த நேரத்தில எதுக்கு ஐயா இப்படியெல்லாம் எழுதிட்டு இருக்காரு. மகிழ்ச்சியா இருங்கம்மா' என்று கூறியவர்களும் உண்டு.

அன்று முழுவதும், இரவு இசைவிழா முடியும் வரையில் அனைவருடனும் அமர்ந்து சிரித்துச் சிரித்து மகிழ்ச்சியில் திளைத்தது இன்னமும் நினைவிலிருக்கிறது. அப்படி சிரித்த சிரிப்புக்கெல்லாம் நேர்மாறாக கதறியழும்படி மறுநாள் வந்தது தீர்ப்பு.

இதோ அடுத்த பொங்கலும் வந்துவிட்டது. ஆனால் மகன் இன்னமும் சிறையில். டெல்லி வருவதன்முன் பொங்கலுக்கு புதிய ஆடைகள் எடுத்துக் கொடுத்துவிட்டுத்தான் வந்திருந்தார் அற்புதம். புதியவை அறிவுக்கு மட்டுமல்ல உடனிருக்கும் அனைவருக்கும்தான். அப்படி அனைவருக்கும் பொங்கலுக்கு புதியவை எடுத்துக் கொடுப்பது வாடிக்கையாகிப் போனது.

முதன் முறையாக அறிவுக்கு மட்டும் புத்தாடைகள் எடுத்துச்சென்றபோது வாங்க மறுத்துவிட்டான். "அம்மா! முடிஞ்சா எல்லோருக்கும் வாங்கிட்டு வாங்க. இல்லைன்னா எனக்கும் வேண்டாம்."

"சரிப்பா உன் மனசு புரியுது. ஆனா அத்தனை பேருக்கும் துணி எடுக்க காசுக்கு எங்கப்பா போறது?"

"சோலையார் பேட்டைல நம்ம ஆதரவாளர்கள்கிட்ட கேட்டுப் பாருங்க, முடிஞ்ச வரைக்கும் முயற்சி பண்ணுங்க. இல்லைன்னா பரவாயில்லை விட்டுடுங்க"

மகன் சொல்லிவிட்டானே என்று ஊர் திரும்பியவுடன் உள்ளூர் ஆதரவாளர்களிடம் கேட்டார். அற்புதமே எதிர்பார்க்காத ஒரு ஆதரவு அவர்களிடமிருந்து கிடைத்தது. சோலையார் பேட்டை மக்கள் எந்த அளவிற்கு அறிவு மீதும் அந்த குடும்பத்தின் மீதும் பாசமும் நம்பிக்கையும் வைத்திருந்தனர் என்பதற்கு எடுத்துக்காட்டாக நடந்த முதல் சம்பவம் அது. ஊராரின் ஆதரவுடன் அனைவருக்கும் துணி எடுத்துக் கொடுத்தார்.

அன்று முதல் ஒவ்வொரு வருடமும் அது வழக்கமானது. இதனால் பிரச்சினைகளைக் கூட சந்தித்துள்ளார்.

அறிவு சேலம் சிறையில் இருந்தபொழுது வந்த பொங்கலில் அங்கிருந்த அதிகாரி வேலூரைச் சேர்ந்தவர். அனைவருக்கும் கொடுக்க அனுமதி மறுத்துவிட்டார். அற்புதமா விடுவார். மீண்டும் மீண்டும் கேட்டு பேச்சு முற்றி அந்த அதிகாரி நீ, வா, போ என ஏக வசனத்தில் அற்புதத்தைப் பேசிவிட்டார். அற்புதத்திற்கு மிகுந்த கோபம் வந்து விட்டது. 'கண்டிப்பாக உடைகளை உள்ளே கொடுக்கிறேன் பார்' என சவால்விட்டு, துணிமூடையை எடுத்துக் கொண்டு சென்னை வந்தார்.

(தவிப்பு தொடரும்.....)

**யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?**

## நாட்டுக்கோர் நல்லதம்பி

கரு: பரணபத்திரன் உரு: சாமி




## தொல்காப்பியமும் ஐந்திரமும்......

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

'ஏழியன் முறைய தெதிர்முக வேற்றுமை வேறென விளம்பான் பெயரது விகாரமென் றோதிய புலவனு முளனொரு வகையா னிந்திர னெட்டாம் வேற்றுமை யென்றனன்'

(புறத்திரட்டில் காணப்படும் இவ் அகத்தியச் செய்யுள் நன்னூல் உரையில் உரையாசிரியர் மயிலை நாதரால் மேற்கோளாக காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், எந்த விளக்கமும் சொல்லப்படவில்லை)

இவ்வகத்தியச் செய்யுளில் 'ஏழியன் முறை' என்ற இலக்கண நூல் சொல்லப்பட்டுள்ளது. அதன் ஈற்று அடியில் 'இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்' என்று சொல்லப்பட்டிருப்பது இந்திரன் இயற்றிய இலக்கண நூலான இந்திரம் (ஐந்திரம்) என்ற நூலைச் சுட்டும்.

### எட்டாம் வேற்றுமை

இனி அந்த ஐந்திரம் வடநூலா? தமிழ் நூலா? என்று ஆராயுமிடத்து உலகில் இன்று வழங்கும் 3000 மொழிகளில் எட்டு வேற்றுமையுருபுகள் தமிழ் மொழியைத் தவிர வேறு எந்த மொழியிலும் இல்லை. அத்தகு எட்டாம் வேற்றுமை உருபைச் சுட்டி 'இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்' என்றால் இந்திரன் செய்த நூல் தமிழ் நூல் என்பதில் எவ்வித ஐயத்திற்கும் இடமில்லை. ஏனெனில் வடமொழியில் எட்டு வேற்றுமை உருபுகள் இல்லை.

ஏழியன் முறை, ஐந்திரம் போன்ற இலக்கண நூல்களுக்கு முன் இடைக்கழிச் செங்கோடன் இயல் நூலும், பேராற்று நெடுந்துறையன் பெரு நூலும் வழங்கி வந்திருப்பதையும் நாம் அறிய முடிகிறது.

அவுஸ்திரேலியாவில்
சுடர் ஒளி
பெற்றுக்கொள்ள
எமது விநியோகஸ்தர்கள்
M.K.S.International
23-25 Pultney St.
Dandenong, 3175
Australia :- 03 97 013165

# மங்கையரை மலடி என்று சொல்லலாமா...?

குழந்தைப் பேறு என்பது எல்லாத் தம்பதிகளும் விரும்பும் பொதுவான ஒரு விடயம்தான். ஆனால், பலருக்கு இந்த விடயம் சந்தோஷத்தைக் கொடுத்தாலும், சிலருக்கு இந்த சந்தோஷம் எளிதாகக் கிடைத்துவிடுவதில்லை. எல்லா விரல்களும் ஒன்று போல் இருப்பதில்லை அல்லவா? அதுபோலத்தான் எல்லாத் தம்பதிகளுக்கும் இந்த விடயம் ஒரே சமயம், அவர்கள் எதிர்பார்ப்பது போல் நடந்துவிடும் என்று சொல்லிவிட முடியாது.

இன்றும் சரி, அன்றும் சரி திருமணமான தம்பதிகளுக்கு அவர்களுடைய குடும்பங்கள் கொடுக்கும் அதிகப்படியான அவகாசம் மூன்று மாதங்கள் தான். அதன் பிறகு 'என்ன ஒரு விசேஷமும் இல்லையா?' என்ற கேள்விகளால் தம்பதியினரை அரித்தெடுக்கத் தொடங்கிவிடுவார்கள் அவர்களுடைய உறவினர்களும், நண்பர்கள் வட்டமும்.

அதிலும் ஆண் இந்த விடயத்திலிருந்து பெரும்பாலும் தப்பிவிடுவார். அவரிடம் இந்தக் கேள்வி பெரும்பாலும் நேரிடையாகக் கேட்கப்படுவதில்லை. ஆனால், பெண்கள் தான் மொத்தத் தாக்குதலுக்கும் ஆளாகிறார்கள். பொஞ்ச நாள் சென்றதுமே அவளுக்கு சமூகம் மலடி என்ற பட்டமும் வழங்கிவிடுகிறது.

நாம் முதலில் ஒரு விடயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். பெண்களில் மலடு என்று ஒரு விடயமே கிடையாது தெரியுமா? தம்பதிகள் இருவரும் சரியானபடி, சரியான நேரத்தில் உறவு வைத்துக் கொள்ளாமல் இருந்திருக்கலாம். அல்லது அவர்கள் சரியானபடி சிகிச்சை பெற்றுக் கொள்ளாமல் இருந்திருக்கலாம். இவற்றினால்தான் குழந்தை உண்டாகாமல் இருந்திருக்கலாமே ஒழிய மலட்டுத்தன்மை என்பது பெண்ணில் கிடையாது.

திருமணமான தம்பதிகளில் நூறில் இருபது பேருக்கு குழந்தை பிறப்பதில் பிரச்சினை ஏற்படுகிறது. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். இவர்களில் 30–40% வரைதான் பெண்கள் காரணமாகிறார்கள். பத்து வருடங்களுக்கு முன் 20–25% வரைதான் ஆண்கள் காரணமாக இருந்தார்கள். ஆனால் இன்று 40% வரைக்கும் குழந்தையில்லாப் பிரச்சினைக்கு ஆண்கள் தான் காரணமாக இருக்கிறார்கள். 15–20% வரை பிரச்சினைக்குக் காரணம் யாரென்றே தெரியாமல் போகலாம். இந்தச் சந்தர்ப்பத்தில் தம்பதிகள் இருவரும் எந்தவித பிரச்சினையுமின்றி இருந்தாலும் அவர்களுக்கு ஏதோ ஒரு காரணத்தினால் குழந்தை பிறக்காமலே போகும்.



எது எப்படியோ திருமணமாகி இரண்டு வருடங்களாகியும் குழந்தை உண்டாகாமல் இருந்தால் தம்பதிகளில் யாரேனும் ஒருவருக்கு பிரச்சினை இருக்க முடியும் என்று கருதலாம். ஆனால், குறிப்பிட்ட சில மாதங்களுக்குள்ளேயே பிரச்சினை உள்ளது என்றெல்லாம் கண்மூடித்தனமாகச் சொல்லிவிட முடியாது.

பொதுவாக குழந்தையில்லாப் பிரச்சினைக்காக சிகிச்சை பெற்றுக்கொள்ளச் செல்லும் தம்பதிகளில் நூறு பேரில் 85 சதவீதம் பேர் எந்தவிதமான மருந்து மாத்திரைகளையும் பயன்படுத்தாமலேயே கருத்தரித்துவிடுவார்கள். மீதமுள்ளவர்களுக்குத்தான் மருத்துவரின் உதவி தேவைப்படும். இந்தப் பிரச்சினையுள்ளவர்கள் மருத்துவரிடம் செல்லும்போது அவரிடம் தயக்கமில்லாமல் தங்கள் பிரச்சினைகளைச் சொல்ல வேண்டும்.

இவற்றை விட சில தம்பதியினருக்கு நடந்தது இரண்டாம் திருமணமாக இருந்தாலும், கணவர் ஏற்கனவே குழந்தை பெற்றவராக இருந்தாலும் முன்பிருந்த உடல் நிலை போல அவருக்கு பின்பு இல்லாமல் போகலாம். இதுவும் கூட கருத்தரிக்காமல் போகக் காரணமாகலாம்.

சில சமயங்களில் 'குழந்தை இல்லையா?' என்ற சமூகத்தின் கேள்வி கூடத் தம்பதிகள் மனதில் ஒருவித பாதிப்பை ஏற்படுத்தி கருத்தரிப்பு உண்டாவதில் பிரச்சினை ஏற்படுத்தலாம்.

இவ்வாறு பல காரணங்களால் உடலளவில் பிரச்சினைகள் இல்லாத தம்பதிகளுக்கும் கூட கருத்தரிப்பதில் பிரச்சினைகள் உண்டாகலாம்.

யார் என்ன சொன்னாலும் நாம் சந்தோஷமாக இருந்து எம்மைச் சுற்றியிருக்கும் மற்றவர்களையும் மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்ற சிந்தனை எம்மிடம் இருந்தால் எம் வாழ்வில் துன்பம் என்ற வார்த்தைக்கே இடமில்லை அல்லவா?

எனவே குழந்தை இல்லை என்றால் அதை நினைத்துக்கு கவலைப்பட்டுக் கொண்டிருக்காமல் தம்பதிகளிருவரும் ஒருவருக்கொருவர் குழந்தைகளாக இருந்துவிட்டால் கூட மனதில் மகிழ்ச்சிக்குக் குறைவிருக்காது, அல்லவா?

# அழகாய் இருக்க ஆசையில்லையா?

அழகாய்த் தோன்றுபவர்களைக் கண்டால், நாமும் அப்படித் தோற்றமளிக்க வேண்டும் என மற்றவர்களும் ஆசைப்படுவது நிஜம். எனவே, இங்கு கொடுக்கப்பட்டுள்ள டிப்ஸைப் பயன்படுத்தி நீங்களும் தான் அழகாய்த் தோற்றமளியுங்களேன்.

மேக்கப் போடுவதற்கு முன் ஏதாவது மாய்ச்சரைசர் லோஷனை முகத்தில் தடவி, பஞ்சு வைத்துத் துடைத்து, சுத்தப்படுத்திய பின் மேக்கப் போட வேண்டும். தினமும் இரண்டு அல்லது மூன்று முறை ஏதாவது ஒரு நல்ல கிரீமை முகத்தில் போடுவது சிறந்தது. வரண்ட சருமம் உடையவர்கள் இவை இரண்டையும் தினமும் கடைப்பிடித்தால் முகத்துக்குக் கவர்ச்சி உண்டாகும்.

வரண்ட சருமம் உடையவர்கள் ஆட்டுப்பாலை முகத்தில் தேய்த்து, அரை மணி நேரம் கழித்துக் கழுவ வேண்டும். இதனால் முகம் மிருதுவாகும்.

எண்ணெய்த் தன்மை அதிகமுள்ள சருமம் கொண்டவர்கள், முகம் எப்போதும் சுத்தமாக இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். முகப்பரு போன்ற தோல் வியாதிகள் அதிகமாக ஏற்படுவது எண்ணெய்த் தன்மையுள்ள முகம் உடையவர்களுக்குத்தான். எண்ணெய்த் தன்மை கொண்ட தோல் உடையவர்கள் தினமும் நான்கு முறை சவர்க்காரம் கொண்டு முகம் கழுவ வேண்டும்.

சருமத்தில் எண்ணெய்த் தன்மை அதிகம் உடையவர்கள், எண்ணெயில் பொரித்த பலகாரங்கள், சொக்லட், பன்றி இறைச்சி, வெண்ணெய், எண்ணெய் போன்றவற்றை உண்பதையும், தலையில் அதிகம் எண்ணெய் தேய்ப்பதையும் தவிர்க்க வேண்டும். இதற்குப் பதிலாக கீரை, காய்கறி போன்றவற்றை அதிகம் உண்ண வேண்டும்.

சருமத்திலுள்ள உரோமங்களின் வேர்களின் இடையே உள்ள அழுக்கையும், எண்ணெய்த் தன்மையையும் வெளியேற்ற வாரத்துக்கு ஒருமுறை ஆவி பிடிக்க வேண்டும். இதனால் முகத்திலுள்ள எண்ணெய்த் தன்மை நீங்கிவிடும். முகம் சுத்தமாகிவிடும்.

முட்டைக்கோஸ் இலையை நசுக்கிப் பிழிந்து, சாறு எடுத்து, முகத்தில் தேய்த்துப் பாருங்கள். முகம் மிகவும் மென்மையாகி, எண்ணெய்த் தன்மையும் அகன்றுவிடும்.



எண்ணெய்த் தன்மையுள்ள சருமம் உடையவர்கள் முகத்தில் மாய்ச்சரைஸ் தடவுவதோடு, இரவில் உறங்கும் முன் செயற்கை அழகு சாதனங்களைப் பயன்படுத்தக் கூடாது. இது முகப் பரு மற்றும் கரும் புள்ளிகள் போன்றவை உருவாகக் காரணமாகும். இரவு உறங்கு முன் முகத்தை நன்றாகச் சுத்தம் செய்து உறங்க வேண்டும்.

## கருச்சிதைவு ஏற்படுவது ஏன்?

திருமணமான பெண்கள் ஒரு சிலருக்கு கர்ப்பம் தரித்ததும் சில நாட்களில் கருச்சிதைவு ஏற்படுவதுண்டு. இதனைத் தவிர்க்க முன்கூட்டியே இரத்தப் பரிசோதனை மூலம் தெரிந்து அதற்கு ஏற்றவாறு மருத்துவம் செய்துகொள்ள முடியும் என்கின்றனர் அவுஸ்ரேலிய வைத்தியர்கள்.

கருச்சிதைவு ஏற்படுவதற்கும் கர்ப்பிணிகளின் இரத்தத்திலிருக்கும் பிக் என்ற புரதப் பொருளின் அளவுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. கர்ப்பகாலத்தில் முதல் 6 வாரத்திலிருந்து 12 வாரம் வரையில் தாய்மார்களின் இரத்தத்தில் புரதம் குறைவாக இருந்தால் சில வாரங்களில் கருச்சிதைவு ஏற்படும் வாய்ப்பு அதிகம் உள்ளது. அதற்குத் தகுந்த மாதிரி மருத்துவம் செய்து நல்ல ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று கூறப்படுகிறது.




# தினமும் ஒரு அப்பிள்



அப்பிளில் இல்லாத சத்துக்களே இல்லை எனலாம். உடலை வளர்க்கும் விட்டமின்களும், உடலின் செயல்களை ஊக்குவிக்கும் தாதுப்பொருட்களும், உடல் உள்ளுறுப்புகளும், சுரப்பிகளும் செயற்பட உதவும் நுண்ணூட்ட சத்துகளும், ஹோர்மோன் மற்றும் பல்வேறு அமிலங்களும் அப்பிளில் அடங்கி உள்ளன.

அப்பிளில் சர்க்கரைச்சத்து, நீர்ச்சத்து, மாச்சத்து, நார்ச்சத்து போன்றவைகள் உள்ளன. புரதச்சத்து, சுண்ணாம்பு, சோடியம் பொஸ்பரஸ் போன்ற சத்துகளும் விட்டமின் சி போன்றவைகளும் அடங்கியுள்ளன.

அப்பிளானது விட்டமின் குறைவால் ஏற்படும் நோய்களைக் குணப்படுத்தும். உடல் செயல்களை ஒழுங்குபடுத்தி, நோய் எதிர்ப்பு சக்தியைக் கூட்டும்.

அப்பிளை எப்படி வேண்டுமானாலும் சாப்பிடலாம். அப்படியே கடித்தும் உண்ணலாம்.

குழந்தைகளுக்கு அப்பிளைக் கொடுத்து வர அவர்களின் எலும்பு வளர்ச்சிக்கும், பற்களின் உறுதிக்கும் உதவுகிறது. அப்பிள் சாறு அருந்திவர தோல் சுருக்கம் மாறி உடல் பளபளப்பாகும்.

குடலுக்குப் பலத்தைத் தரும் பழம் அப்பிள். வாய் நாற்றம் உள்ளவர்கள் தொடர்ந்து நான்கு நாட்கள் சாப்பிட்டு வர வாய் துர்நாற்றம் உடனே போகும்.

இரத்தச் சோகை உள்ளவர்கள் அப்பிள் சாப்பிட்டு வர இரத்த அணுக்கள் பெருகி இரத்தச் சோகை அடியோடு குணமாகும். அப்பிளிலுள்ள சத்து எலும்புகளை உறுதிப்படுத்தும். மூளைக்கு சுறுசுறுப்பைத் தரும். ஞாபக சக்தியையும் அதிகரிக்கச் செய்யும்.

# சமையல் குறிப்பு

### ஸ்பெஷல் சிக்கன்

தேவைப்படும் பொருட்கள்

| | |
|---|---|
| கோழி இறைச்சி | – 250 கிராம். |
| சி.வெங்காயம் | –75கிராம். |
| செத்தல் மிளகாய் | – 10கிராம். |
| கறிவேப்பிலை | –தேவையான அளவு. |
| இஞ்சி | –10கிராம். |
| தே.எண்ணெய் | –20மில்லிலீற்றர். |
| உப்பு | – தேவையான அளவு. |

### செய்முறை

இறைச்சி எலும்பில்லாமல் இருக்க வேண்டும். அதனை நீளவாக்கில் நறுக்கி எடுங்கள்.

இறைச்சியில் சிறிதளவு மிளகாய்த் தூளும், உப்பும் கலந்து வையுங்கள்.

சிறிய வெங்காயம், பூண்டு, செத்தல் மிளகாய், கறிவேப்பிலை, இஞ்சி ஆகியவைகளை மிக்சியில் போட்டு அரைத்து எடுங்கள்.

சட்டியில் எண்ணெயை ஊற்றி சூடாக்கி அதில் அரைத்து எடுத்தவற்றைக் கொட்டிக் கிளறுங்கள். இறைச்சி மற்றும் உப்பு சேர்த்து வேகான சூட்டில் வேக வையுங்கள். வெந்துவிட்டதா? பிறகென்ன சுவைக்க வேண்டியதுதானே...!

# நெருப்பாறு

**11** குறு நாவல்

### முன்கதைச் சுருக்கம்

*இது முதலிரவு. ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒரு தடவை வருகின்ற அற்புதமான, ஆனந்தமான நாள். எல்லோரும் போல் நினைவுகள் நிஜங்களாகின்ற இரவுக்கே உரிய பதட்டத்துடனும், இனம் தெரியாத பயத்துடனும், அதீத கற்பனையுடனும், எதிர்பார்ப்புடனும் மாலா கையில் பாலுடன் தனியறையுள் நுழைகின்றாள். இளங்கோ உள்ளே அவளை வரவேற்று உட்காரவைத்தான். நிறைய எதிர்பார்ப்புடன் வந்த மாலாவுக்கு அதிர்ச்சி. என்னால் முடியலையே என்று இளங்கோ கூறியபோது, என்ன காரணம் என்று அவள் மனதை குடைய நேரடியாகவே இளங்கோவிடம் கேட்டுவிட்டாள். அவன் கூறிய காரணத்தை அவளால் மனதளவில் ஏற்கமுடியவில்லை. எனினும் விட்டுக்கொடுப்புடன் இருக்க முடிவெடுத்தாள். மனதுள்போராட்டம். என்னதான்முடிவு? தற்கொலைதான் எனமுடிவெடுக்கிறாள். அதற்கும் இளங்கோவைதிட்டிவிட்டுதீமூட்டிக்கொள்கிறாள் அவள். அணைக்கச்சென்று போராடுகிறான்.*

*அப்போது அவனுக்கு சில வருடங்களுக்கு முன்னைய தனது சிறை வாழ்வு நினைவுக்கு வருகிறது. சிறையில் ஒரு தமிழ்ப் பெண்ணை, மாறன் எங்கே என்று கேட்டு சித்திர வதைப்படுத்தி பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்குகின்றனர். இதனால் இளங்கோ தனது கண்களை மூடிக்கொள்கிறான்.*

*மீண்டும் அவன் கண்களை விழித்துப் பார்த்தபோது..... அகோரம் தொடர்ந்தது. அவள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டாள். அதன் பின்னர் இடம்பெற்ற போர்நிறுத்த ஒப்பந்தத்தை அடுத்து அவன் விடுவிக்கப்பட்டு சிறையில் இருந்து வெளியே வருகின்றான்.*

*நகரம் எவ்வளவோ வளர்ச்சியடைந்திருந்தது. ஆனால், அவ்வளவுக்கவ்வளவு கிராமம் பின் தங்கியே இருந்தது. இனி என்ன செய்யலாம் என்ற கேள்விக்கு விடை காணாது துடித்தான். முதலில் மாறனை தேடும் முயற்சியில் ஈடுபட்டு தோற்றுப் போனான். இனி தான் போராளியாவதா? அல்லது திருமணம் செய்து வாழ்வதா? என்று சிந்தித்தான்.*

*அவனது சிந்தனைகளை கலைப்பது போல் அந்த சிறையில் நடந்த கோரச்சம்பவமும், அவளின் அழகிய உருவமும் மனக்கண்முன் வந்து அவனை வாட்டின. அவனால் திருமணத்தின் பின் தனது மனைவி வசந்தமாலாவை நெருங்கும் போதெல்லாம் சிறையில் சிதைந்த பெண்ணின் முகமே நினைவிற்கு வரும். இதனால் அவன் உடல் வியர்ந்து மனம் விகாரமடையும்.*

*வசந்தமாலா தீயில் எரிவதை பார்த்ததும் இளங்கோ அவளை கட்டி அணைத்ததும் தீ கட்டுக்குள் வந்தது. அவன் அந்த சிறையில் எரிந்த அவலப் பெண்ணை நினைத்து ''காப்பாற்றிவிட்டேன்'' ''காப்பாற்றிவிட்டேன்'' என்று கூறியவாறு மயக்கமுற்று விழுந்தான். இதனைப் பார்த்ததும் வசந்தமாலா தான் செய்த முட்டாள் தனத்தை எண்ணி வருந்தினாள். கழற்றி எறியப்பட்ட மாங்கல்யத்தை எடுத்து மீண்டும் அணிந்து கொண்டாள்.*

தண்ணீரை எடுத்துவந்து கணவனருகே அமர்ந்து கொண்டு அவனது முகத்தைத் தண்ணீரால் துடைத்தாள். 'அத்தான்' என்று நெஞ்சுருக அழைத்தாள். இளங்கோவுக்கு மெல்ல மெல்ல நினைவு திரும்பியது. எனினும் கண்களைத் திறக்க முடியாமல் சிறிது நேரம் அப்படியே படுத்திருந்தான். நெஞ்சின் ஆழத்தில் குடிகொண்டிருந்த வேதனையில் அவன் மிகவும் வாடிப்போயிருந்தான். அவனது மூடிய விழிகளுக்குள் வசந்தமாலா நர்த்தனம் புரிந்து கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் நினைவு முழுமையாக மீள கண்களை மெதுவாகத் திறந்து பார்க்கிறான் இளங்கோ.


அவனது பார்வை மங்கலாகத் தெரிந்து பின்னர் சிறிது சிறிதாகத் தெளிவாகிவர, எதிரே தென்பட்ட வசந்தமாலாவின் உருவம் பிரகாசமாகத் தெரிந்தது. வசந்தமாலாவின் இமைகளின் ஓரம் நீர்த்துளிகள் பூத்து நின்றாலும், முகம் அவனது விழியில் மலர்ந்து பூவாய் விரிந்தது. ஏக்கத்தோடு அவனைப் பார்த்தபடி அருகேவந்து ''அத்தான் உங்களுக்கு ஒன்றுமில்லையா?''என்றாள் பரிவோடு.

''ஒன்றுமில்லை.... சிறுகாயம் தான்.... உனக்குத்தான்....'' என்றபடி அவளது கருகிப்போன உடலில் சில பகுதிகளை அனுதாபத்துடன் பார்த்தான்.

எதிர்பாராமல் ஏற்பட்டிருந்த அசாதாரண அவலத்தினால் இருவரும் குழம்பிப் போயிருந்தனர். அந்தக் குழப்பத்தினுள்ளும் ஒரு வித தெளிவு தெரிந்தது. மனது மிகவும் தெளிவாயிருப்பது போன்ற உணர்வு. சிறைச்சாலைப் பெண்ணையும் காப்பாற்றி விட்டது போன்ற ஒரு மனநிறைவு.

மனது தெளிவடைந்த இளங்கோ கனிவும் அன்பும் ததும்ப மனைவியை நோக்கினான். கட்டுக்கடங்காத கண்ணீராறு பெருகிட வசந்தமாலா தன் உடலில் ஏற்பட்டுவிட்ட எரிகாயங்களுக்கு மத்தியிலும் அவனை அன்போடு ஆரத்தழுவிக் கொண்டாள். அந்தக் கணத்தில் அவர்களிடையே முதல் முத்தம் அரங்கேறியது.

**ச.முருகானந்தன்**



''ஆஸ்பத்திரிக்குப் போகலாம்....'' என்று அன்புடன் அவனை நோக்கினான் எரிகாயங்கள் தகிக்கவே, அவளும் புறப்பட்டாள். அவளை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லும்போது அவன் அனைத்தையும் மனம் விட்டு உரையாடினான். அவன் சொல்லச் சொல்ல அவளது நெஞ்சம் உருகியது.

எல்லாவற்றையும் மனம் விட்டு உரையாட முடிந்த இந்த வேளையில் அவனது மனதிலும் பாரம் இறங்குவதாக உணர்ந்தான்.

அவள் கேவிக் கேவி அழுது கொண்டிருந்தாள். 'கடவுளே எமது இனத்திற்கு இத்தனை கொடுமைகளா?' அவள் அழுவதைத் தாங்க முடியாது அவளை ஆதரவாக அணைத்தபடி, நடுக்கமோ,குழப்பமோ,வியர்வையோ எதுவுமின்றி அவன் இயல்பாக இருக்கையில் அவளுக்கு எல்லையில்லா மகிழ்ச்சி ஏற்பட்டது.

அவனுக்கும் தான்!

அவர்கள் வைத்தியசாலையை அடைந்த போது வைத்தியசாலையில் அவளை அனுமதித்துச் சிகிச்சை அளித்தார்கள். சிறு சிறு எரிகாயங்கள் தான். ஒருவாரம் வைத்தியசாலையில் தங்க வேண்டியிருந்தது. அவளது மனதில் ஏற்பட்டுவிட்ட மகிழ்ச்சி, எரிகாயங்களின் வேதனையையும் பின் தள்ளியது. எப்போது வீட்டிற்கு விடுவார்கள் என்று ஆவலுடன் அவள் மனது தவியாய்த் தவித்தது.

இளங்கோ காலையும், மாலையும், மதியமும் என ஓடி ஓடி வந்து அவளைப்பார்த்தான். அவள் விரைவிலேயே குணமாகி வீட்டிற்குத் திரும்ப வேண்டுமெனப் பிரார்த்தித்தான்.

அந்த இனிய நாளும் விரைவிலேயே வந்தது. அவர்கள் வீட்டிற்குத் திரும்பினார்கள்.

அவளை அன்போடு இளங்கோ அழைத்தான். ''அவசரமா?'' அவள் சிரிப்போடு கேட்டாள்.

''யாருக்கு?'' என்று பதில் கேள்வி கேட்ட அவன் அவள் பதில் சொல்ல முன்னரே அவளின் வாய்க்குப் பூட்டுப்போட்டான் – தன்வாயால்!

அந்தப் பகல் வேளை அவர்களுக்கு முதலிரவானது.

(முற்றும்)

## சொற்சிலம்பம் போட்டி இல.151

சொற்சிலம்பம் 151 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் மார்ச் 19ஆம் திகதி ஆகும். விடைகள் மார்ச் 27ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஏப்ரல் 3ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.149க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250ரூபாவும், இரண்டாவது பரிசாக 150ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14.

## சொற்சிலம்பம் போட்டி இல.149

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ச | 2 ம | த் | 3 து | 4 வ | ம் | ■ | 5 ஆ |
| 6 கி | டை | ■ | 7 வா | டி | ■ | 8 க | டை |
| ப் | ■ | 9 உ | த | வு | 10 த | ல் | ■ |
| 11 பு | ர | ட் | சி | ■ | 12 க | வி | 13 தை |
| த் | ■ | ப | ■ | 14 கா | டு | ■ | ல |
| 15 த | ண் | டு | 16 த | ல் | ■ | 17 ந | ம் |
| ன் | ■ | 18 த | லை | வா | 19 ச | ல் | ■ |
| 20 மை | ய | ல் | ■ | 21 சி | தி | ல | ம் |

## சொற்சிலம்பம் போட்டி இல.151

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | 9 | | |
| 10 | | 11 | | ■ | 12 | | |
| 13 | | | ■ | 14 | | | ■ |
| | ■ | 15 | 16 | | | ■ | 17 |
| ■ | 18 | | | | ■ | 19 | |
| 20 | | | ■ | 21 | 22 | | |
| 23 | | ■ | 24 | | | | ■ |

## சொற்சிலம்பம் போட்டி இல.151

**இடமிருந்து வலம்**

1.காந்தி அமைத்த ஆச்சிரமம்.
5.இரட்டை/ இரண்டு.
7.பானை/ எரிந்த பின் மிஞ்சுவது.
8.பார்வையிட்டு அறியும் நிகழ்வு.
10.பத்திரிகைகள், சஞ்சிகைகளின் ரசிகன்.
12.வாழை நார்.
13.பணம்/ காசு.
14.சிசு/ குழந்தை.
15.இரப்பவன்.
18.ஒன்றுக்கு ஈடாக – அடகு ஆக – வைக்கப்படுவது.
19.குளிர்மை தரும் பானம். தயிர் கடைந்து பெறுவர்.
20.கை.
21.முதல் திதி.
23.வான்.
24.நன்கொடை/ வெகுமதி/ அன்பளிப்பு.

**மேலிருந்து கீழ்**

1.பழக்க தோஷம்.
2.தண்ணீரில்/ ஆற்று நீரில் பயன்படுத்தப்படும் சிறு ஓடம் போன்றது.
3.புத்திரன்.
4.வலிமை / பலம்.
5.கெட்டவன்/ துட்டகாரியம் செய்பவன்.
6.ஊதல்(ஆங்கிலப் பெயரையே பயன்படுத்துவர்).
9.காதலி மனம் கவர்ந்தவன்.
11.திருமணம்.
14.சொத்தைப் பங்கீடு.
16.கழித்தல் குறி.
17.கூரிய தன்மை.
18.வீட்டின் கூரையை ஒட்டி மேலே அமைக்கப்படும் களஞ்சியம். காவலுக்கு மரத்திலும் அமைப்பர்.
19.ஒன்றோடு ஒன்று இடித்தல்.
20.பாடல் / குரங்கு / பாடுபவன்.
22.துய் / அனுபவி / ருசித்துப்பார்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 149

1.ஏ.அப்துல்லாஹ்,
த.பெ.இல.64,
தர்காநகர்.
2.தி.பரமானந்தம்,
நாவலர் பாடசாலை அருகில்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
3.ஏ.சுரேஸ்குமார்,
மில் லேன், கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

### பாராட்டுப் பெறுவோர்

1. ப.யசோதா,
இல. 219,
பல்லவராயன்கட்டு.
2. யோ.பிறிசில்லா,
167, குருசோறோட்,
யாழ்ப்பாணம்.
3. திருமதி.கி.ரகுநாதன்,
டொக்கியாட் றோட்,
திருகோணமலை.
4. க.கமசவாகினி,
தண்ணீரூற்று,
முள்ளியவளை.
5. திருமதி. பாலேந்திரா,
இல. 49, உடங்காவ,
கொச்சிக்கடை.
6. திருமதி.ரஞ்சினி சிவஞானம்,
புகையிரத நிலைய வீதி,
மட்டக்களப்பு.
7. ம.நயானி,
டச்சு வீதி,
சில்லாலை.
8. எஸ்.நளினி,
யோகபுரம் மத்தி,
யோகபுரம்.
9. ஆர்த்தி சந்திரகுமார்,
காலி வீதி,
தெஹிவளை.
10. ப.பத்மராதிகா,
நம்ளின் மாவத்தை,
நீர்கொழும்பு.

# நம்பிக்கையை ஏற்படுத்திய சந்திப்பும் எதிர்பார்ப்பும்

முஸ்லிம் சிவில் பிரதிநிதிகளை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் கொக்கட்டிச்சோலையிலும், இலங்கையின் சமாதானத்துக்கான நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சாய்ந்த மருதிலும் சந்தித்துப் பேச்சு நடத்திய விவகாரம் முஸ்லிம் அரசியல் வட்டாரத்தில் மிகவும் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

அம்பாறை—மட்டக்களப்பு மாவட்ட புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், முன்னாள் எம்.பி.அரியநாயகம் சந்திரநேரு ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதற்காக மட்டக்களப்புக்கு வருகை தந்த சு.ப.தமிழ்ச்செல்வன் இங்கு ஒரு வார காலம் தங்கியிருந்தார்.

இதன்போது அம்பாறை— மட்டக்களப்பு மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனப் பிரதிநிதிகளை அவர் கொக்கட்டிச்சோலையில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில் போர் நிறுத்த புரிந்துணர்வு


ஹக்கீம்

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் கடந்த மூன்று வருட கால அமைதிச் சூழ் நிலையிலும் முஸ்லிம்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகள் குறித்து புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனிடம் விபரிக்கப்பட்டதுடன் சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் ஒரு தனித் தரப்பாகப் பங்குபற்ற வேண்டியதன் அவசியம் பற்றியும் வலியுறுத்தப்பட்டது.


சொல்ஹெய்ம்

முஸ்லிம் பிரதிநிதிகளின் ஆதங்கங்களுக்கு தமிழ்ச் செல்வன் அளித்த பதில் கருத்துக்கள் முஸ்லிம் சமூகத்துக்கு விசேடமாக வடக்கு—கிழக்குத் தாயக பூமியில் வாழ்கின்ற முஸ்லிம்களிடையே ஒரு நம்பிக்கையையும், தைரியத்தையும் ஏற்படுத்தியுள்ளன.தற்போதைய சமாதான சூழலில் அங்கும்,இங்குமாக சில சந்தர்ப்பங்களில் முஸ்லிம்கள் துன்புறுத்தப்பட்டு வருவது குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்த அவர் அவ்வாறான சம்பவங்களை இனிமேல் இடம் பெறாதவாறு முழுமையாகத் தடுத்து நிறுத்துவதற்கு புலிகளின் தலைமைப்பீடம் திடமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என உறுதியளித்தார்.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகள் யாவும் அவர்களிடம் மீள ஒப்படைக்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

அதேவேளை சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும்போது முஸ்லிம்களுக்கு உரிய இடம் வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ள அவர் சில அரசியல் முரண்பாடுகள் காரணமாகவே முன்னர் முஸ்லிம் தலைவர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த முடியாமல் போனதாகக் கவலை தெரிவித்தார். இனிவரும் காலங்களில் முஸ்லிம்கள் மீது வன்முறைகள் — நெருக்குவாரங்கள் எவையும் இடம்பெற அனுமதிக்கப்படமாட்டாது என்ற உத்தரவாதத்தையும் தமிழ்ச்செல்வன் முஸ்லிம் பிரதிநிதிகளிடம் வழங்கினார்.

**-அஸ்லம் எஸ். மௌலானா-**

யுத்த காலத்திலும் சரி, சமாதான சூழலிலும் சரி வடக்கு— கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்கள் உயிர்,உடைமைகளை இழந்தே வந்துள்ளனர். அரசு புலிகள் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட முதல் வருடத்தில் வாழைச்சேனை,மூதூர்,கிண்ணியா போன்றஇடங்களில் முஸ்லிம்கள் சந்தித்த — எதிர்நோக்கிய துன்ப துயரங்கள் யாவரும் அறிந்ததே.

எனினும் அண்மைக் காலமாக பாரிய அளவில் முஸ்லிம்கள் மீதான வன்முறைகள் இடம்பெறவில்லை. எனினும் சிறு சிறு சம்பவங்கள் இடம்பெற்ற வண்ணமே இருக்கின்றன. இந்நிலையில் முஸ்லிம் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பொறுப்பு வாய்ந்த தலைவர் ஒருவர் தந்திருக்கின்ற உத்தரவாதங்கள் உண்மையிலேயே முஸ்லிம் சமூகத்தினரிடையே ஒரு நிம்மதிப் பெருமூச்சை ஏற்படுத்தியிருக்கிறது.

வடக்கு— கிழக்கு மண்ணில் தமிழரும், முஸ்லிம்களும் ஒருபோதும் பிரிந்து வாழவே முடியாது என்கின்ற யதார்த்தத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு தமது சுய அரசியல் லாபங்களுக்காக சில தமிழ், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் மேற்கொண்டுவந்த விசமப் பிரசாரங்களும், நடவடிக்கைகளுமே இரு சமூகங்களிடையேயான ஒற்றுமையை சீர்குலைத்து பகைமை உணர்வை ஏற்படுத்தின.

இதனை காலத்துக்குக் காலம் பதவிக்கு வந்த சிங்களப் பேரினவாத அரசுகள் நன்கு பயன்படுத்திக்கொண்டன. தமிழ்—முஸ்லிம் சிறுபான்மைச் சமூகங்கள் இரண்டையும் பிரித்தாள்வதன் மூலமே இந்நாட்டில் சிங்கள தேசியவாதத்தைக் கட்டி எழுப்ப முடியும் என்ற எடுகோளின் அடிப்படையில் காய்கள் நகர்த்தப்பட்டு வந்துள்ளன.

தமிழ்—முஸ்லிம் இன முரண்பாடு வளர்ந்து முற்றியதன் விளைவு, இரு சமூகங்களும் தங்களுக்குள் சண்டையிட்டு உறவுப் பாலத்தை உடைத்துத் தகர்த்தது மட்டுமே.அது சிங்களப் பேரினவாதத்துக்கு தீனி போட்டதே ஒழிய சிறுபான்மையினருக்கு எவ்விதமான பயனையும் தரவில்லை. இரு சமூகங்களும் ஒன்றுபட்டு—பலம்மிக்க சக்தியாகத் திகழ்ந்திருப்பின் சிங்கள தேசிய அரசுகளை சிறுபான்மையினரின் காலடியில் மண்டியிடச் செய்திருக்க முடியும். எனினும்,பிரிந்து செயற்பட்டது மட்டுமல்லாது தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டதால் இரு சமூகத்துக்கும் உயிர், உடைமைகளை இழக்க நேரிட்டது என்கின்ற விடயம் மிகவும் வேதனைக்குரியதாகும்.

இவ்வாறான ஒரு பகைப்புலனில் சிறுபான்மையினரின் உரிமைகளை சிங்களத் தேசிய அரசுகளிடமிருந்து வென்றெடுக்க முடியாது என்கின்ற யதார்த்தத்தை இரு தரப்பினரும் இன்று நன்குணர்ந்து விட்டனர். அதன் பிரதிபலனே கொக்கட்டிச்சோலை சந்திப்பாகும். அது தமிழ்—முஸ்லிம் உறவுக்குக் கட்டியம் கூறியுள்ளது என்பதோடு தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தை வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்வதற்கு கால்கோலாக அமையும் என்ற நம்பிக்கையையும் தந்திருக்கிறது.

அதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.


தமிழ்ச்செல்வன்

தமிழ்ச்செல்வன், முஸ்லிம் சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்துப்பேச்சு நடத்தியதை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வன்மையாகக் கண்டித்துள்ளார். அது குறித்து நோர்வேயின் விசேட

(23 ஆம் பக்கம் பார்க்க)

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.30 | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | சங்கீதமேடை | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | மேஸ்க் கார்டுன் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நிகழ்ச்சி |
| 9.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | ஹோலிவூட் மூவி | அரட்டை அரங்கம் |
| 9.30 | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | குட்டி சுட்டி | சமையல் |
| 10.00 | உங்கள் சாய்ஸ் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | பாட்டுக்கு பாட்டு | நம்மநேரம் | கொண்டாட்டம் | களம் | சப்த ஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கீதங்கள் | இசைத் தென்றல் | திரை விமர்சனம் | டொப் 10 விஸ் |
| 11.00 | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | இப்படிக்கு நீங்கள் | கிரிக்கெட் கோல்டன் மொமென்ஸ் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | திரை வானம் | சமையல் | விரியும் சிறகுகள் | மங்கை | றிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | றிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.00 | (றொமான்ஸ்) | (அக்சன்) | (கொமடி) | (சித்திரம்) | (கிளசிக்) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | கில்லி | விக்கிரமாதித்தன் | சுப்பர் 10 |
| 4.30 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மலரும் மொட்டும் | விக்கிரமாதித்தன் | நினைவுகள் |
| 5.00 | கிய பியர்ஸ் | கி—மான் | கிட்ஸ் சூன் | தமிழ் கார்ட்டூன் | என்றும் கலாட்டா | நகைச் சுவை விருந்து | என்றும் கலாட்டா |
| 5.30 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் சமையல் | சுப்பர் சீன்ஸ் | இசைத் தென்றல் | ருத்ர வீணை | சுப்பர் சீன்ஸ் |
| 6.00 | இசைத்தென்றல் | இசைத் நென்றல் | இசைத் தென்றல் | பாடல்கள்/இளந்தளிர் | கோல்டன் மொமன்ஸ் | புத்தம் புதுசு | மின்னல் |
| 6.30 | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் திமி தக்க தா | 6.55 முதன்மைச் செய்திகள் மின்னல் |
| 7.00 | மனைவி | மனைவி | மனைவி | மனைவி | மனைவி | ஊரும் உலகும் | வேலன் |
| 7.30 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மியூசிக்கல் | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | ராஜ ராஜேஸ்வரி | இளைய கானம் |

# ‘தோல்விப் பயமா? எனக்கா?’

## அணியில் இடம்பெறாதது குறித்து அக்தர் விளக்கம்

பலத்த சர்ச்சைகளுக்கு இடையே பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியா சென்றுள்ளது. கடந்த ஆண்டு இந்திய அணி பாகிஸ்தான் சென்றபோது விளையாட்டையும் மீறி அது நல்லெண்ணப் பயணமாக கருதப்



பட்டது. அந்தப் போட்டிகளில் இந்திய அணி வெற்றி பெற்று நாடு திரும்பியது.

தற்போது இன்சமாம் தலைமையில் சென்றுள்ள பாகிஸ்தான் அணியும் மிகக் கவனமாக வார்த்தைகளை உதிர்த்து வருகிறது. இந்தியா – பாகிஸ்தான் இடையே சமரசப் பேச்சுகள் கனிந்து வரும் நிலையில் ரசிகர்கள் மோதல் மற்றும் விரும்பத்தகாத சம்பவங்கள் எதுவும் நடந்து விடக்கூடாது என்பதில் இந்திய அரசும், பாதுகாப்புத் துறையும் படுஉஷாராக இருந்து வருகின்றன. அதனால் தான் சில நகரங்களில் போட்டி நடத்தும் திட்டம்கூட மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

இந்தியா சென்றுள்ள பாகிஸ்தான் அணியில் 'ராவல் பிண்டி எக்ஸ்பிரஸ்' சொயிப் அக்தர் இடம்பெறவில்லை. இந்த சுற்றுப் பயணத்துக்கு முன்பே அவரது பெயர் பாலியல் புகாரில் சிக்கிச் சின்னாபின்னமானது. இரவு விடுதிக்குச் சென்று அழகிகளுடன் கும்மாளம் அடித்தார் போன்ற புகைப்படங்கள் பத்திரிகைகளில் வெளியானது. இந்த நிலையில் சமீபகாலமாக அவரது பந்துவீச்சும் எடுபடாமல் போனது. எனவே அவரை இந்தியப் பயணத்தின் போது பாகிஸ்தான் அணியில் சேர்க்கக் கூடாது என்று கடும் எதிர்ப்பு கிளம்பியது. மேலும் அவர் காயம் அடைந்துள்ளார் என்றும் முழு உடல் தகுதியை அவர் பெறவில்லை என்றும் கூறப்பட்டது. அதே நேரத்தில் அணித்தலைவர் இன்சமாமுக்கும், அக்தருக்கும் உள்ள மோதல் காரணமாக அவரை அணியில் சேர்ப்பது பற்றிய பிரச்சினை மேலும் பெரிதானது.

முடிவில் டெஸ்ட் போட்டிக்கான வீரர்கள் பட்டியலில் அக்தரின் பெயர் இடம் பெறவில்லை. இது குறித்து அக்தர் வருத்தம் அடைந்தாலும் அவர் மீதான புகார்களை ஏற்கத் தயாராக இல்லை. இது பற்றி அவர் கூறியதாவது:–

''தோல்விப் பயம் காரணமாக நான் இந்தியா வர பயந்து போனதாக சிலர் கூறுகின்றனர். எனது பந்து வீச்சு சோடைபோகவில்லை. தோள் பகுதியில் ஏற்பட்ட காயம் முழுமையாகக் குணமடையவில்லை. எனவே தான் டெஸ்ட் போட்டியில் ஆடவில்லை. நிச்சயம் ஒரு நாள் தொடரில் இடம் பிடிப்பேன்'' – என்றார்.



அக்தரை அணியில் சேர்க்காதது பற்றி இன்னொரு கருத்தும் நிலவுகிறது. அதாவது இந்திய அணியைப் பொறுத்த அளவில் துடுப்பாட்டத்தில் பலம் பெற்றுள்ளது. அதை சமாளிக்கும் வகையில் அக்தர் பந்துவீச்சு இல்லை என்பதால் அவருக்கு காயம் என்ற பெயரில் ஓய்வு கொடுத்துள்ளனர், என்றும் சிலர் கூறுகிறார்கள்.

இதேவேளை, பாகிஸ்தான் அணியில் இளம்வீரர்கள் இடம் பெற்றுள்ளனர் என்பது குறித்து அந்த அணியின் பயிற்சியாளர் பாப் ஊல்மர் கூறும்போது –

"அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்க அணிகள் இளம் வீரர்களைக்கொண்டே இந்திய மண்ணில் வெற்றிகளைக் குவித்தன. அதேபோல பாகிஸ்தான் அணியும் இளம் வீரர்களுடன் களத்தில் இறங்குகிறது. இந்திய அணியை வெற்றிகொள்ளும் வகையில் எங்கள் அணியின் வியூகம் இருக்கும்'' – என்கிறார்.

# ஒரு பயிற்சியாளரின் மனக்குமுறல்

பிரான்ஸ் கால்பந்து அணியின் முன்னாள் பயிற்சியாளர் ஜாக்யூஸ் சாண்டினி. கடந்த வருடம் நடந்த ஐரோப்பியக் கால்பந்து போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் பிரான்ஸ், கிரீஸ் அணியுடன் 1 – 0 என்ற கோல் கணக்கில் தோல்வியைத் தழுவியவுடன் அணியிலிருந்து சாண்டினி தூக்கியெறிப்பட்டார்.



இது பிரான்ஸ் கால்பந்து ரசிகர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது. சிறிது காலம் அமைதியாக இருந்த சாண்டினி தற்போது பிரான்ஸ் வீரர்களை கடுமையாக விமர்சித்திருக்கிறார்.

''ஐரோப்பியக் கிண்ணப் போட்டியின் போது வீரர்கள் தான்தோன்றித்தனமாக நடந்து கொண்டனர். நான் சொன்னது எதையும் அவர்கள் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. தங்கள் இஷ்டப்படி கட்டுப்பாடு இல்லாமல் அலைந்து திரிந்தனர்.

''குறிப்பாக ஸிடேன், பெட்ரிக் வெய்ரா, லிலியன் துரம், மார்செல் டிசெய்லி போன்ற மூத்த வீரர்கள், இளம் வீரர்களுக்கு புத்திமதி கூறுவதை விட்டு தங்கள் இஷ்டப்படி நடந்து கொண்டனர். இதனால் இரண்டு தலைமுறை வீரர்களை நான் சமநிலைப்படுத்த வேண்டியிருந்தது. நான்சொன்ன அறிவுரைகளை முன்னணி வீரர்கள் இளம் வீரர்களுக்கு சொல்லவில்லை'' – என்று தன் மனக்குமுறலை வெளியிட்டிருக்கிறார் சாண்டினி.

# பெக்கமின் காலணியில் 3ஆவது மகனின் பெயர்

இங்கிலாந்து கால்பந்து அணியின் தலைவரும் முன்னணி கால்பந்து வீரருமான டேவிட் பெக்கம் – விக்டோரியா தம்பதிகளுக்கு 3ஆவது மகன் பிறந்து இருக்கிறார். இக்குழந்தைக்கு குரூஸ் என்று பெயரிட்டு இருக்கிறார் பெக்கம். மகன் பிறந்த பின்னர் நடைபெற்ற கால்பந்து ஆட்டம் ஒன்றில் கலந்து கொண்ட போது குரூஸின் பெயர் பொறித்த காலணிகளை பெக்கம் அணிந்து கொண்டு ஆடினார் என்பது விசேட அம்சமாகும்.



# தேசியக்கொடி சின்னத்தை பயன்படுத்த இந்தியக் கிரிக்கெட்டுக்கு கட்டுப்பாடு

இந்தியக் கிரிக்கெட் அணி வீரர்கள் தங்களின் தலைகவசம் மற்றும் உடைகளில் தேசியக் கொடி சின்னத்தை இடம் பெறச் செய்துள்ளனர். இது தொடர்பாக இந்திய அரசின் விளையாட்டுத்துறை சில கட்டுப்பாடுகளை கொண்டு வரத் திட்டமிட்டுள்ளது.

அதாவது வீரர்கள் தங்களின் தலைக்கவசங்களில் தேசிய கொடியை ஒட்டி இருக்கிறார்கள். அதே நேரத்தில் ஆட்டம் முடிந்த பின்னர் காலணிகள் மற்றும் பிற கிரிக்கெட் உபகரணங்கள் இருக்கும் பையில் தேசிய கொடி பொறித்த அந்தக் தலைக்கவசங்களையும் வைத்து எடுத்துச் செல்கிறார்கள். இது தேசிய கொடிக்கு அவமரியாதை செய்வதாகும். எனவே வீரர்கள் தங்கள் உடை மற்றும் பிறபொருட்களில் தேசியக் கொடி சின்னத்தை பொறிக்க கட்டுப்பாடு கொண்டு வருவது பற்றி இந்திய அரசு ஆலோசித்து வருகிறது.

## விளையாட்டுச் செய்திகள்!

ஜெனிரயா

# குத்துச்சண்டை களத்தில் மீண்டும் மைக் டைசன்

சர்வதேச குத்துச்சண்டை உலகின் சாதனை நாயகனாக விளங்கிய மைக் டைசன் கடந்த 8 மாதங்களாக எந்தப் போட்டியிலும் கலந்து கொள்ளாமல் ஓய்வில் இருந்தார். அடிக்கடி சர்ச்சையில் சிக்கிக்கொள்ளும் டைசன் மீண்டும் குத்துச்சண்டையில் களமிறங்க உள்ளார் எனக் கூறியுள்ளார்.

இத்தாலியில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள டைசன் நிருபர்களிடம் இதுகுறித்து கூறுகையில்:–

''இந்த ஆண்டு நான் மீண்டும் குத்துச்சண்டை போட்டியில் ஆடமுடிவு செய்திருக்கிறேன். அநேகமாக எதிர்வரும் ஜூன் மாதம் இந்தப் போட்டி நடக்கும் என்று நான் நினைக்கிறேன்.'' – என்றார்.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் கடைசியாக டேனி வில்லியம்ஸ் என்ற வீரரை எதிர்த்து டைசன் தோல்விகண்டார். இதன் பின்னர் டைசன் எந்தப் போட்டியிலும் கலந்து கொள்ளவில்லை.

38 வயதான டைசன் தற்போது மூட்டுவலி காரணமாக அவதிப்பட்டு வருகிறார். ஜூன் மாதத்துக்குள் பூரணகுணம் அடைந்துவிடுவார் என்று தெரிகிறது.



கடந்த சில வாரங்களுக்கு முன்பு டேனி வில்லியம்ஸ் தன்னுடைய இணையத்தளத்தில் டைசனை மீண்டும் சண்டைக்கு அழைத்தார். இந்த சவாலை ஏற்றுத்தான் டைசன் போட்டியில் களமிறங்க முடிவெடுத்துள்ளார் என்று கூறப்படுகிறது.



இஸ்தான்புல் நகரில் நடந்த துருக்கி சூப்பர் லீக் கால்பந்து தொடரில் கலாட்சஸ்சரே, பெசிக்டஸ் அணிகள் அண்மையில் மோதின. இப்போட்டியில் கலாட்சஸ்சரே 1 – 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதில் கலாட்சஸ்சரே அணியின் சியன் ஹாஸ் போலாட்லி, பெசிக்டஸ் அணியின் துமர் மெடின் (வலது) இருவரும் பந்தை தட்டிச் செல்ல முற்படுவதைப் படத்தில் காணலாம்.

# சத்தமில்லாத சிரிப்பு



கண் பார்வை குறைவானவர்கள் மேசன் வேலை செய்தால் இப்படித்தான்.... கண்ணிலே படும் எல்லா வெடிப்புக்கள் – பிளவுகளையும் – சிமெந்து பூசி அடைத்துவிடுவார்கள்.

# விந்தைச் செய்தி

தண்ணி அடிப்பவர்களைப் பார்த்து எல்லோரும் 'அடடா.... அவனுக்கு என்ன.. நன்றாகக் குடித்து கும்மாளமிட்டு சந்தோஷமாக இருக்கிறான்' என்று பொறாமைப்படுவது வழக்கம். ஆனால் இந்த குடியின் பின்னால் இருக்கும் கஷ்டம் யாருக்கும் புரிவதில்லை.

குடித்துவிட்டு அட்டகாசம் பண்ணி – இப்போது கம்பி எண்ணிக் கொண்டிருக்கும் ஒருவரைப்பற்றிய துணுக்கு இது. வாசித்துப் பாருங்கள். வாசித்துவிட்டு இனிமேலாவது குடிப்பவர்கள் மீது கொஞ்சம் அனுதாபம் காட்டுங்கள்.


அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் உள்ள மன்ரோ என்ற நகரத்தில் பிரபலமான சட்டத்தரணி அல்பேர்ட் ஏ.ஜே.டஸ்கர்.

இவர் அண்மையில் ஒருநாள் நண்பரின் காரில் ஏறி அவருடன் மதுபானக்கடை ஒன்றுக்குச் சென்றார். அங்கே நன்றாக தண்ணி அடித்தார். போதை தலைக்கேறியது. போதையின் உச்சத்தில் தான் அணிந்திருந்த ஆடைகளைக் கழற்றி எறிந்தார். நிர்வாணமாக அங்கும் இங்கும் ஓடினவர் திடீரெனப்பார்த்தார். இவருடன் வந்த நண்பர் இவரை விட்டுவிட்டு காரிலே போவதுபோல் தெரிந்தது. ஓடிப்போய் அந்தக் காரிலே பாய்ந்து ஏறிக்கொண்டார்.

ஆனால் அது நண்பரின் காரைப்போலவே இருந்தாலும் – நண்பரின் கார் அல்ல. அதனை ஓட்டிச்கொண்டு சென்றவர் ஒரு பெண். தனது காரிலே ஒருவர் ஓடிவந்து ஏறிக்கொண்டதை – அதுவும் நிர்வாண கோலத்தில் ஏறிக்கொண்டதை – கண்டு அந்தக் காரிலே இருந்த பெண் பயந்து அலறினாள். சத்தம் கேட்டு கூட்டம் கூடிவிட்டது. சட்டத்தரணியை பிடித்து பொலிஸிலே ஒப்படைத்தது கூட்டம். பாவம் இப்போது டஸ்கர் கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறார்.


இனிச் சொல்லுங்கள்; குடிகாரர்கள் பாவிகளா, அப்பாவிகளா?

# குறும்பு



இத்தனை பூட்டுக்கள் போதுமா.... இல்ல இன்னும் கொஞ்சம் வேண்டுமா?

# கண்ணாம்பூச்சி



அருகேயுள்ள படத்தில் உள்ள படிகளை நன்றாகப் பாருங்கள். மேலிருந்து கீழ்நோக்கி அமைந்துள்ளது. ஆனால் கொஞ்சம் ஊர்ந்து பார்த்தால். கீழிருந்து மேல் நோக்கி அமைந்திருப்பது போல் தெரிகிறதே.....

# ஜோக்

100 ஆண்டுகள் வாழ்வது எப்படி என்று ஆராய்ச்சி செய்து நூல் ஒன்றை வெளியிட ஒருவர் திட்டமிட்டிருந்தார்.

ஒரு ஊரில் ஒருவர் 110 வயதிலும் நலமாக இருப்பதாக தகவல் கிடைத்தது. அவரைச் சந்தித்து பேட்டிகண்டு தனது நூலை எழுதினால் சிறப்பாக இருக்கும் என்று எண்ணினார். எனவே அவரைச் சந்தித்தார். அவரிடம் –"நீங்கள் மது குடிப்பதுண்டா?" என்று கேட்டார். "ஐயய்யோ இல்லை; நான் மதுவை கண்ணால் கூடப் பார்ப்பதில்லை" என்றார் 110 வயதானவர். "நல்லது..... பெண்கள் தொடர்பு...." என்று இழுத்தார் ஆராய்ச்சியாளர்.

"ஐயய்யோ எனது மனைவியைத் தவிர வேறு பெண்கள் உள்ள பக்கமாக தலை வைத்தும் படுப்பதில்லை" என்றார் 110 வயதானவர்.




"நல்லது.... புகைப்பிடித்தல் அசைவ உணவு உண்ணல் ஏதாவது உண்டா?" என்று கேட்டார் ஆராய்ச்சியாளர்.


"இல்லைவே இல்லை" என்றார் 110 வயதுக்காரர்.

"நல்லது... இதுதான் உங்கள் ஆரோக்கியத்துக்கான காரணம். எனது ஆராய்ச்சிகளின் படி, 100 ஆண்டுகளுக்கு மேலே வாழவேண்டுமென்றால் மது, மாது, மாமிசம், புகைப்பிடித்தல் என்பவற்றில் கட்டுப்பாடு தேவை என்று கண்டுபிடித்திருக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது 110 வயதுக்காரரின் வீட்டின் மேல் மாடியில் நடதடவெனச் சத்தம் கேட்டது. ஒரே சிரிப்பொலியும், கும்மாளச்சத்தமும் கேட்டன. இதனைக் கேட்ட ஆராய்ச்சியாளர் "மேல் மாடியில் என்ன சத்தம்?" என்று கேட்டார்.




110 வயதுக்காரர் சொன்னார் "அது ஒன்றுமில்லை எனது அப்பா மேல் மாடியில் குடியிருக்கிறார். தினமும் அவர் நன்றாக குடித்துவிட்டு அசைவ உணவுகளை தின்றுவிட்டு, சிகரட் பிடித்தபடி பலான பெண்களுடன் கும்மாளம் போட்டுக்கொண்டிருப்பார்" என்றார்.

# ஐடியா




புகைப்பிடிக்காதீர்கள்...... 'புகைத்தல் உடல் நலனுக்கு கேடு – அது.... இது.... என்று சும்மா புகைத்தலுக்கு எதிராகப் பிரசாரம் செய்வதைவிட.... சிகரட் சாம்பலைப்போடும்.. ஆஸ்ரேயை, புகைப்பதினால் எரிந்து போன ஈரலின் வடிவில் இவ்வாறு உருவாக்கினால் புகைப்பிடிப்பவர்களுக்கு உறைக்குமோ, இல்லையோ!

# "கட்டையைத் தூக்கு"

சித்தூர் என்ற இடத்தில் ஒரு வயதான பாட்டி வாழ்ந்து வந்தாள். அவளுக்கு அதிக வயதாகியது. பாட்டிக்கு முன்பு போலப் புல்லுக்கட்டுகளைச் சுமந்து வியாபாரம் செய்ய முடியவில்லை; பாட்டி தனது குமர்ப்பருவத்தில் இருந்தே புல்லுக்கட்டு வியாபாரமே செய்து வந்தாள்.

ஒரு நாள் பாட்டிக்கு வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டது. "இந்தக் கட்டையை இயமனாவது வந்து தூக்கிச் செல்கிறான் இல்லையே" எனப் பாட்டி கத்தினாள். பாட்டி கத்திய கத்து இயமனுக்குக் கேட்டுவிட்டது. உடனே இயமன் பூலோகத்துக்கு இறங்கி வந்தான்; "பாட்டி... உடனே புறப்படு இயம லோகத்துக்கு" எனக் கூறினான்.

"அடேயப்பா... இயமதர்மராஜா.... நீதான் இயமனா எனப் கேட்ட பாட்டி உரத்த குரலில் சிரித்தாள்.

"ஏன்பாட்டி சிரிக்கிறாய்" என்றான் இயமன்.

பாட்டி சொன்னாள்; "இயதர்மராஜா... இந்தப் புல்லுக் கட்டை சந்தைக்குக் கொண்டு வந்து தரச்சொல்லியே நான் உன்னைக் கூப்பிட்டேன்; நீங்கள் பிழையாக விளங்கிட்டீங்க" என்றாள்.

தனது தவறை உணர்ந்த இயமன் பாட்டிக்கு உதவி செய்தான். புல்லுக் கட்டை சந்தைக்குத் தூக்கிச் சென்ற இயமன் தான் வந்தது குறித்து என ஒருவருக்கும் சொல்ல வேண்டாம் எனக் கூறினான்.

பாட்டி 'ஆம்' எனக் கையசைத்தாள் இயமன் மறைந்து விட்டான்.

இயம தர்மராஜனுடன் கூட வந்த சித்திரபுத்திரன் இதனால் வெட்கம் அடைந்தான்.

"மகாபிரபு.... நாம் தோல்வியடைந்து விட்டோம்" என அவன் வெட்கத்துடன் கூறினான்.

இயமதர்மராஜன் கூறினான் "சித்திரகுப்தா சந்தேகத்தின் பலனை எதிரிக்குக் கொடுக்க வேண்டும் என்று இப்படித் தமிழில் ஒரு பழமொழி கூட இருக்கிறது."

"அப்படியா.." ஆச்சரியப்பட்டான் சித்திரபுத்திரன். இயமன் தொடர்ந்து கூறினான்.

"எங்களுக்கு ஒரு பொதுமொழி இல்லை; இதனால் பல பாஷைகளையும் படித்துவிட்டே இனித் தொழிலில் இறங்க வேண்டும்."

இதனைச் சித்திரபுத்திரன் ஏற்றுக்கொண்டான்.

அடுத்த கணமே மாறுவேடத்தில் இயமனும் சித்திரபுத்திரனும் படிக்க ஒரு கல்விச் சாலைக்குச் சென்றனர்.



## சிறார்களின் கைவண்ணம்




தே.சூரணி, ஆண்டு 10, மு/மல்லாவி மத்திய கல்லூரி.



ப.தனார்த்தன், அனிஞ்சியன்குளம், மல்லாவி.



ராஜகுமார் நிஷாளினா, வெள்ளாம் போக்கட்டி, தொகுதரம் ம.வி.



பா.கீர்த்தனா, அமிர்தாம்பிகை வித்தியாலயம், சாவகச்சேரி.

## பொது அறிவு

* உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு எது?

இந்தியா.

*உலகின் மிகப்பெரிய கம்யூனிச நாடு எது?

சீனா.

*உலகின் மிகப்பெரிய இஸ்லாமிய நாடு எது?

இந்தோனேசியா.

*உலகில் அதிகக்கூடிய சனத்தொகை கொண்ட நாடு எது?

சீனா.

*உலகில் சனத்தொகை கூடிய நகரம் எது?

டோக்கியோ.

* சீனியை கூடுதலாக உற்பத்தி செய்யும் நாடு எது?

கியூபா.


* உலகில் கூடிய தீவுகளை கொண்ட நாடு எது.

பிலிப்பைன்ஸ்.

ஜெ.மோகனதாசன்,
புன்னைநீராவி விசுவமடு.

## சின்னச் சின்னச் செய்தி

1. அவுஸ்திரேலியாவில் 'பித்தா' என ஒரு பறவை இனம் உள்ளது. இது ஒன்பது நிறங்கள் கொண்டது.
2. தூசும்பு இல்லாத நாடு பிரான்ஸ்.
3. பாம்புகளே இல்லாத தீவு ஹவாய்த்தீவு.



4. அமெரிக்காவில் ஒரு பறவை இருக்கிறது. பிரிட்டன் என அழைக்கப்படும் இந்தப் பறவையின் குரல் சிங்கத்தின் கர்ஜனையைப் போல் இருக்கும்.

## விஞ்ஞான விளக்கம்

1. அதிக உணவு உண்டவுடன் இடதுபக்கம் சரிந்து படுப்பது நல்லது.

*எமது உடலின் வயிற்றறையில் இடது பக்கத்தில் இரைப்பை உள்ளது.

* இரைப்பை நிறைய உணவு இருப்பதால் வலதுப்பக்கம் திரும்பிப் படுத்தால் இரைப்பை, மற்றைய அங்கங்களை அழுத்தும். இதனால் எமக்கு அசௌகரியமாக இருக்கும்.

* இடது பக்கமாக சரிந்த படுத்திருப்பதால் இரைப்பை அழுந்தாது. இதனால் அவ்வாறு படுப்பது வசதியும், நல்லதும் ஆகும்.

கார்த்திகா மாயன், தரம் 11,
கிளி/உருத்திரபுரம் ம.வி.

## முக்கிய விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள்

1. ஆகாயவிமானம் –
1903, ரைட் சகோதரர்கள் அமெரிக்கா.
2. டீசல் இயந்திரம் –
1893, டீசல், ஜேர்மனி.
3. நீராவி இயந்திரம் –
உவாட், இங்கிலாந்து.
4. தொலைபேசி –
1876, பெல், அமெரிக்கா.
5. தொலைக்காட்சி –
1926, பயார்ட், இங்கிலாந்து.
6. தொலைநோக்கி –
1591, கலிலியோ, இத்தாலி.
7. கம்பி இல்லாத் தொலைபேசி –
1892, மார்க்கோனி, இத்தாலி.
8. கார்ப்பரேட்டர் –
1892, டூவில், அமெரிக்கா.
9. சினிமாக்கருவி –
1893, எடிசன், அமெரிக்கா.
10. போட்டோபிலிம் –
1888, ஈஸ்ட்மன், அமெரிக்கா.

ஜெ.சஜிதா, தரம் 11,
கிளி/கனகாம்பிகைகுளம் அ.த.க.பா.

## தெரிந்து கொள்ளுங்கள்

1. உலகப் புகைத்தல் ஒழிப்புத் தினம்?
மே மாதம் 3ஆம் திகதி.
2. சாரணர் தினம்?
பெப்ரவரி 22.
3. வாளேந்திய சிங்கக்கொடி தேசியக் கொடியாகப் பிரகடனம் செய்யப்பட்ட ஆண்டு?
1951.
4. ரூபவாஹினியில் கல்விச்சேவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?
1986.
5. மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?
1950.
6. மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?
1961.
7. தேசிய சேமிப்பு வங்கி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?
1972.
8. தேசிய அடையாள அட்டை வழங்கும் முறை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?
1972.

க.பிரணவன், தரம் 9, யா/அருணோதயக் கல்லூரி,
அளவெட்டி.

திருகோணமலையில்... சுடர்ஒளி உதயன் விளம்பரபணிமனை

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-

விளம்பர முகாமையாளர் 'உதயன்' 'சுடர் ஒளி' விளம்பரப்பிரிவு 85, ஜெயந்த மல்லி மாவத்தை, கொழும்பு - 14. 011 4734401 - 3, 011 2399566 - 70

திருகோணமலையில் தொடர்புகளுக்கான தொலைபேசி இலக்கம் 026 2220783, 026 2221670

# முதலாவது ஜனனதின வாழ்த்து

Priyankan

பிரியங்கன்



## 14.03.2005

லண்டனில் உள்ள இல 161, Norbury Avenue, Thornton Heath, Surrey, CR7 8AP எனும் முகவரியில் வசிக்கும் திரு. திருமதி. ரவிராஜ் தபோதினி தம்பதியரின் செல்வப் புதல்வன் செல்வன் ஆர். பிரியங்கன் இன்று (14.03.2005) தனது முதலாவது பிறந்த தினத்தை வெகு விமர்சையாக தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை பெற்றோர், அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், சித்தாமார், சித்திமார், மிதுஷா மச்சாள், சதுர்ஷன் மச்சான் மற்றும் உற்றார், உறவினர்கள் யாவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென பாண்டிருப்பு திரௌபதை அம்மன் அருள்வேண்டி வாழ்த்துகின்றனர்.


தகவல்: சுப்பிரமணியம் (அம்மப்பா),
அருள்ஞானம் (அம்மம்மா).

தொடர்புகளுக்கு: 0956113800 (ரவிராஜ் – லண்டன்)

# ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்

வாகனக் காப்புறுதி

அழையுங்கள்
(011) 2 357 357



உடனடி

சேத மதிப்பீடு

மற்றும்

பழுது பார்த்தலுக்கான

அனுமதி

இதற்கும் மேலாக

* 75% நஷ்டஈடு 24 மணிநேரத்திற்குள்
* பொலிஸ் அறிக்கை தேவையில்லை
* காப்புறுதி உங்கள் இல்லத்திற்கே வந்துசேரும்
* முழு நஷ்டஈடும் 3 நாட்களுக்குள் வழங்கப்படும்

ஸ்ரீ லங்கா இன்ஷுரன்ஸ்

# உண்மை ! இதை நம்புங்கள் !!

போலிகளை கண்டு ஏமாறாதீர்கள்



Orbitrac

~~ரூ. 13, 490~~
ரூ. 12, 500

இரண்டு வருட உத்தரவாத சான்றிதழ்



Total Gym

~~ரூ. 19, 900~~
ரூ. 17, 500

தொலைபேசி மூலம் உங்களுக்கு பொருட்களை 'ஓடர்' செய்து கொள்ளமுடியும்.



Abshaper

~~ரூ. 8, 950~~
ரூ. 7, 500

நீங்கள் கொள்வனவு செய்யும் பொருட்களுக்கு போக்குவரத்து இலவசம்...........



Abswing

~~ரூ. 8, 950~~
ரூ. 7, 500



Abking Pro

~~ரூ. 14, 900~~
ரூ. 12, 500

மேலதிக விபரங்களுக்கு.........

**TM Tele Marketing (Pvt) Ltd.**

CONSUMER ELECTRONICS

# 615, Negombo Road, Mabola, wattala.
T.Phone : 2947291/2, 4812960/70
Fax : 4812416
E-mail : telemark@dynaweb.lk Website : www.telemarketing srilanka.com
Branch :-
# 750, Negombo Road, Welisara. T.Phone : 2939342, 4819890
# 138, Royal Cinema Complex, Green's Road, Negombo.
T.Phone : 031 - 4872628

# ஆனந்த வாழ்வுக்கு... அழகியதொரு இல்லம்..!



இல 50, சங்கமித்த மாவத்தை, கொழும்பு 13 இல்

**SHANKER Residencies**

அனுபவம் மிக்க கைதேர்ந்த கட்டிடக்கலை நிபுணர்களால் நவயுகத்திற்கு ஏற்றவகையில் வடிவமைக்கப்பட்ட சொகுசு தொடர்மாடி இல்லங்கள்

உங்கள் தெரிவுக்கென
நான்கு மாதிரிகளைக் கொண்ட வீடுகள்

- Imported ceramic tile for floors
- Garden / Reception / Party Facilities in Roof Top.
- 3 Phase Electricity to all Units with Standby Genarator
- A/C Provision for Bedroom and Living Area.
- Windows made of Rust Proof Powder Coated Aluminium.
- Ceiling fans for each room.
- Optimal balance in lighting, Ventilation and privacy
- Reserved Car Park

MERCANTILE APARTMENT BUILDERS (PVT) LTD.
(A B.O.I. Approved Company)

332 யு, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு -10

தொ.பேசி (Office) 2430785, (Site) 2535713 பெக்ஸ்: 2433960

www.marcksapartment.com

# மலையகத்தில் மாற்றுத் தலைமையின் மயக்கம் தீரவேண்டும்

மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

மலையகத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு மாற்றீடாக ஒரு மாற்றுத் தலைமையாக எதிர்பார்க்கப்பட்டதும், வரவேற்கப்பட்டதும் மலையக மக்கள் முன்னணி.

விடுதலை வேட்கையும், புரட்சிகரமான எண்ணமும் கொண்ட சந்திரசேகரன் ஒரு விடிவெள்ளியாகவும்,வளரும் பூரண சந்திரனாகவும் மலையகத்துக்கு ஒளி கொடுப்பார். ஏமாற்றுக்காரர்களிடமும், சுரண்டல் பேர்வழிகளிடமும், சர்வாதிகாரிகளிடமும் இருந்து மலையக மக்களையும், மலையகத்தையும் காப்பாற்றுவார். நல்ல ஒரு மாற்றுத் தலைவராக வழிநடத்திச் செல்வார் என்ற நம்பிக்கையுடனேயே மலையகப் புத்திஜீவிகளும், இளைஞர் சமூகமும் அவருக்கு ஆதரவு வழங்கினர்.

ஆனால், இன்றைய நிலை என்ன? சந்திரசேகரன் மலையகத்தை மறந்துவிட்டார் போல் தெரிகிறது. தமக்கு வாக்களித்து வாழ்வளித்த மக்களையே மறந்துவிட்டார் என்ற குற்றச்சாட்டுகள் நாலா பக்கமிருந்தும் கிளம்ப ஆரம்பித்துவிட்டன. இது ஏன்? மலையகத்தில் என்ன நடக்கிறது என்பது கூட அவருக்குத் தெரியவில்லை. அவர் எந்த உலகத்தில் இருக்கிறார் என்பதே தெரியவில்லை என்றும் அங்கலாய்க்கின்றனர்.

மலையகத்தில் சந்திரசேகரனைக் காணவே முடிவதில்லை. தனிப்பட்ட முறையில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நெருங்கிய தொடர்பு உண்டு. அவர்களின் ஆதரவு உண்டு என்பதால் மட்டும் மலையகத்தில் தலைவராகிவிட முடியாது.

வன்னியில் தமிழீழத் தலைவரைச் சந்தித்தார். தமிழ்ச் செல்வனுடன் கலந்துரையாடினார். நிவாரணப் பொருட்களுடன் முல்லைத்தீவு சென்றார். பொங்கு தமிழ் விழாவில் வீர முழக்கம் இட்டார். கௌசல்யனின் இறுதியாத்திரையில் கலந்துகொண்டார். என்ற செய்தியும், படங்களும் ஊடகங்களிலும், பத்திரிகைகளிலும் வெளிவரும்போது பெருமையாகத்தான் இருக்கிறது.

அடுத்ததாக லண்டன் தமிழ் நெஞ்சங்களுடன் சந்திரசேகரன், கனடாத் தமிழ் உறவுகளுடன் சந்திரசேகரன், தாயக பூமியில் தலைவர்களுடன் சந்திரசேகரன் என செய்திகளும், படங்களும் வெளி வருவதும் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது.

அதேவேளை மலையகத்தில் என்ன நடக்கின்றது, இவரது அமைப்பு எப்படி இருக்கின்றது, இவரை நம்பிய தொழிற்சங்கம், அதில் அங்கம் வகிக்கும் தொழிலாளர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதை இவர் அவதானிக்கின்றாரா?

இவரது அமைப்பில் இவரைச் சுற்றி இருப்பவர்களில் எத்தனை பேர் மலையக மக்கள் முன்னணிக்கு விசுவாசமாக இருக்கின்றனர், எத்தனை பேர் தலைமையை மதித்து நடக்கின்றனர் என்ற விவரத்தை யாவது இவர் அறிவாரா?

தன்னைச் சுற்றியுள்ள ஒருசிலர்தான் மலையகம் என்றும், அவர்கள் கூறுவதுதான் உண்மைநிலை என்றும் ஏற்றுக்கொள்ளக் கூடாது.

தலைவர் சந்திரசேகரனைச் சுற்றி இரும்பு வேலி போடப்பட்டுள்ளது. சில கடிநாய்கள் அவிழ்த்துவிடப்பட்டுள்ளன. இதனால் சந்திரசேகரனிடம் மனம் விட்டுப்பேச வேண்டும், உண்மை நிலையை எடுத்துக்கூற வேண்டும் என்று வருபவர்களும் எதையும் பேச முடியாமல் சுகம் விசாரித்துவிட்டுச் சென்றுவிடுகின்றனர். நெருக்கம் படிப்படியாக தூர விலகிச் செல்கின்றது. அதை தடுப்பது எப்படி?

மே தினத்திலும், பொதுக் கூட்டங்களிலும் மட்டும் மக்களைச் சந்தித்துவிட்டால் போதாது. மக்களை நெருங்க வேண்டும். அவர்களின் அன்றாடப்பிரச்சினைகளை அலசி ஆராய வேண்டும், அவற்றுக்குப் பரிகாரம் காண ஆலோசனைகளை நடத்த வேண்டும். இளைஞர் சமுதாயத்தை அரவணைக்க வேண்டும். அவர்களைத் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்த வேண்டும்.

மலையகத்தில் மிகப் பலம் கொண்டதாகக் கருதப்படும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இன்று அதன் தலைமை மேற்கொள்ளும் அரசியல் நடவடிக்கைகளினாலும், பட்டம் பதவிகளுக்காக அடிக்கும் பல்டிகளினாலும், உறுதியற்ற கொள்கையினாலும், பச்சோந்திகள் போல் முன்னுக்குப்பின் முரணான போக்குகளினாலும் செல்வாக்கை இழந்து வருகின்றது. அதனைக் கண்டித்தும், விமர்சித்தும் போஸ்ட்டர்களை ஒட்டும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இனத்தையே காட்டிக்கொடுக்கும் அரசியல் காய்நகர்த்தல்களினாலும் இன்று இ.தொ.காவையே மக்கள் வெறுத்து ஒதுக்கும் நிலைக்கு வந்துவிட்டனர். இப்படியான நிலை சந்திரசேகரனுக்கும் ஏற்பட வேண்டுமா?

அதனைத் தடுப்பதற்கு ஒரே வழி; முதலில் தனக்குத் தெரியாமலே தன்னைச்சுற்றி அமைக்கப்பட்டுள்ள இரும்பு வேலியை உடைத்து எறிய வேண்டும்.

சந்திரசேகரனை அடகுவைத்து ஆதாயம் தேடும் ஆலோசகர்களைத் தூக்கி எறிய வேண்டும். முன்புதான் அமைச்சராக இருந்தார். பல பொறுப்புகளும், கடமைகளும் இருந்தன. கட்சி வேலைகளைக் கவனிக்க முடியவில்லை.

ஆனால், இன்று அப்படி இல்லையே? முழு மூச்சாகக் கட்சியைக் கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பு தலைமேல் சுமத்தப்பட்டுள்ளது.

சந்திரசேகரன் மலையகத்தை மறந்துவிட்டார் என்ற நிலையை மாற்றி அமைக்க வேண்டும். மலையகத்தில் உள்ள அனைத்து காரியாலயங்களுக்கும் செல்ல வேண்டும். அப்பிரதேசத்தில் உள்ள இளைஞர்களையும், மக்களையும் சந்திக்க வேண்டும்.

நேரடியாகமக்கள் முன் செல்ல வேண்டும், மக்கள் மனதைக் கவர வேண்டும். மீண்டும் மக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும். அப்பொழுதுதான் மலையக மக்கள் எதிர்பார்த்த மாற்றுத் தலைமையாக வர முடியும். இதைவிட்டுத் தொடர்ந்தும் ஒரு வட்டத்துக்குள்ளேயே இருப்பாரேயானால் சந்திரசேகரனைச் சுற்றி இருப்பவர்களே சந்திரசேகரனை விழுங்கி ஏப்பம் விட்டு விடுவார்கள்.

## மூன்றாவது சக்தி மேலும் பலம் பெறுகின்றது

மலையகம் விழித்துக்கொண்டது. புத்திஜீவிகளும் முற்போக்குவாதிகளும் இணைந்துவிட்டனர். இதனால் மூன்றாவது சக்தி மேலும் பலம்பெற்று ஊக்கமுடன் செயற்பட ஆரம்பித்துவிட்டது.

மூளைசாலிகளையும், முற்போக்கு வாதிகளையும் ஒன்றிணைத்து சி.வே.இராமையா மூன்றாவது சக்திக்கு உறுதியான அத்திவாரத்தை இட்டார்.

அதேவேளை அட்டனில் இராஜன் தேவசிகாமணி போன்றோர் இதேபோன்று ஒரு அமைப்பை உருவாக்கினர்.

இந்த இரு அமைப்புகளும் ஏககாலத்தில் வெளிப்பட்டன.

என்னடா இது? காலம் காலமாக தொழிற்சங்கவாதிகள் தான் மலையகத்தைக் கூறு போட்டுச் சிதைத்தார்கள், இன்று இந்த புத்திஜீவிகளும் அதேபாணியில் ஆள்கட்ட ஆரம்பித்துவிட்டார்களோ என்ற ஆதங்கம் ஏற்பட்டது. அதுவும் பற்றுள்ளவர்களுக்கு ஏற்படும் ஆதங்கம்தானே! அது நியாயமானது.

இந்த ஆதங்கம் அவசியமற்றதாகிவிட்டது. அமைப்புகள் இரண்டாக இருந்தாலும் நோக்கமும், கொள்கையும், இலட்சியமும் அடிப்படை சித்தாந்தத்தில் ஒன்றாகவே இருந்தன.

இதனால் கருத்தால், கொள்கையால் ஒன்றுபட்ட இரு அமைப்புகளும் சங்கமமாகி விட்டன. இந்த இரு அமைப்புகளின் உயர்மட்டத் தலைவர்கள் கொழும்பு சுகததாஸ ஸ்போட் ஹோட்டலில் சந்தித்து மனம்விட்டுப்பேசி இணக்கப்பாட்டுடன் செயற்பட உறுதிபூண்டு விட்டனர். இதைக் கேட்கவும் அறியவும் சந்தோஷமாக இருக்கின்றது.

மலையகம் பகுத்தறிவுப் பாதையில் முதலாவது அடியை எடுத்து வைத்துவிட்டது. தாங்கிக் கொண்டும், தமது சக்தியைத் தாமே அறியாமலும் இலைமறை காய்கள் போல் இருந்த இளைய சமுதாயத்தை தட்டி எழுப்பிவிட்டது இந்த மூன்றாவது சக்தி. இன்னும் சில வாரங்களில் ஊவா, சப்பிரகமுவ பிரதேசங்களும் ஒன்றிணைக்கப்பட்டு உறுதியுடன் செயற்படவிருப்பதாக முற்போக்கு எழுத்தாளரும் புரட்சிவாதியுமான சி.வே.ரா. கூறுகின்றார்.

– இராசிகா –

# தலைவர் புகழ் பாடினால் தலைவியாகலாம்

மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

தணிகாசலம் அண்ணன் நறபணிமன்றத்தின் முன் நின்று யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். சொல்லி வைத்தால் போல் திலகாவும், புனிதாவும் வந்து இறங்கினார்கள். அவர்களுடன் திலகாவின் அப்பாவும் உடன்வந்தார்.

''குட்மோர்னிங் அண்ணே!'' என்று திலகாவும் புனிதாவும் தணி அண்ணனுக்கு மரியாதை செலுத்தினர்.

''வணக்கம், வணக்கம் என்ன இரண்டு பேரும் தமிழை மறந்து விட்டீர்களோ!''

''ஐயோ கடவுளே! அப்படி எல்லாம் ஒன்றும் இல்லைங்க அண்ணே! ஒருவாரமா செமினார் தனி ஆங்கிலத்திலேயே நடந்தது. வந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள் எல்லோரும் தெட்டத்தெளிவாக ஆங்கிலத்திலேயே உரையாடினார்கள். அந்த பழக்கதோஷம்தான் குட்மோர்னிங் என்று கூறினோம்'' என்று இழுத்தாள் திலகா.

''என்ன திலகா இதற்குப் போய் கவலைப் படுறீங்க. நான் ஒரு தமாஷுக்காகச் சொன்னேன். டோன்ட்வொரி கம்ருதசப்ஜெக்ட்'' என்றார் தணி அண்ணன். எல்லோரும் சிரித்துவிட்டனர்.

''எனக்கு ரொம்பச் சந்தோஷம். நம்பிள்ளைகள் எல்லோரும் இப்படித்தான் வெவரமா இருக்கணும். உலகத்தைப்பற்றி தெரிந்து கொள்ளணும். இப்ப சொல்லுங்க; நீங்க போன செமினார் எப்படி இருந்தது?''

''ரொம்ப நல்லா இருந்திச்சிங்க அண்ணே! வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுதான் இந்த சர்வதேச மகளிர் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது. 19 நாடுகளில் இருந்து பலர் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட ஒவ்வொருவரும் தத்தமது நாடுகள் மகளிர் அபிவிருத்திக்காக என்ன என்ன செய்துள்ளன எதிர்காலத்திட்டங்கள் எனன என்று அழகாகக் கூறினார்கள்.''

''அப்படீன்னா நமது இலங்கையின் சார்பாகவும் சில மங்கையர்கள் வந்து இருப்பார்கள் தானே! அப்போ இவர்களும் தமது மலையக மக்களின் நிலைப்பாடுகள், எதிர்காலத்திட்டங்கள் தொடர்பாகக் கூறி இருப்பார்கள் தானே?''

''அந்த வயித்தெரிச்சலை ஏங்கண்ணே கேட்குறீங்க. மலையகத்தில் பிரபல தொழிற்சங்கம் என்று கூறிக்கொள்ளும் ஒரு சங்கத்தின் மாதர் அணிப் பணிப்பாளர் என்றும், தலைவி என்றும் இரண்டு பேர் கலந்து கொண்டாங்க.''

''ரொம்ப நல்லா இருக்கு. வந்தவங்க நமது பெண்களின் நிலைபற்றி கூறி இருப்பாங்க இல்லையா?''

''அண்ணே தயவு செய்து மன்னிக்கனும். இவுங்க எதைப்பத்தியுமே சொல்லவில்லை. காரணம் என்னவென்றால் இவுங்களுக்கு அந்தக் கருத்தரங்கப் பத்தியே



ஒன்னும் தெரியவில்லை. ஆங்கில மொழி அறவே தெரியல.''

''என்ன கோகிலா அப்படிச் சொல்லுறீங்க? பிரபல தொழிற்சங்கம், அதன் பிரதிநிதிகள் என்டு விசயம் தெரியாத கூழ் முட்டைகளையா அனுப்பி இருப்பாங்க?''

''சரியாச் சொன்னீங்க அண்ணே! அட்டனில் இருந்து ஒரு பச்சை கூழ்முட்டையைத் தான் அனுப்பி இருந்தார்கள். அது பேச ஆரம்பித்தவுடன் ஒரே நாத்தம் அடிக்க ஆரம்பித்துவிட்டது.''

''அப்படி என்ன கோகிலா அந்த டிரைக்டர் அம்மா சொல்லிப்புட்டாங்க?''

''கொஞ்சம் அமைதியா கேளுங்க அண்ணே! எங்க தலைவர் எங்களுக்கு பிரஜா உரிமை வாங்கித் தந்தார். ஓட்டு உரிமை வாங்கித்தந்தார் என்று பழைய புராணம் பாட ஆரம்பித்துவிட்டனர். அங்கே வந்திருந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பிரஜா உரிமை என்றால் என்ன, அது எல்லோருக்கும் உரியது தானே! அதை என்ன புதுமையாக வாங்கிக் கொடுத்து விட்டார்கள் என்று தலையை உடைக்க ஆரம்பித்து விட்டார்கள்.'

''பாவம் இந்த தலைவிமார் என்னஅம்மா செய்வார்கள்? தலைவர்கள் வரும்போது கொழுந்து மாலை கட்டிப்போடவும். பாட்டனின் புகழ்பாடவும் தானே படிச்சி வைத்துள்ளனர். அந்தப் பாடத்தைச் சர்வதேசக் கருத்தரங்கிலும். ஒப்பித்து விட்டார்கள்.''

''என்னங்க அண்ணே செய்வது கால் பிடிக்கவும் கைபிடிக்கவும் தானே பெண் பிள்ளைகளைத் தயார் செய்து வைத்துள்ளனர். அவர்களுக்கு எப்படி சர்வதேச மட்டத்தில் திட்டங்களைச் சமர்ப்பிக்க முடியும்.''

''சரியாகச் சொன்னாய் கோகிலா. எனக்கு இப்ப ஒரு சங்கதி ஞாபகத்துக்கு வருது. அதாவது சம்பள உயர்வு தொடர்பான பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருந்த சமயம். கோட்டும் சூட்டுமாக பைல் கட்டுடன் பெருந்தலைவரின் அறைக்குள் நுழைந்தாராம் புரட்சி மணி. அங்கே நாவலப்பிட்டி தபால் காரரின் மைந்தன் ஜூண்டா ஜட்டியுடன் தலைவருக்கு கால் பிடித்து விட்டுக் கொண்டிருந்தாராம். புரட்சி மணியைப் பார்த்து என்ன விடயம் என்று கேட்டாராம். சார் இன்று சம்பள உயர்வு தொடர்பாக இறுதிப் பேச்சு நடைபெறுகின்றது. அதற்குப் போகவேண்டும் என்றாராம். அப்படியா அதைப்பற்றி மறந்துவிட்டேன். சரி சரி நீங்கள் போகின்றீர்கள் தானே. அதோ அங்கே கிடக்கும் கென்வேஸ் செருப்பை எடுத்து தாருங்கள் என்றாராம் தலைவர்.

பாவம் என்ன செய்வது நாயாக வேசம் போட்டால் குரைத்துத்தானே ஆகவேண்டும். இந்த புரட்சி மணியும் அந்த கோட் சூட்டை எல்லாம் போட்டுக் கொண்டு செருப்பை எடுத்துத் தலைவரிடம் கொடுத்துவிட்டு, பைல் கட்டுடன் கிளம்பிவிட்டாராம். அன்று கைகால் பிடித்தவர் இன்று பதுளைக்கு மந்திரியாகிவிட்டாராம்.''

அப்படீன்னா சாவதேச மகளிர் கருத்தரங்கில் கலந்து கொண்ட கூழ்முட்டைகளும் நாளைகது அட்டனில் மந்திரியாகி விடலாம் என்றுதான் தலைவர்கள் புராணம் பாட ஆரம்பித்துவிட்டார்களோ. பாவம் இந்த பதிவிரதைகளை ஆண்டவன் தான் காப்பாற்ற வேண்டும்.''

# நம்பிக்கையை ஏற்படுத்திய.....

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் முறையிட்டு தனது பலமான ஆட்சேபனையை ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் அரசியல் தலைவர்களை ஓரங்கட்டச் செய்வதற்கான ஒரு சதி முயற்சியாகவே கொக்கட்டிச்சோலைச் சந்திப்பு அமைந்திருக்கிறது எனவும் அவர் விசனம் தெரிவித்துள்ளார். சமாதான முயற்சிகளில் முஸ்லிம் சமூகத்தின் சார்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரசன்னத்தை இல்லாதொழிக்கும் ஒரு நடவடிக்கையே சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான சந்திப்பு என்கின்ற அச்சத்தையும் ரவூப் ஹக்கீம் வெளியிட்டுள்ளார்.

மு.கா.தலைவர் ஹக்கீமின் கண்டனம் – ஆட்சேபனை–அச்சம் என்பவற்றில் எந்தளவுக்கு நியாயம் இருக்கிறதோ இல்லையோ, அவை தொடர்பாக நாம் கருத்துச் சொல்வதை விட முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் எம்.சி.ஹஸனலியின் நிலைப்பாட்டை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும்.

தமிழ் வார இதழ் ஒன்றுக்கு அவர் வழங்கிய விசேட பேட்டியில், முஸ்லிம் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் பேச்சு நடத்தியமை மிகவும் வரவேற்புக்குரிய ஒரு விடயம் எனத் தெரிவித்துள்ளார்.தமிழ்–முஸ்லிம் சமூகங்களிடையேயான முரண்பாடுகளைக் களைந்து ஒற்றுமையான சூழ்நிலை ஒன்றை மீளக் கட்டியெழுப்புவதற்காக இவ்வாறான சந்திப்புகளும் பேச்சுகளும் பெரிதும் உதவும் எனவும் செயலாளர் நாயகம் ஹஸனலி உறுதியாகக் கூறியுள்ளார்.

''பள்ளிவாசல் தலைவர்களோடு தமிழ்ச் செல்வன் நடத்திய கலந்தரையாடல் மிகவும் வரவேற்கத்தக்கது. ஏனென்றால் அவர்கள் மக்களுடன் மிகவும் நெருங்கிச் செயற்பட்டு வருபவர்கள்.இந்த முயற்சிகள் மேலும் விஸ்தரிக்கப்பட வேண்டும்.'' என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமின் புலம்பல்களுக்கு அக்கட்சியின் செயலாளர் நாயகமின் கருத்துகளில் போதுமான பதில்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. எவ்வாறாயினும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதான முயற்சிகளில் – அமைதி வழிப் பேச்சுக்களில் தமிழரின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப்புலிகள், முஸ்லிம்களின் அதிகபட்ச ஆதரவைப் பெற்றிருக்கின்ற முஸ்லிம் காங்கிரஸை அரவணைத்துச் செல்ல வேண்டும் என்கின்ற யதார்த்தத்தையும் புறந்தள்ளி விட முடியாது. எனவே முஸ்லிம் அரசியல் தலைவர்களுடனும் புலிகள் பேச்சு நடத்த முன்வர வேண்டும். இல்லாவிட்டால் தமிழ் – முஸ்லிம் ஒன்றிணைவுக்கான வேலைத்திட்டம் முழுமை பெறமாட்டாது.

இது இவ்வாறிருக்க அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனப் பிரதிநிதிகளுடன் கடந்த 26ஆம் திகதி நோர்வே விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் நடத்திய சந்திப்பின்போது அவர் வெளியிட்ட கருத்துகள் முஸ்லிம் மக்களிடையே கடும் சீற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம் சமூகம் ஒரு தனித்தரப்பாகப் பங்குபற்ற வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பில் அரசும்,புலிகளும்தான் இறுதி முடிவு எடுக்க வேண்டும் எனத் தெரிவித்து எரிக் சொல்ஹெய்ம் கை விரித்துவிட்டார். இவ்விவகாரத்தில் நோர்வேயின் சமாதான அனுசரணைக் குழுவினருக்கு எவ்விதப் பொறுப்பும் கிடையாது என்பது போல அவர் வெளியிட்ட அறிவிப்பு குறித்து முஸ்லிம் மக்கள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மூன்று வருடகாலமாக முஸ்லிம் தணித்தரப்புக்கான கோரிக்கை வலியுறுத்தப்பட்டு வருகிறது. நோர்வேயின் முன்னிலையில் சர்வதேச சமூகத்தினர் பங்குபற்றிய மாநாடுகளில் எல்லாம் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட ஒரு விடயத்தை – தமக்கு எவ்வித சம்மந்தமும் இல்லாது ஒரு விவகாரம் போன்று நோர்வே புறந்தள்ள முற்படுவது போன்று இருப்பதாக முஸ்லிம் மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

# காங்கிரஸைப் பணியவைத்த.....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் ஜார்கண்ட் மாநிலத்தில் 81 இடங்களில் 41 எம்.எல்.ஏக்கள் ஆதரவு பெற்ற பி.ஜே.பி. கூட்டணியை விட்டுவிட்டு காங்கிரஸ் அணியை ஆட்சியை அமைக்க அழைத்ததால் அங்குள்ள ஆளுநர் பெரும் சர்ச்சையில் மாட்டியுள்ளார்.

81 பேரில் 41 பேர் தனக்கு ஆதரவு எனக்காட்ட பி.ஜே.பி இந்த 41பேரையும் நேரில் ஜனாதிபதியிடம் அழைத்துச் சென்றதும் இதையடுத்து ஆளுநரை விளக்கமளிக்க டில்லிக்கு அவசரமாக ஜனாதிபதி அழைத்ததும் மத்தியில் காங்கிரஸ் அரசுக்கு நெருக்கடியைத் தந்துள்ளது. பெரும்பாலும் அமைக்கப்பட்ட காங்கிரஸ் அணி அரசு நீக்கப்பட்டு பி.ஜே.பி அணி அரசு மீண்டும் பதவி ஏற்கலாம் என தெரிகிறது.

தேர்தல் நடந்த மற்றைய முக்கிய மாநிலமான பீகாரில் எந்த அணிக்கும் அறுதிப்பெரும்பான்மை இல்லாததாலும் முக்கிய கட்சியாக உருவாகியுள்ள ராம் விலாஸ் பாஸ்வான் எந்த அணிக்கும் ஆதரவு தராததாலும் ஜனாதிபதி ஆட்சியை அம்மாநில ஆளுநர் அறிவித்துள்ளார். இதனால் 15 வருடமாகப் பீகாரைத் தொடர்ந்து ஆண்ட லல்லு பிரசாத் யாதவின் கட்சி இப்போது பதவியை இழக்கிறது. எனினும் மத்திய அரசில் லல்லு அமைச்சர் என்பதால் ஜனாதிபதி ஆட்சியின் கீழும் மாநிலத்தில் அவரது தலையீடு ஓரளவு இருக்கவே செய்யும்.

# ராசி பலன்

**இவ்வார 'ராசிபலன்' 14 –03–2005 , 20 –03–2005**

**பொ. சந்திரன்**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1,8) உரிய செவ்வாய் 10இல் உச்சமாக இருப்பதால் மத்திமபலனைக் கொடுக்கும். மேலும் சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பதால் நல்ல பலனைச் செய்யலாம். தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைக் கொடுக்கும். முன்பு இழந்த பொருளை மீட்கமுடியும். (2,7) உரிய சுக்கிரன் 11இல் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி இருக்கும். நாலாம் வீடு செவ்வாய். சுக்கிரன் ஆகிய கிரகங்களின் பார்வை படுவதால் வாகன சுகம் இருக்காது. தாய்க்கு சமசுகம் உண்டு. (10,11) உரிய சனி மூன்றில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். முதலீடுகளால் லாபம் உண்டு. (9,12) உரிய குரு மறைவதால் பிதாவுக்குக் கூடாது. சயன சுகம் குறையலாம்.

**இடபம் :கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் 10இல் பலன் இல்லை. மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பதால் பலன் குறைவு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் உண்டு. பகை விலகும். (2,5) உரிய புதன் 11இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். நாலுக்குரிய சூரியன் 11இல் இருப்பது நல்லது. வாகன சுகம் உண்டு. தாய்நலம், (7,12) உரிய செவ்வாய் 9இல் உச்சமாக இருப்பினும் பலன் செய்யாது. திருமணவாய்ப்புத் தாமதமாகலாம் சயன சுகம் குறையலாம். (9,10) உரிய சனி இரண்டில் இருப்பது கூடாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. பிதாவுக்கு நல்ல பலன் இல்லை. இருப்பினும் குருவின் இருப்பும் ராசியைப் பார்ப்பதும் நல்லது.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 10இல் இருப்பது கூடாது. இருப்பினும் சனியின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகும். வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. இரண்டாம் இடத்தை ஒரு சுபக்கிரகமும் ஒரு அசுபகிரகமும் பார்ப்பதால் பணம் வரும் செலவாகும். (7,10) உரிய குரு நாலில் இருப்பது தோசம். மேலும் இவ்விரு ராசிகளையும் சனி ராசியில் இருந்து பார்ப்பது கூடாது. திருமணவாய்ப்பு தடைப்படும். தொழில்துறை பாதிப்படையலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. (6,11) உரிய செவ்வாய் 8இல் இருப்பது பகை விலகும். நோய்மாறும் மூத்த சகோதரத்துக்குக் கூடாது. நண்பர்களால் தொல்லை வரலாம். சனி, குரு வழிபாடு ஆறுதல் தரும்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் 10,11, 12ஆம் ராசிகளில் சஞ்சரிப்பார் 12ஆம் ராசியைத் தவிர மற்றைய ராசிகளில் நல்ல பலனைச் செய்வார். தொடங்கும் காரியங்கள் நல்லபலனைச் செய்யும். பிரயாண வாய்ப்பு உண்டு. மன அமைதி இருக்கும். இரண்டுக்குரிய சூரியன் 9இல் பலன் செய்யாது. கையில் பணம் இருக்காது. (4,11) உரிய சுக்கிரன் 8இல் நல்ல பலனைச் செய்யும். தாய்நலம், வாகன சுகம் உண்டு. மூத்த சகோதரத்துக்கு நல்லது. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (5,10) உரிய செவ்வாய் 7இல் பலன் செய்யாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. குழந்தைகளின் செயல்பாடு திருப்தி தராது. (7,8) உரிய சனி 12இல் இருப்பதால் திருமணவாய்ப்புத் தாமதமாகலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்காது.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிநாதன் சூரியன் 8இல் புதனோடு இருப்பது நல்லது. மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பு. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். பிரயாணவாய்ப்பு உண்டு. மன ஒருமைப்பாடு இருக்கும். (2,11) உரிய புதன் 8இல் சூரியனோடு இருப்பது சிறப்பு. கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மூத்த சகோதரத்துக்கு நல்லது. நண்பர்கள் உதவி செய்வர். (3,10) உரிய சுக்கிரன் 7இல் இருப்பது கூடாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் கூடாது. (4,9) உரிய செவ்வாய் 6இல் இருப்பது விசேஷம். மாதா நலம், வாகன சுகம் உண்டு. பிதாநலம். (6,7) உரிய சனி 11இல் இருப்பது விசேஷம். திருமணபலன் உண்டு. பகைவிலகி நண்பர்களாகலாம். உடல் ஆரோக்கியம் உண்டு.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

( 1,10) உரிய புதன் 7இல் இருப்பது கூடாது. இருப்பினும் சனியின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. பிரயாண வாய்ப்பு உண்டு. (2,9) உரிய சுக்கிரன் 6 இல் இருப்பது பலன் செய்யாது. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கும் கூடாது. (4,7) உரிய குரு ராசியில் இருப்பது தோசம். மேலும் இவ்விரு வீடுகளையும் சனி பார்ப்பது கூடாது. தாய்க்கு கூடாது. வாகன சுகம் இருக்காது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. (5,6) உரிய சனி 10இல் இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. குழந்தைகளின் செயல்திறன் குறையலாம். பகைவிலகும்.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் ஐந்தில் இருப்பது விசேஷம். ஆனால், குருவின் நட்சத்திரத்தில் இருப்பதில் பலன் குறைவு. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். மன அமைதி இருக்கும். (2,7) உரிய செவ்வாய் நாலில் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. (4,5) உரிய சனி,9இல் பலன் செய்யாது. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டமாட்டார். 10ஆம் வீடு சுத்தமாக இருப்பதாலும் இரு கிரக பார்வை பெறுவதாலும் தொழில்துறை முன்னேறும். (9,12) உரிய புதன் 6இல் இருப்பதால் நல்ல பலன் செய்யும். பிதா நலம், சயன சுகம் உண்டு.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் மூன்றில் உச்சமாக இருப்பது விசேஷம், மேலும் சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பகை அடங்கும். (2,5) உரிய குரு 11இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (3,4) உரியசனி 8 இல் இருப்பது கூடாது. மாதாவுக்கு கூடாது. வாகன சுகம் இருக்காது. இளைய சகோதரத்துக்குக் கூடாது. (7,12) உரிய சுக்கிரன் 4இல் இருப்பது நல்லது. திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சயன சுகம் உண்டு. 10க்குரிய சூரியன் ஐந்தில் இருப்பது கூடாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 10இல் இருப்பது தோசமான நிலை. இருப்பினும் செவ்வாயின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமானாலும் நிறைவேறும். வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்லதல்ல. பிரயாணத் தடையுண்டு. (2,3) உரிய சனி 7இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் கூடாது. (7,10) உரிய புதன் நாலில் இருப்பது கூடாது. அத்துடன் சனியின் பார்வை படுவதும் கூடாது. திருமணவாய்ப்புத் தடைப்படலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. 7இல் சனி இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. ஒன்பதாம் வீட்டையும் ஒன்பதுக்குரிய சூரியனையும் சனி பார்ப்பதால் பிதாவுக்குக் கூடாதகாலம். இருப்பினும் குரு பார்வை பெறுவதால் தோசநிவர்த்தியுண்டு.

**மகரம்:உத்தராடம்2,3,4,.திருவோணம்,அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி 6இல் இருப்பது விசேஷம். மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். கையில் பணம் இருக்கும். பிரயாண வாய்ப்புண்டு. (4,11) உரிய செவ்வாய் ராசியில் இருப்பது தோசம். மாதாவுக்கு நல்ல பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. மூத்த சகோதரத்துக்குக் கூடாது. (5,10) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது நல்லது. தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். 7ஆம் வீடு சுத்தமாக இருப்பதும் குரு 9இல் இருப்பதும் நல்லது. திருமணவாய்ப்பு உண்டு. (6,9) உரிய புதன் மூன்றில் இருப்பது கூடாது. பிதாவுக்கு நல்லதல்ல. பகைவிலகும். உடல் ஆராக்கியம் உண்டு.

**இவ்வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| ராகு புதன் | | | சனி |
| சூரி சுக் | செவ் உத்தராடம் சூரியன்<br>சுக்கிரன் பூரட்டாதி குரு<br>புதன் உத்தரட்டாதி சனி<br>சூரியன் பூரட்டாதி குரு<br>குரு சித்திரை செவ்<br>சனி புனர்பூசம் குரு | | |
| | | | |
| செவ் | | | குரு கேது |

மாசி 16 முதல் மாசி 22 வரை

சந்திரன் துலாம் முதல் தனு வரை

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி ஐந்தில் இருப்பது கூடாது. இருப்பினும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். சயன சுகம் இருக்காது. (2,11) உரிய குரு 8இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. மூத்த சகோதரத்துக்குக் கூடாது. நண்பர்களால் பிரச்சினை வரவாய்ப்பு உள்ளது. (3,10) உரிய செவ்வாய் 12இல் இருப்பது கூடாது. தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. இளைய சகோதரத்துக்குக் கூடாது. (4,9) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பது நல்லது. பெற்றோர் நலம், வாகன சுகம் உண்டு. 7க்குரிய சூரியன் இரண்டில் இருப்பது கூடாது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 7இல் இருப்பது நல்லது. தோசம் இருப்பினும் நிவர்த்தியுண்டு. மேலும் செவ்வாயின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. (2,9) உரிய செவ்வாய் 11இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்லது. (4,7) உரிய புதன் ராசியில் இருப்பது கூடாது. வாகன சுகம் இருக்காது. மாதாவுக்கு நல்லதல்ல. திருமண வாய்ப்பு தாமதமானாலும் நிறைவேறும். குரு 7இல் இருப்பதால் தோச நிவர்த்தியுண்டு. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவரால் ஆபத்துண்டு.

பேக்கரி உற்பத்திகளை அதி உயர்ந்த தரத்திற்கு உயர்த்தக்கூடிய
Improver
டுவல் ஈஸ்ட்
ஐரோப்பாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பிப்பிங் பவுடர் உடன்கூடிய
தரத்தில் சிறந்தது. நம்பகத் தன்மைக்குப் பெயர்பெற்றது.
செயல் திறன் கூடியது
குறைந்த விலையில் எங்களிடம் கிடைக்கும்
நாடு முழுவதிலும் விற்பனை முகவர்கள் தேவை.
மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவு
இலவச மாதிரியைப் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளவும்
முர்தஸா பூ(f)ட்ஸ்
இல. 224, செய்சர் வீதி,
கொழும்பு - 11
Tel : 011 - 2323406
0773 - 205405



EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com





மீண்டும் புதுப் பொலிவுடன்......
உங்களின் இக்காலத் தெரிவுக்கு...
குமரகுரு
புடைவை அழகுப்பொருள் வாணிபம்
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை உள்ளடக்கிய திருமண மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுர சாறிகள், பட்டுச்சாறிகள், பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுன், சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள், சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்.
குமரகுரு புடைவை
அழகுப்பொருள் வாணிபம்
யாழ் சாலை, கிளிநொச்சி
KUMARAKURU
TEXTILE & FANCY HOUSE
Tel: 021 228 5971
Yarl Road, Kilinochchi.





மக்கள் வங்கியின் "வனிதா வாசனா மாதத்தில்"

உங்கள் பெறுமதியினை
இரட்டிப்பாக்குங்கள்

சர்வதேச மகளிர் தினத்தை கௌரவிக்கும் முகமாக, பெண்களின் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக மார்ச 8 முதல் ஏப்ரல் 8 வரையான காலப்பகுதியினை மக்கள் வங்கி "வனிதா வாசனா மாதமாக" பெயரிட்டுள்ளது.

இம்மாதத்தினுள் "வனிதா வாசனா இதுறும் பத்" ஒன்றை வாங்கி 2005 ஏப்ரல் 14 ஆம் திகதி புதுவருட கொடுக்கல்-வாங்கல் தினத்தில் நடைபெறும் சீட்டிழுப்பில் உங்கள் பெறுமதியினை இரட்டிப்பாக்கும் சந்தர்ப்பத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.

"வனிதா வாசனா இதுறும் பத்"களை ரூபா. 1,000/=, ரூ. 5,000/=, ரூ. 10,000/=, ரூ. 25,000/= என பல்வேறு பெறுமதிகளில் பெற்றுக் கொள்ள முடியும். மக்கள் வங்கிக் கிளைகளில், அடகு மற்றும் சேமிப்பு நிலையங்களில் மற்றும் சேவைப் பிரிவில் பெற்றுக் கொள்ளப்பட்ட ஒவ்வொரு 200 சான்றிதழ்களுக்கும் ஒரு வெற்றி சந்தர்ப்பம் கிடைப்பதுடன், மேலதிக ஒவ்வொரு 100 இதுறும் பத் சான்றிதழ்களுக்கும் இன்னுமொரு வெற்றி சந்தர்ப்பம் கிட்டும்.

மக்கள் வங்கி
வனிதா வாசனா
இதுறும் பத்



TRIAD 13842
மக்கள் வங்கி
2005 மார்சு 8 முதல் ஏப்ரல் 8 வரை "வனிதா வாசனா மாதமாகும்"

இப் பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, டொரிங்டன் பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள வான்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2005, மார்ச். 13, ஆம் திகதி வெளியிடப்பட்டது.